வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu வார மலர் ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 03.03.2024 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 63 பக்கங்கள் : 16




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer — மனிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.




07 இரட்டை இலை மீண்டும் முடக்கப்பட வாய்ப்புள்ளதா?



08 தேசிய மக்கள் சக்திக்கு எதிராக தீவிரமடையும் பிரசாரங்கள்!



09 எழுபத்தைந்தாவது ஆண்டில் மீண்டும் தொடக்கப் புள்ளியிலிருந்து...!



11 சிறுபிள்ளை வேளாண்மை போல் ஆகிவிட்டதா?

### போர் முடிந்து 15 வருடங்களாகியும்

# பாதிக்கப்பட்டோருக்கு நீதி கிடைக்கவில்லை!

## ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் கவலை

ஜெனிவா, மார்ச் 03

**இலங்கையின் அண்மைய பொருளாதார முன்னேற்றம், புதிய சட்டங்களால் இருட்டடிப்பு செய்யப்படுவதாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் ரூர்க் குறிப்பிட்டார்.**

**ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 55ஆவது கூட்டத்தொடரில் உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார்.**




இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த அரசாங்கம் முக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிலையில், அடிப்படை உரிமைகள், சட்டவாட்சி, ஜனநாயக ஆட்சி மீது நீண்டகால தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றமை தொடர்பில் கவலையடைவதாக வோல்கர் ரூர்க் தெரிவித்தார்.

நிகழ்நிலைக் காப்பு சட்டம், பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டமூலம், ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் சட்டமூலம், அரச சார்பற்ற நிறுவனங்கள் மீதான கண்காணிப்பு மற்றும் பதிவு தொடர்பான சட்டமூலம் என்பன இவற்றுள் உள்ளடங்கும் என அவர் கூறினார்.

இலங்கையில் 15

## சாந்தனின் பூதவுடல் மக்கள் அஞ்சலிக்கு!

யாழ்ப்பாணம், மார்ச் 03

யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்ட சாந்தன் புகழுடல் இன்று மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்படவுள்ளது.

இன்றைய தினத்தை தமிழ் தேசிய துக்க தினமாக அனுஷ்டிக்க பொது அமைப்புக்கள் ஒன்று கூடி தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ள குரலற்றவர்களின் குரல் அமைப்பின் இணைப்பாளர் முருகையா கோமகன், துக்க தினமான இன்று தேவையற்ற களி யாட்ட நிகழ்வுக்களை தவிர்த்து சாந்தனுக்கு அனை வரும் திரண்டுவந்து அஞ்சலி 15

## ஜனாதிபதி தேர்தலே முதலில் நடைபெறும்!

### உறுதிப்படுத்தியது ஐ.தே.க.

கொழும்பு, மார்ச் 03

முதலில் ஜனாதிபதி தேர்தலே நடத்தப்படும், இது நூறு வீதம் உறுதி என்று அடித்து கூறியுள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரான ஆசு மாரசிங்க.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக பொதுத்தேர்தல் நடத்தப்படும் என எதிரணிகள் அறிவித்துவரும் நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்துக்குள் 15

## வெடுக்குநாறிமலையில் சிவராத்திரி நீதிமன்றை நாடும் ஆலய நிர்வாகம்

வவுனியா, மார்ச் 03

வவுனியா வடக்கு, வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலய சிவராத்திரி பூஜை வழிபாடுகளின் போது மின்பிறப்பாக்கியைப் பயன்படுத்துவதற்கு ஆலய நிர்வாகத்தினர் சட்டத்தரணி ஊடாக வவுனியா நீதிமன்றத்திடம் அனுமதி கோரி மனுத் தாக்கல் செய்துள் ளனர்.

வவுனியா வடக்கு, ஒலுமடு வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலயத்தில் தொல்பொருட் சின்னங்களுக்கு சேதம் ஏற்படுத்தாத வகையில் பூஜை வழிபாடுகளில் ஈடுபட வவுனியா நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தது.

அதனடிப்படையில் அங்கு 15

## முருகன், ராபர்ட், ஜெயக்குமாருக்கு உண்மையான விடுதலை வழங்குக!

### எடப்பாடி பழனிசாமி கோரிக்கை

சென்னை, மார்ச் 03

திருச்சி முகாமில் தனிமைச் சிறையில் உள்ள முருகன், ராபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோர் அவர்கள் விரும்பும் நாடுகளுக்குச் செல்ல தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு, இந்திய வெளியுறவுத் துறையையும், திமுக அரசின் முதல்வரையும் அ.தி.மு.க பொதுச்செயலாளரும், முன்னாள் முதல்வருமான எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "32 ஆண்டு கால நீண்ட சிறைவாசத்திற்குப் பிறகு உச்ச நீதிமன்றத்தால் விடுதலை 15

## வெளிநாட்டுக் கடன்களை செலுத்தாவிட்டால் சிக்கல்

### அமைச்சர் பந்துல சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 03

வெளிநாட்டில் இருந்து பெற்ற கடன்களை உறுதி வழங்கியதன்படி செலுத்தாவிட்டால் இலங்கையை முன்னெடுத்துச் செல்லமுடியாது என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

வீதி திட்டமொன்றை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அரசாங்கத்தை பராமரிப்பதற்கும் போதிய வருமானம் தற்போது இல்லை. கடந்த 15

## வடக்குக்கு வருகிறார் அநுரகுமார

கொழும்பு, மார்ச் 03

தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திசாநாயக்க வடக்குக்கு விஜயம் செய்யவுள்ளார்.

எதிர்வரும் 16ஆம் திகதி கிளிநொச்சிக்கு முதலில் விஜயம் செய்யும் அவர் கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் மக்கள் சந்திப்பில் பங்கேற்கவுள்ளதோடு, அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் சிவில் அமைப்பின் பிரதிநிதிகளை சந்திக்கவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து அன்றைய தினம் பிற்பகலுக்குப் பின்னர் வவுனியாவில் நடை பெறும் மக்கள் சந்திப்பில் அவர் பங்கேற்கவுள்ளதோடு 15

## ஊழல்வாதிகளுக்கு பாதுகாப்பு!

### சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 03

தற்போதைய அரசாங்கத்தில் உள்ள பெரும்பாலானவர்கள் ஜனாதிபதியுடன் இணைந்து ஊழல்வாதிகளையே பாதுகாத்து வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத் திட்டத்தின் 113 ஆவது கட்டமாக 10 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், அம்பாந்தோட்டை, திஸ்ஸமஹாராம, பகுதியில் உள்ள பாடசாலைக்கு வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது கலந்துகொண்டு கருத்துரை அவர், நாட்டில் ஜனநாயகத்தின் 3 முக்கிய 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது

நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் யார் யாரெல்லாம் போட்டியிடுவார்கள் என்பது இதுவரை உறுதியாக தெரியாவிட்டாலும், ரணில்- சஜித்- அநுர என்ற மூன்று வேட்பாளர்களும் இப்போது தத்தமது தேர்தல் பிரசாரத்தை தொடங்கிவிட்டனர்.

சஜித்தையும் ரணில் தரப்பையும் ஓரணியாக போட்டியிடச் செய்வதில் வெளிச்சக்திகள் சில தொடர்ந்து முயற்சி செய்தாலும், அது இன்னமும் ஒரு முடிவுக்கு வந்ததாகத் தெரியவில்லை.

சஜித் தரப்பை உடைத்து, அங்கிருந்து பலமான சிலரை தன்னோடு சேர்த்துக்கொள்வதன் மூலம் அவரைப் பலவீனப்படுத்த ரணில் பல்வேறு காய்நகர்த்தல்களை செய்துகொண்டிருந்தாலும் அதுவும் ஒரு முடிவுக்கு வருவதாக தெரியவில்லை.

மறுபுறத்தில் சஜித் தரப்பிலிருந்து வெளியேறக்கூடியவர்கள் என்ற லிஸ்ட்டில் முக்கிய இடத்தில் இருப்பவர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா என்பதால், அவரது வெற்றிடத்தை படையின் முன்னாள் அதிகாரிகளைக் கொண்டே நிரம்பும் முயற்சியில் சஜித் தொடந்தும் ஈடுபட்டிருக்கிறார். கடைசியாக அவரோடு இணைந்திருப்பவர் லெப். கேணல் ரத்தினப்பிரிய பந்து. அவர் ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய ஐக்கியம் மற்றும் அமைதி ஆகியவற்றுக்கான குழுவின் தலைவராகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இராணுவ அதிகாரிகள் தேசிய ஐக்கியம், அமைதி என்பவற்றில் எத்தகையை பங்காற்றக்கூடியவர்கள் என்பது நமக்கு தெரியாததல்ல. ஆனால் சஜித் பிரேமதாச என்ன நினைத்துக்கொண்டிருக்கிறார் என்பதுதான் தெரியவில்லை. சரத் பொன்சேகாவின் வெற்றிடத்தை நிரப்புவதற்கு அவருக்கு பலரைத் தேடவேண்டியிருக்கின்றது என்பதை மட்டும் புரிந்துகொள்ள முடிகின்றது.

ரணில் தரப்பில் பிரசாரத்தை இதுவரை ஆரம்பித்திருப்பவர்கள் மகிந்தவின் முன்னாள் விசுவாசிகள் மட்டுமே. ஆனால் ரணிலின் ஐக்கிய தேசியக் கட்சி முழுவீச்சில் இன்னமும் பிரசாரத்தை ஆரம்பிக்கவில்லை. இதுவரை அவருக்காக பிரசாரத்தை தொடக்கியிருப்பவர்கள் மகிந்தவோடு இருந்து அரசியல் செய்துவிட்டு, வெளியே வந்த நிமல் லான்சா தலைமையிலான புதிய கூட்டணியினர்தான். அவர்கள் கூட தமது கூட்டணிக்கு புதிய கூட்டணி என்று குறிப்பிட்டிருக்கிறார்களே தவிர அதற்கு இன்னமும் உரிய பெயர்கூட வைக்கவில்லை.

ரணில் சுயேச்சை வேட்பாளராகவே போட்டியிடுவார் என்று அவர் மாத்திரமன்றி, அவரது கட்சியினரும் கூறிவருகின்ற போதிலும் அவரோடு இன்றுவரை அரசாங்கத்தில் ஆளுந்தரப்பாக இருக்கும் பொதுஜன பெரமுன இன்னமும் தனது உறுதியான முடிவை அறிவிக்கவில்லை. தமது கட்சியும் வேட்பாளரை நிறுத்தும் என்று அவர்கள் சொன்னாலும், யார் அந்த வேட்பாளர் என்பதை இதுவரை அறிவிக்கவில்லை.

கட்சிக்குள் இதுதொடர்பாக பல கருத்துக்கள் இருப்பதும் அதற்கு காரணமாக இருக்கலாம். சுயேச்சையாகப் போட்டியிடும் ரணிலின் முடிவை பொதுஜன பெரமுன எப்படி ரசிக்கின்றதோ தெரியவில்லை. ஆனால், அவர் தமது கட்சியின் சார்பில் போட்டியிடப்போவதில்லை என்பதை அறிந்துகொண்ட பின்னர் அந்தக் கட்சிக்குள் பல்வேறு கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன.

இன்று கட்சியில் எஞ்சியிருக்கும் எம்.பி.க்களில் பெரும்பாலானவர்கள் கட்சிக்கு ஐந்துலட்சமோ பத்து லட்சமோ வாக்குகள்தான் கிடைக்கும் என்றாலும் கூட, தமது தரப்பில் ஒரு வேட்பாளரை நிறுத்தவேண்டும் என்றும் இல்லையேல் அது எதிர்காலத்தில் தமது கட்சிக்கு பாதகமாக வந்துவிடும் என்றும் கருத்து தெரிவித்து வருகின்றனராம். இந்தக் கருத்தோடு அதிகம் உடன்படுபவராக நாமல் ராஜபக்ஷ இருப்பதுதான் கவனத்திற்குரியது.

தேவையெனில் தானே தேர்தலில் போட்டியிடவும் அவர் தயாராக இருப்பதாக அவரோடு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன. நாமலின் இந்த முடிவோடு மகிந்த உடன்படாவிட்டாலும், அதற்கு எதிர்வினையாற்றாமல் இருந்துவிட்டு, கடைசி நேரத்தில் ரணிலுக்கு வெளியிலிருந்து ஆதரவு வழங்கும் முடிவில் இருப்பதாக தெற்கு செய்தி ஒன்று தெரிவித்தது.

மகிந்த தரப்பு தன்னோடு இருப்பது, பலவழிகளிலும் இடையூறாக இருப்பதாக ரணில் உணர்ந்தாலும், அவர்கள் வசம் உள்ள சில இலட்சம் வாக்குகளை இழந்துவிடவும் அவர் விரும்பவில்லை. ஆனால் அவர்கள் தன்னோடு இருக்கும் வரை, சஜித் தரப்பிலிருந்து யாரும் வருவதற்கு முன்வரப்போவதில்லை என்பதையும் ரணில் உணர்ந்திருக்கிறாராம். அண்மையில் அவரைச் சந்தித்த பாட்டலி சம்பிக்க ரணவக்கவும் மகிந்த இல்லாத கூட்டணியிலேயே இடம்பெற தான் தயாராக இருப்பதாக அறிவித்ததும் இதனை மனதில் வைத்துத்தான் என்கின்றன தெற்கு செய்திகள்.

சஜித் - ரணில் ‘திருமணம்’ நடைபெற்றால், மகிந்த தரப்பினர் தனித்து ஒரு வேட்பாளரை களம்இறக்குவதும் தனக்கு சாதகமானது என்று ரணில் கணக்குப்போடுவதாகவும் ஒரு செய்தி உண்டு.

இன்று கிராமப்புறங்களிலேயே ஜே.வி.பி. கணிசமான ஆதரவு தளத்தைக் கொண்டிருக்கின்றது. அங்கேதான் இப்போதும் மகிந்தவுக்கென்று சில லட்சம் வாக்குகள் இருக்கின்றன. மகிந்த தரப்பு ஒரு வேட்பாளரை நிறுத்தாமல், ரணிலுக்கு வெளியிலிருந்து ஆதரவு வழங்கினாலும் அந்த வாக்காளர்கள் ரணிலுக்கு வாக்களிப்பார்களா என்பது கேள்விக்குரியதே. அத்தகைய நிலையில் அவர் கள் ஒரு வேட்பாளரை நிறுத்தினால் அந்த வாக்குகள் ஜே.வி.பிக்கு செல்வதைத் தடுக்கலாம் என்றும் அவர் கணக்குப்போடுகிறாராம்.

தேர்தல் என்பது இன்று கூட்டல் - கழித்தல் - கூட்டணியில்தான் தங்கியிருக்கின்றதோ?

**- ஊர்க்குருவி.**

# அரசியல் நாடக வேடம் முற்றாக கலைந்துவிட்டது

## அமைச்சர் டக்ளஸ் கூறுகிறார்

யாழ்ப்பாணம், மார்ச் 03

இலங்கையில் நீதி செத்துவிட்டது என போராட்டம் நடத்தியவர்கள், இன்று தமது உட்கட்சி பிரச்னைக்கு நீதி வேண்டி இலங்கை நீதிமன்றங்களையே நாடியுள்ளனர் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானாந்தா தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று அனுப்பி வைத்துள்ள செய்தி அறிக்கையிலேயே அவ்வாறு தெரிவித்தார்.

அந்த அறிக்கையில்,

இலங்கை அரசு தமிழருக்கு நீதியும் வழங்காது தீர்வும் தராது என்றவர்கள். இலங்கை நீதிமன்றங்களில் நம்பிக்கை இல்லை என்றவர்கள், முல்லைத்தீவு நீதிபதி நாட்டை விட்டுப் போனதை வைத்து இலங்கையில் நீதி செத்து விட்டதென்று மனிதச்சங்கிலிப் போராட்டம் நடத்தியவர்கள், எல்லாப் பிரச்சினைக்கும் சர்வதேச நீதி விசாரணையே தேவை என்றவர்கள், தமது உட்கட்சி விவகாரத்திற்கு தீர்வு கோரி இலங்கை நீதிமன்றத்தை நாடியுள்ளனர்.

தமிழ் மக்களின் பிரச்சினை என்றால் அது தீர்ந்து விடக்கூடாதென்று சர்வதேச நீதிமன்றத்திக்கும் போவோம் என்பார்கள், தமது பிரச்சினை என்றவுடன் அதை இலகுவாக தீர்க்கும் விருப்பத்தோடு இலங்கை நீதி மன்றத்தை நாடியுள்ளனர்.

இதிலிருந்து இவர்களது அரசியல் நாடக வேடம் முற்றாக கலைந்து விட்டது - என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# பலவீனமான வேட்பாளரை களமிறக்கினால் பொதுஜன பெரமுனவில் இருந்து விலகுவேன்

## கூறுகின்றார் பிரசன்ன ரணதுங்க



யாழ்ப்பாணம், மார்ச் 03

பொதுஜன பெரமுன ஜனாதிபதித் தேர்தலுக்கு பலவீனமான வேட்பாளரை களமிறக்கினால் கட்சியில் இருந்து விலகி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவேன். ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் தகைமை உள்ளவர் பொதுஜன பெரமுனவில் தற்போது இல்லை என வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், எமக்கும் அரசியல் கொள்கை ரீதியில் பாரியதொரு வேறுபாடுகள் காணப்படுகின்றன.

நாடு மிக மோசமான நெருக்கடிகளை எதிர்கொண்டிருந்த போது எதிர்கால அரசியல் பற்றி ஆராய்ந்து கொண்டு சோதிடம் பார்த்துக்கொண்டிருக்காமல் தனி மனிதனாக ரணில் விக்கிரமசிங்க பாரிய சவால்களை ஏற்றுக் கொண்டார்.

2022ஆம் ஆண்டை காட்டிலும் சமூக கட்டமைப்பு தற்போது மாற்றமடைந்துள்ளது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். வாழ்க்கை செலவுகள் அதிகரிப்பு என்ற குற்றச்சாட்டு மாத்திரம் முன்வைக்கப்படுகிறது என்பதை ஏற்றுக் கொள்கிறோம்.

பொருளாதாரம் ஸ்திரப்படுத்தப்பட்டுள்ளது. புத்தாண்டுக்கு முன்னர் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைவடையும்.

நாட்டையும்,நாட்டு மக்களையும் பொருளாதார நெருக்கடியில் இருந்து பாதுகாத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாட்டு மக்கள் கடமைப் பட்டுள்ளார்கள்.

அரசியலமைப்பின் பிரகாரம் எதிர்வரும் இந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும். பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராகவோ அல்லது பொதுவேட்பாளராகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க களமிறக்கப்பட வேண்டும் என்பதை பொதுஜன பெரமுனவிடம் வலியுறுத்தியுள்ளேன்.

பலவீனமான வேட்பாளரை ஜனாதிபதி வேட்பாளராக பொதுஜன பெரமுன களமிறக்கினால் கட்சியில் இருந்து விலகி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவேன் - என்றார். (அ)

# இறக்குமதி செலவு அதிகரிப்பு!

கொழும்பு, மார்ச் 03

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு ஜனவரியில் பொருட்களின் ஏற்றுமதி வருமானம் குறைந்துள்ளதாகவும், இறக்குமதி செலவு அதிகரித்துள்ளதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதன்படி, ஏற்றுமதி வருவாய் கடந்த ஆண்டு ஜனவரியுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு 0.8% சரிவை பதிவுசெய்துள்ளது.

கடந்த ஆண்டு ஜனவரியில், ஏற்றுமதி வருவாய் 978 மில்லியன் அமெரிக்க டொலர்களாகவும், இந்த ஆண்டு ஜனவரியில், 971 மில்லியன் அமெரிக்க டொலர்களாகவும் பதிவாகியுள்ளது.

விவசாய மற்றும் ஆடை ஏற்றுமதி வருமானத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியே இதற்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (அ)

# சு.க. புதிய கூட்டணி அடுத்த வாரம்!

கொழும்பு, மார்ச் 03

சுதந்திரக் கட்சியின் தலைமையிலான புதிய கூட்டணி அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் நேற்று முன் தினம் கூடிய போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து புதிய நிர்வாகிகள் நியமிக்கப்படுவார்கள் என்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துஸ்மந்த மித்ரபால தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் முன்னணி அரசியலமைப்பில் ஏற்கனவே திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ரஷ்ய போர்க்கப்பல் கொழும்பில்

கொழும்பு, மார்ச் 03

ரஷ்யாவின் கடற்படைக்கு சொந்தமான போர்க்கப்பல் ஒன்று உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

குறித்த கப்பலில் 529 பேர் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

இரண்டு நாட்டு கடற்படைக்கும் இடையிலான அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்கும் சில முக்கிய வேலைத்திட்டங்களில் அவர்கள் பங்கேற்கவுள்ளனர்.

கப்பலில் வருகை தந்தவர்கள் நாட்டின் பல முக்கிய இடங்களுக்கு செல்லவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கப்பல் தமது உத்தியோகபூர்வ விஜயத்தை நிறைவுசெய்து இன்று நாட்டை விட்டு வெளியேறவுள்ளது. (அ)

ஈழநாடு



# அரச ஊழியர்கள் எஜமான்கள் அல்லர் அவர்கள் பொதுமக்களின் சேவகர்கள்

## வடக்கு மாகாண ஆளுநர் மீண்டும் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், மார்ச் 03

மக்களின் வரிப்பணத்தில் மாதாந்தம் சம்பளம் பெறும் அரச ஊழியர்கள் எஜமான்கள் அல்லர். மக்களுக்கான சேவகர்கள் என வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்திலுள்ள 34 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான உத்தியோகபூர்வ இணையதளங்கள் நேற்று முன்தினம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டன. வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் கைதடியிலுள்ள பிரதம செயலாளர் அலுவலகத்தின் கேட்போர் கூடத்தில் இணையத்தளங்கத்ளை அங்குரார்ப்பணம் செய்தார்.

உள்ளூராட்சி நிறுவனங்களின் செயற்பாடுகளை புதிய தொழில்நுட்பத்தின் ஊடாக மக்கள் மயப்படுத்தும் நோக்குடன் புதிய இணையத்தளங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இந்நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.எம். சமன் பந்துலசேன, உள்ளூராட்சி ஆணையாளர் எஸ். பிரணவநாதன், உதவி ஆணையாளர்கள், செயலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இணையதள வடிவமைப்பில் ஈடுபட்ட உள்ளூராட்சி நிறுவனங்களில் பணிபுரியும் உத்தியோகஸ்தர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன் ஆளுநரால் பிரதம விருந்தினருக்கான உரை நிகழ்த்தப்பட்டது.

உள்ளூராட்சி நிறுவனங்கள் தங்களுக்கு காணப்படும் அதிகாரங்களுக்கு அமைய மக்களுக்கான சேவைகளை முன்னெடுக்க வேண்டும் என இதன்போது ஆளுநர் கூறினார்.

உள்ளூரில் காணப்படும் வளங்களை கொண்டு தங்களுக்கான வருமானங்களை உள்ளூராட்சி நிறுவனங்கள் திரட்டிக்கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார்.

தற்போது உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்படும் நிதி குறைக்கப்பட்டுள்ள நிலையில், தங்களின் தேவைகளுக்கு போதுமான நிதியை அந்தந்த சபைகளே திரட்டுதல் வேண்டும்.

இதேவேளை மக்களுடன் சிநேகமான முறையில் தங்களின் சேவைகளை வழங்க வேண்டும் எனவும் ஆளுநர் தெரிவித்தார். (அ)



# சாந்தனின் மறைவுக்கு பல்கலையில் கறுப்புக் கொடி

யாழ்ப்பாணம், மார்ச் 03

மறைந்த சாந்தனுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகம் எங்கும் கறுப்புக் கொடி பறக்க விடப்பட்டுள்ளது.

இந்திய முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று விடுவிக்கப்பட்ட சாந்தன், திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்தார்.

அவர் இலங்கை திரும்பலாம் என கடந்த 24 ஆம் திகதி இந்திய மத்திய அரசு அனுமதி வழங்கியிருந்தது.

இந்நிலையில், கல்லீரல் செயலிழப்பு காரணமாக சென்னை ராஜிவ் காந்தி அரசு மருத்துவமனையில் சாந்தன் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், கடந்த 28ஆம் திகதி அவர் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டது. (அ)

# சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளருக்கு விளக்கமறியல்

சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் சமன் ரத்நாயக்க எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவர் மாளிகாகந்த நீதிமன்றத்தில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டதையடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சர்ச்சைக்குரிய மனித இம்யூனோகுளோபுலின் மருந்து கொள்வனவு தொடர்பில் அவர் நேற்று முன் தினம் குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார்.

இதனையடுத்து சமன் ரத்நாயக்கவிடம் 9 மணி நேரத்துக்கும் மேலாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் அவர் கைது செய்யப்பட்டார்.

# இலங்கை தாதியர்களுக்கு சவுதியில் வேலைவாய்ப்பு

கொழும்பு, மார்ச் 03

இலங்கை தாதியர்களுக்கு சவுதி அரேபியாவில் வேலைவாய்ப்பு வழங்கப்படவுள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி இந்த ஆண்டில் நூற்றுக்கும் மேற்பட்ட இலங்கை தாதியர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படவுள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் ஊடக செயலாளர் சஞ்ஜய் நல்லப்பெரும தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக சவுதி அரேபிய சுகாதார அமைச்சுடன் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு கலந்துரையாடியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஆட்சேர்ப்பு நடவடிக்கையின் முதற்கட்டம் கொழும்பில் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 12 மாதங்களில் ஆயிரம் தாதியர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படவுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

# எங்களை காப்பாற்றுங்கள்!

## சவூதியில் அடைத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை பெண்கள் கண்ணீர் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 03


இலங்கையில் இருந்து சவூதி அரேபியாவுக்கு வீட்டு வேலைக்காக சென்ற நான்கு பெண்கள் ரியாத்தில் உள்ள வீடொன்றில் பல மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டு தொந்தரவுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

பெண் ஒருவர் மறைத்து வைத்திருந்த தொலைபேசி ஊடாக தாம் எதிர்கொள்ளும் துயரங்கள் குறித்த தகவல்களை இலங்கை ஊடகங்களுக்கு அவர்கள் அனுப்பி வைத்துள்ளனர்.

கொழும்பு மற்றும் குருநாகல் பிரதேசங்களில் அமைந்துள்ள தனியார் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களில் இருந்து இந்த பெண்கள் வெளிநாடு சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சரியான உணவு இன்மை, சம்பளம் வழங்காமை, பல்வேறு தொல்லைகளால் வேலை இழப்பு என பல காரணங்களால் சவுதி அரேபியாவில் உள்ள ரியாத்தில் உள்ள வேலைவாய்ப்பு நிறுவனத்தில் உள்ள அடுக்குமாடி குடியிருப்புக்கு இந்த பெண்கள் வீடுகளில் இருந்து அழைத்து வரப்பட்டதாக அவர்கள் கூறுகின்றனர்.

வெளிநாடுகளில் இருந்து அழைத்து வரப்பட்ட பெருமளவிலான வீட்டுப் பணியாளர்களும்



இந்த இடத்தில் தங்கியிருப்பதாகத் தெரிவித்த இந்த இலங்கை வீட்டுப் பணியாளர்கள், தங்களை அவ்விடத்திலிருந்து மீட்டுத் தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பொருளாதார நெருக்கடியால் தாங்கள் வெளிநாடு சென்றதாகவும், தனியார் தொழில் நிறுவனங்களின் மனிதாபிமானமற்ற செயற்பாடுகள் குறித்து எவ்வளவு தெரிவித்தும் பலனில்லை எனவும், அவர்களை காப்பாற்ற இலங்கை அரசாங்கம் தலையிட வேண்டும் என்பதே இந்த இலங்கை வீட்டுப் பணியாளர்களின் கோரிக்கையாக உள்ளது.

(அ)

# பொலிஸ்மா அதிபரிடமே நீர் யார் கேட்ட பொலிஸ்!

## நீதிபதியையும் உட்கார வைத்தார்

கொழும்பு, மார்ச் 03

பொலிஸ்மா அதிபரை கூட, 'நீங்கள் யார்?' என பொலிசார் கேட்கும் வகையில், குழப்பமான ஒரு நிறுவனமாக பொலிஸ் திணைக்களம் வீழ்ச்சியடைந்துள்ளமைக்கு வருந்துவதாக மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி மொஹமட் லாபர் தாஹிர் நேற்று முன் தினம் திறந்த நீதிமன்றில் தெரிவித்தார்.

தனியார் நிறுவனத்தின் உள் தணிக்கை நடந்து வந்த சந்தர்ப்பத்தில், அந்த நிறுவனத்துக்குள் ஆயுதங்களுடன் தன்னிச்சையாக புகுந்த கொள்ளுப்பிட்டி நிலைய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் அந்த இடத்தைத் தாக்கி கலவரம் செய்த சம்பவம் தொடர்பில் நடந்த விசாரணையின் இறுதியில், மனுதாரர்களிடம் மண்டியிட்டு மன்னிப்பு கேட்ட பொலிஸ் உத்தியோகத்தருக்கு அறிவுரை கூறும் போதே நீதிபதி இவ்வாறு கூறினார்.

பொலிஸாரை அவமதிக்கும் வகையில் பொலிஸாரையும் பொதுமக்களையும் துன்புறுத்தும் வகையில் செயற்பட வேண்டாம் என மேன்முறையீட்டு நீதிமன்றம் பொலிஸ் உத்தியோகத்தருக்கு கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்காக இந்த எச்சரிக்கை தொடர்பில் பொலிஸ் மா அதிபருக்கு அறிவிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்ற பதிவாளருக்கு உத்தரவிடப்பட்டது.

கொள்ளுப்பிட்டி பொலிஸாருக்கு எதிராக 'சுமதி தகவல் தொழில்நுட்ப தனியார் நிறுவனம்' தாக்கல் செய்த ரிட் மனு, மொஹமட் லாபர் மற்றும் கேமா ஸ்வர்ணாதிபதி ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு முன்னிலையில் அழைக்கப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி மொஹமட் லாபர் திறந்த நீதிமன்றத்தில் தொடர்ந்து குறிப்பிடுகையில் , நடைபாதையில் நடைபயிற்சிக்காக சென்ற போது, வெள்ளவத்தை பிரதேசத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தன்னை தடுத்து நிறுத்தி, 'யார் நீ?' என கேட்டதாகவும், தனது நீதிபதி அடையாள அட்டையைக் காட்டியபோது அடையாள அட்டையைப் பார்த்த பொலிஸ்காரர், அந்த இடத்தில் நிற்குமாறு கூறியதாகவும் நீதிபதி குறிப்பிட்டார்.

"நான் அந்த இடத்திலிருந்து பொலிஸ்மா அதிபரை தொலைபேசியில் அழைத்தேன். பின்னர் அந்த பொலிஸ்காரருடன், பொலிஸ்மா அதிபர் பேசினார். அப்போது அந்த பொலிஸ்காரர், 'நீங்கள் யார்?' என பொலிஸ்மா அதிபரை வினவினார். பொலிஸ் மா அதிபரைக் கூட அவருக்குத் தெரியாது. நீங்கள் யார் என்று பொலிஸ்மா அதிபரிடம் கூட பொலிசார் கேட்கும் நிறுவனமாக இது மாறிவிட்டது. இதுவே பாதாள உலகத்தைப் போன்ற பொலிசாரின் நடத்தை குறித்த கோபம். மிகவும் வருந்துகிறேன்" என நீதிபதி கூறினார்.

"மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியான எனக்கு இது நடந்தால், சாதாரண மக்களின் கதை என்ன?" என்றார் நீதிபதி.

சுமதி தகவல் தொழிநுட்ப தனியார் நிறு வனம் சமர்ப்பித்த மனுவின் பிரகாரம் கொள்ளுப்பிட்டி பொலிஸ் உப பரிசோதகர், சார்ஜன்ட் ஏகநாயக்க, கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்டோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மனுதாரர் நிறுவனத்தின் ஒழுக்காற்று விசாரணையில் தொடர்புடைய ஒரு சட்டத்தரணி மற்றும் இரண்டு அதிகாரிகளும் நீதிமன்றத்தில் ஆஜராகினர். மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதியின் சட்டத்தரணி சஞ்சீவ ஜயவர்தன மற்றும் அரசாங்க சட்டத்தரணி ஆகியோர் இந்த மனுவை தீர்ப்பதற்கு தயார் என நீதிமன்றில் தெரிவித்தனர். இதன்படி, கொள்ளுப்பிட்டி பொலிஸ் உத்தியோகத்தர், திறந்த நீதிமன்றில் மனுதாரரின் பிரதிநிதிகளிடம் மண்டியிட்டு மன்னிப்புக் கோரியதுடன், தனது வருத்தத்தையும் தெரிவித்தார். பின்னர் மனு மீதான விசாரணை முடிவடைந்தது. (அ)

# வைத்தியசாலைச் சூழலில் பஸ்களால் நோயாளிகளின் ஆரோக்கியம் பாதிப்பு

## யாழ். மருத்துவ பீடாதிபதி சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 03

**யாழ். போதனா வைத்தியசாலை சூழலில் தரித்து நிற்கும் பேருந்துகளால் நோயாளிகளின் ஆரோக்கியம் பாதிக்கப்படுவதாக மருத்துவ பீட பீடாதிபதி வைத்திய கலாநிதி சுரேந்திரகுமார் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் கூறுகையில்-

சர்வதேச தரத்திலான மருத்துவ வசதிகளை வழங்குவதற்கு நெரிசலற்ற அமைதியான சூழல் யாழ். போதனா வைத்திய சாலை சூழலில் ஏற்படுத்தப்பட வேண்டும்.

மருத்துவ சேவைகளை முன்னெடுப்பதற்கு எமக்கு சவாலாக இருப்பது நீண்ட தூரம் தரித்து நிற்கும் பேருந்துகள். நாம் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை.

வைத்தியசாலையின் புதிய கட்டட தொகுதிக்கு முன்பாக தரித்து நிற்கும் பஸ்கள், எமது மருத்துவ சேவைகளை முன்னெடுப்பதிலும், நோயாளிகளின் ஆரோக்கியம் தொடர்பிலும் தாக்கத்தை பெரும் ஏற்படுத்துகிறது.

அதனால் யாழ். மாநகர சபை, மாவட்டச் செயலகம், ஆளுநர் அலுவலகம் ஆகிய வற்றுடன் இணைந்து யாழ்ப்பாண ஆரோக்கிய நகரம் எனும் திட்டத்தினை உலக சுகாதார நிறுவனத்துடன் இணைந்து மேற்கொள்ளவுள்ளோம்.

இத்திட்டத்தினை முன்னெடுப்பதற்காக உலக சுகாதார நிறுவனத்தின் இலங்கை பணியாளர்களும் தென்கிழக்கு ஆசியாவில் உள்ள பணியாளர்களும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் வருகை தரவுள்ளனர்.

எதிர்வரும் இரண்டு வருடங்களுக்குள் யாழ்ப்பாண நகரத்தினை ஆரோக்கிய நகரமாக மாற்றுவதற்கான வேலைத்திட்டங்களை அவர்கள் மேற்கொள்ளவுள்ளனர்.

எனவே, எதிர்காலத்திலும் நகரத்தினை ஆரோக்கியமாகவும் தூய்மையாகவும் வைத்திருப்பதற்கு வாகன நெரிசல் ஒரு இடையூறாக காணப்படுகிறது. இதற்கு காரணமாக உள்ள போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தி நகரத்தை தூய்மையாக பேணுவதற்கு அனைவரும் முன்வர வேண்டும் - என்றார்.

# புதிய மதுபான சாலைக்கு எதிராக சுவரொட்டிகள்!

வவுனியா, மார்ச் 03

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் புதிதாக மதுபானச் சாலை அமைக்கும் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து பொது அமைப்புக்களால் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

பூந்தோட்டம் சந்தி பகுதியில் புதிதாக மதுபானசாலை யொன்றை அமைப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், அதற்கு பொது மக்கள் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர்.

இதனையடுத்து, பூந்தோட்டம் மற்றும் அதனை அண்மித்த கிராமங்களில் மதுபான சாலைக்கு எதிர்ப்பு வெளிப்படுத்தும் வகையிலான சுவரொட்டிகள் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன.

கிராம மட்ட பொது அமைப்புக்கள் என உரிமை கோரி ஒட்டப்பட்டுள்ள இந்த சுவரொட்டிகளில் "பூந்தோட்டம் சந்தியை பிரதானமாகக் கொண்ட கிராம எல்லைகளுக்குள் மதுபானச் சாலைக்கான அனுமதியை வழங்காதே" என்ற வாசகம் அச்சிடப்பட்டுள்ளது. (அ)

# ஊவா மாகாண ஆளுநரின் மகனை கைது செய்ய விசாரணை ஆரம்பம்!

கொழும்பு, மார்ச் 03

பெண் ஒருவரை தாக்கி, காயப்படுத்திய சம்பவம் தொடர்பில் ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முசாம்மிலின் மகனை கைது செய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முசம்மிலின் மகனான மொஹமட் இசாம் ஜமால்தீன் தாக்கியமையினால் காயமடைந்த பெண் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வெள்ளவத்தை காவல்நிலையத்தில் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது.

ஹவ்லொக் குடியிருப்பு திட்டத்தில் வைத்து இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் அதிகாலை ஒரு மணியளவில் குறித்த சந்தேகநபர் ஹவ்லொக் குடியிருப்பு பகுதிக்குள் நுழைந்து தாக்குதலை மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கான பெண் கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தநிலையில், விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் சந்தேகநபர் கொள்ளுபிட்டி மற்றும் கெப்பிட்டிபொல ஆகிய பகுதிகளில் உள்ள தமது வீட்டிலிருந்து தப்பி சென்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

# ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும் வரை வெளிநாட்டு கடன் மறுசீரமைக்கப்படாது

## உதய கம்மன்பில சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 03

ஜனாதிபதித் தேர்தல் இடம் பெறும் வரை வெளிநாட்டு கடன்களை அரசாங்கம் மறுசீரமைக்காது. வெளிநாட்டு கடன் மறுசீரமைக்கப்பட்டால் வருடாந்தம் 3 பில்லியன் டொலர் களை செலுத்த நேரிடும் என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

ஹோமாகம பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேச நாணய நிதியத்துடனான செயற்றிட்டம் வெற்றி பெற்றுள்ளதாக அரசாங்கம் குறிப்பிடுகிறது. ஆனால் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு விவகாரம் இன்று வரை இணக்கப்பாட்டுக்கு வரவில்லை.

கடன் மறுசீரமைப்புக்கு இலங்கையின் பிரதான கடன் வழங்குநரான இந்தியா, சீனா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் கடன் மறுசீரமைப்புக்கு சாதகமான நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை.

வெளிநாட்டு கடன் மறுசீரமைக்கப்பட்டால் வருடாந்தம் 3 பில்லியன் டொலர் அரச முறை கடன்கள் திருப்பி செலுத்த வேண்டும். வெளிநாட்டு கையிருப்பு 4 பில்லியனாக காணப்படுகின்ற நிலையில் வெளிநாட்டு கடன்களை திருப்பி செலுத்துவது சாத்தியமற்றது.

வெளிநாட்டு கடன்களை செலுத்தினால் எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்வதில் பாதிப்பு ஏற்படும்.

அரசியலமைப்பின் பிரகாரம் இந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் வரை வெளிநாட்டு கடன்களை அரசாங்கம் மறுசீரமைக்காது.

சர்வதேச நாணய நிதியத்தின் வரி கொள்கையை மாத்திரம் முழுமையாக அமுல்படுத்தும் அரசாங்கம் தேசிய உற்பத்திகளை மேம்படுத்த அவதானம் செலுத்தவில்லை. கடன் பெறுதல், மிகுதியாகியுள்ள வளங்களை விற்பனை செய்தல் என்பன மாத்திரமே ஜனாதிபதியின் பொருளாதாரக் கொள்கையாக காணப்படுகிறது - என்றார். (அ)

# எச்சரிக்கை மட்டத்தில் வெப்பநிலை!

கொழும்பு, மார்ச் 04

மேல், தென், சபரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்க ளிலும் மன்னார் மாவட்டத்தி லும் வெப்பமான காலநிலை நிலவும் என வளிமண்டலவி யல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக் களம் விடுத்துள்ள அறிக்கை யில் இந்த விடயம் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இதன்படி குறித்த பகுதிக ளில் மனித உடலில் உணரக் கூடிய 'எச்சரிக்கை' மட்டத்தை விடவும் அதிக வெப்பநிலை பதிவாகக் கூடும் என எதிர் பார்க்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் பொதுவெளியில் நடமாடுவதை குறைத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# மன்னாரில் சிறுமி படுகொலை; வழக்கு 7ஆம் திகதி ஒத்திவைப்பு

மன்னார், மார்ச் 03

தலைமன்னார் - ஊர்மனை கிராமத்தில் 10 வயதான சிறுமி பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்ட பின்னர் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு எதிர்வரும் 07 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மன்னார் நீதவான் நீதிமன்ற நீதிபதி சாஜித் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, சிறுமியின் உறவினர்கள் மற்றும் சிறுமியின் சடலத்தை முதலில் கண்டவர் உள்ளிட்ட ஐவரின் சாட்சியங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

இந்த வழக்கில் சிறுமி சார்பாக மன்னார் மாவட்ட சட்டத்தரணிகள் அனைவரும் முன்னிலையாகியிருந்தனர்.

தலைமன்னார் ஊர்மனை கிராமத்தில் கடந்த மாதம் 15 ஆம் திகதி மாலை காணாமற்போன 10 வயதான சிறுமியின் சடலம், சிறுமி தங்கியிருந்த அம்மம்மாவின் வீட்டில் இருந்து சுமார் 300 மீற்றர் தொலைவில் உள்ள தென்னந்தோப்பிலிருந்து கடந்த 16 ஆம் திகதி காலை கண்டெடுக்கப்பட்டது.

இதனையடுத்து, சிறுமி பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்ட பின்னர் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாக பிரேத பரிசோதனையில் உறுதியானது.

இந்நிலையில் தற்போது ஐவரின் சாட்சியங்கள் பெறப்பட்டுள்ளன. (அ)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:

# நிலந்த ஜயவர்தனவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை கோரி மனு!

கொழும்பு, மார்ச் 03

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் அரச புலனாய்வு சேவைப் பிரிவின் முன்னாள் பிரதானியும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபருமான நிலந்த ஜயவர்தனவிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று எழுத்தாணை மனு தாக்கல் செய்யப்பட்டது.

சமூக கேந்திர நிலையம், அருட்தந்தை ரொஹான் டி சில்வா மற்றும் டி.டி.சுராச்சி நிலங்க ஆகியோரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர், சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தன மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் மனுவில் பிரதிவாதிகளாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தினத்தன்று நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலை தடுக்காமைக்கு பொறுப்புக்கூற வேண்டுமென உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்த நிலந்த ஜயவர்தன தொடர்பில் குற்ற விசாரணையை முன்னெடுத்து, அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கையை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிடுமாறு இந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு, உயர் நீதிமன்ற, மேல் நீதிமன்ற வழக்குகளில் முன்னாள் பொலிஸ்மா அதிபரும் முன்னாள் பாதுகாப்பு செயலாளரும் நிலந்த ஜயவர்தனவும் கடமை தவறியமை அம்பலமாகியுள்ளதாக அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை நடத்திய சஹ்ரான் ஹாஷிம் உள்ளிட்ட குழுவினர் தொடர்பில் நீண்ட காலமாக அறிந்திருந்தும், அவர்கள் தாக்குதல் நடத்தப் போவதாக 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வெளிநாட்டிலிருந்து இருவரினால் இரகசிய தகவல் வழங்கப்பட்ட போதிலும் அதனை கருத்திற்கொள்ளாமல் செயற்பட்டமையினால், ஏப்ரல் 21 ஆம் திகதி இலங்கையில் பல்வேறு இடங்களில் குண்டுவெடிப்பு சம்பவங்கள் பதிவானதாக குறித்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த குண்டுத்தாக்குதல்களில் 267 பேர் உயிரிழந்ததுடன், 400இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்ததாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலுக்கான பொறுப்பு நிலந்த ஜயவர்தனவுக்கு காணப்படுவதாகவும் விசாரணை நடத்தி அவரை கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறும் மனுதாரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

ஈழநாடு
Eelanadu
03.03.2024 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், மாசி 20

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# சஜித் பிரேமதாச எதனை உணர்த்துகின்றார்?

சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில், ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் தொடர்ந்தும் இணைந்து வருகின்றனர். தற்போது மேலும் ஒருவர் இணைந்திருக்கின்றார். புதிதாக இணைந்தவர், ஐக்கிய மக்கள் சக்தியின் நல்லிணக்க முயற்சிகளுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டிருக்கின்றார். யுத்தம் நிறைவுற்றதன் பின்னரான தமிழ் கோரிக்கைகளில் பிரதானமானது, இறுதி யுத்தத்தின் போது, இடம் பெற்றதாக கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுக்கான நீதிப் பொறிமுறை தேவை என்பதும், அத்துடன், வடக்கு கிழக்கில் பாதுகாப்பு தேவைகளுக்கு மேலதிகமாக முகாமிட்டிருக்கும் இராணுவத்தினர் வெளியேற்றப்பட்ட வேண்டும் என்பதுமாகும்.

யுத்தத்துக்குப் பின்னரான கடந்த பதின்நான்கு வருடங்களில் இவ்வாறான கோரிக்கைளுடன்தான், தமிழர் அரசியல் முன்னெடுக்கப்பட்டது. இவ்வாறான விடயங்களுக்கு சஜித் பிரேமதாச ஆதரவானவர், அவர் நீதியின் பக்கமாக நிற்பார் என்னுமடிப்படையில்தான், கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது, தமிழ் மக்கள் அவருக்கு வாக்களித்தனர். கடந்த ஜனாதிபதித் தேர்தலில், வடக்கு கிழக்கில் மட்டுமே சஜித் பிரேமதாச வெற்றிபெற்றிருந்தார். ஆனால், அவ்வாறான ஒருவர் தமிழ் மக்களின் மனக்குறைகள் எதனையும் பொருட்படுத்தவில்லை. இது எதனை உணர்த்துகின்றது?

2010, ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளை பெற்ற இராணுவத் தளபதி, சரத் பொன்சேகா, தேர்தலின் பின்னர், தமிழ் மக்களின் நியாயத்திற்காக குரல் கொடுக்கவில்லை. 2015இல் தமிழ் மக்களின் வாக்குகளில் வெற்றிபெற்ற மைத்திரிபால சிறிசேன, தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளுக்கு, தலைகீழாகவே நடந்து கொண்டார். 2020 - ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக, நீதியின் பக்கமாக நிற்பதாக காண்பித்துக் கொண்ட, சஜித் பிரேமதாச தமிழ் மக்களின் வாக்குகளுக்கு நன்றியுள்ளவராக செயல்படவில்லை.

இந்த விடயங்கள் ஒரு தெளிவான செய்தியை சொல்லுகின்றது - அதாவது, ஜனாதிபதித் தேர்தலின் போது, தமிழ் மக்கள் தென்னிலங்கையின் வேட்பாளருக்கு பின்னால் செல்வதில் எந்தவோர் அர்த்தமும் இல்லை. தமிழ் மக்கள் தங்களை ஓர் அரசியல் சக்தியாக முன்னிறுத்தவேண்டுமாயின், தென்னிலங்கை தமிழ் மக்களை நோக்கி வரக் கூடிய நிலையை ஏற்படுத்த வேண்டும். அதற்கு தமிழ் மக்களின் வாக்குகள், வடக்கு, கிழக்கிற்குள் திரட்சிகொண்டால் மட்டுமே அது சாத்தியப்படும்.

அது நடைபெறவேண்டுமாயின், தமிழ் மக்கள் ஒரு தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களிப்பதன் மூலமே, அவ்வாறானதொரு நிலைமையை ஏற்படுத்த முடியும். அவ்வாறான நிலைப்பாட்டை முதலில் அனைத்து கட்சிகளும் மேற்கொள்ள வேண்டும். இது தமிழ் மக்களுக்கு பேரம் பேசும் ஆற்றலை வழங்கும் - ஆனால், முதலில் தமிழ் மக்களால் அவ்வாறானதொரு நிலைப்பாட்டையும் மேற்கொள்ள முடியும் என்பதை நிரூபிக்க வேண்டும்.

தென்னிலங்கை கட்சிகளை பொறுத்தவரையில், தமிழ் மக்களால் அவ்வாறானதொரு நிலைப்பாட்டை மேற்கொள்ள முடியாதென்றே எண்ணுகின்றனர். சஜித் பிரேமதாசவின் அணுகுமுறை அதனை தெளிவாக படம்பிடித்து காண்பிக்கின்றது. தமிழ் மக்கள் வேறு வழியின்றி, தென்னிலங்கை வேட்பாளர் ஒருவருக்குத்தான் வாக்களிப்பார்கள் என்றே அவர்கள் எண்ணுகின்றனர். அந்த எண்ணத்தை மாற்றக் கூடிய வல்லமை தமிழ் மக்களிடம் உண்டு என்பதை தமிழ் மக்கள் நிரூபிக்காத வரையில், தமிழ் மக்கள் எவருக்குமே தேவைப் படப் போவதில்லை.

# 34 வருடங்களுக்குப் பின்னர் கட்டுவன் ஆலயத்தில் வழிபாடு



*யாழ்ப்பாணம், மார்ச் 03*

வலி வடக்கு பகுதிகளில் உள்ள ஆலயங்களுக்கு சுமார் 34 வருடங்களின் பின்னர் சென்று வழிபட இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

வலி. வடக்கு உயர் பாது காப்பு வலயத்தினுள் உள்ள ஆலயங்களுக்கு சென்று, பிரதி வெள்ளிக் கிழமைகளில் வழிபட இராணுவத்தினர் கட்டுப்பாடுகளுடன் அனுமதி வழங்கியுள்ளனர்.

கடந்த 23ஆம் திகதி சில ஆலயங்களுக்கு இராணுவத்தினர் அழைத்து சென்று இருந்த நிலையில் , நேற்று முன்தினம் கட்டுவான் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் மற்றும் மானம்பிராய் பிள்ளையார் ஆலயம் ஆகியவற்றுக்கு அழைத்து சென்று இருந்தனர்.

அதன்போது ஆலயத்திற்கு 30 பேர் வரையில் சென்று இருந்தனர். அவர்களை இராணுவத்தினர் தமது பேருந்துக்களில் அழைத்து சென்று , ஆலய சூழலில் வழிபாடுகள் நடத்தி வழிபட அனுமதித்து , பின்னர் மீண்டும் ஆலயத்தில் இருந்து மக்களை தமது வாகனத்தில் அழைத்து வந்து உயர்பாதுகாப்பு வலய எல்லை பகுதியில் இறக்கி விட்டனர்.

கடந்த 1990ஆம் ஆண்டு தீபாவளி தினத்தன்று இராணுவ நடவடிக்கை காரணமாக அப்பகுதிகளில் இருந்து தாம் வெளியேறிய பின்னர் 34 வருட காலமாக எமது சொந்த இடங்களுக்கு மீள திரும்ப முடியாதவாறு எமது பகுத்து உயர் பாது காப்பு வலயமாக காணப் படுகிறது. 34 வருடங்களின் பின்னர் ஆலய வழிபாட்டிற்கு அனுமதி வழங்கி எம்மை அழைத்து சென்று ஆலயத்தில் வழிபட விட்டு மீண்டும் அழைத்து வந்துள்ளனர். மிக விரைவில் எம்மை நிரந்தரமாக சொந்த இடங்களில் மீள குடியமர அனுமதி வழங்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# பாராளுமன்றம் அடுத்த வாரம் கூடும்

*கொழும்பு, மார்ச் 03*

இதன்படி எதிர்வரும் 5 இ 6 மற்றும் 7 ஆகிய திகதிகளில் பாராளுமன்றம் கூடவுள்ளதாக பாராளுமன்ற தொடர்பாடல் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் எதிர்வரும் 8 ஆம் திகதி பொதுவிடுமுறை என்பதனால் அன்றைய தினம் பாராளுமன்ற அமர்வு இடம்பெறாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 5 ஆம் திகதி காலை 9.30 முதல் 10 .30 வரை வாய்மூல விடைக்கான நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே அன்றைய தினம் ஆளுங்கட்சியினரால் கொண்டவரப்படவுள்ள பிரேரணையின் பிரகாரம் சபை ஒத்திவைப்பு வேளை விவாதம் இடம்பெறவுள்ளது.

மேலும் எதிர்வரும்6 ஆம் திகதி காலை 10.00 மணிமுதல் 10.30 வரை பிரதமருடனான வினாக்களுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அன்றைய தினம் எதிர்க்கட்சிகள் முன்வைத்துள்ள பிரேரணையின் பிரகாரம் சபை ஒத்திவைப்பு விவாதம் இடம்பெறவுள்ளது.

இதேவேளை ஆளும் மற்றும் எதிர்க்கட்சியினர் இணைந்து முன்வைக்கவுள்ள வனவிலங்குகளால் ஏற்படும் பயிர்சேதம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதமும் இடம் பெறவுள்ளது. (அ)

# தேங்காய், முட்டை விலை உயர்வு

*கொழும்பு, மார்ச் 03*

தேங்காய் விலை அதிகரித்துள்ளதாக நுகர்வோர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.


ஒரு சில இடங்களில் ஒரு தேங்காய் 150 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை , சந்தையில் உள்ளூர் முட்டைகளின் விலை மீண்டும் அதிகரித்துள்ளது.

சில வர்த்த நிலையங்களில் ஒரு முட்டை 60 ரூபாய்க்கும் அதிகமாக விற்கப்படுவதாக நுகர் வோர் விசனம் தெரிவிக்கின் றனர்.

கடந்த வாரங்களுக்கு முன்னர் சந்தையில் 50 ரூபாய் முதல் 55 ரூபாய் வரை விற்கப்பட்ட முட்டை, தற்போது 60 ரூபாய்க்கும் அதிகமாக விற்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



# தருமபுர ஆதீனம் மிரட்டல் புகார்: தொடர் திருப்பங்கள் - என்ன நடக்கிறது?

- முரளிதரன் காசிவிஸ்வநாதன்

மயிலாடுதுறை அருகே உள்ள தருமபுர சைவ மடத்தின் மடாதிபதியை பணம் கேட்டு மிரட்டியதாக அளிக்கப்பட்ட புகாரில் நான்கு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதில் ஒருவரது பெயரை நீக்கவேண்டுமென கோரிக்கை வைக்கப்பட்டிருப்பதாக செய்தி வெளியாகியிருக்கிறது. அது உண்மையா, இந்த விவகாரத்தில் என்ன நடக்கிறது?

மயிலாடுதுறை மாவட்டத்தில் அமைந்திருக்கிறது தருமபுர ஆதீனம். இந்த ஆதீனத்தின் 27ஆவது மடாதிபதியாக சிறிலசிறி மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியார் என்பவர் மடாதிபதியாக இருந்து வருகிறார்.

மடாதிபதியின் சகோதரரான விருதகிரி என்பவர், அவருடைய உதவியாளராகவும் இருந்து வருகிறார். அவர் கடந்த பிப்ரவரி 25ஆம் தேதியன்று மயிலாடுதுறை காவல் நிலையத்தில் புகார் ஒன்றை அளித்தார்.

அந்தப் புகாரில் "ஆடுதுறையைச் சேர்ந்த வினோத் என்பவரும் திருவையாறைச் சேர்ந்த மடாதிபதியின் சேவகராகப் பணிபுரியம் செந்தில் என்பவரும் சேர்ந்துகொண்டு, மடாதிபதி சம்பந்தப்பட்ட ஆபாச வீடியோவும் ஆடியோவும் தங்களிடம் இருப்பதாகவும் அதை சமூக வலைதளங்களில் வெளியிடாமல் இருக்க வேண்டுமென்றால் பணம் தர வேண்டும் என்றும் கூறி மிரட்டியதுடன் என் கழுத்தை நெரித்துக் கொலைசெய்யவும் முயற்சி செய்தார்கள்," எனத் தெரிவித்திருந்தார்.

மேலும், "எங்கள் சார்பில் திருவெண்காட்டைச் சேர்ந்த விக்னேஷ் என்பவர் தொடர்புகொள்வார்" என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

**என்ன நடந்தது?**

மேலும், "விக்னேஷ் என்பவர் இந்தப் பணத்தைக் கேட்டு தன்னை கழுத்தை நெரித்து கொல்ல முயற்சித்ததாகவும்" செம்பனார் கோவிலில் உள்ள கலைமகள் பள்ளிக்கூடத்தின் உரிமையாளர் கொடியரசு, செய்யூரைச் சேர்ந்த வழக்கறிஞர் ஜெயச்சந்திரன், விஜயகுமார், பா.ஜ.கவின் மாவட்டத் தலைவர் அகோரம் ஆகிய நான்கு பேரின் தூண்டுதலின் அடிப்படையிலேயே விக்னேஷும் வினோத்தும் தன்னையும் மடாதிபதியையும் மிரட்டுவதாகவும் இதன் காரணமாக மடத்தில் உள்ளவர்கள் மன உளைச்சலில் இருப்பதால், இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் புகார் அளித்திருந்தார்.



இதைனையடுத்து வினோத், விக்னேஷ், கொடியரசு, செந்தில், ஜெயச்சந்திரன், விஜயகுமார், அகோரம் ஆகியோர் மீது 323, 307, 389, 506, 120 டீ ஆகிய பிரிவுகளின் மயிலாடுதுறை காவல் நிலையத்தில் வழக்குப் பதிவுசெய்யப்பட்டது.

இந்த வழக்கின் அடிப்படையில் ஆடுதுறை வினோத், செம்பனார் கோவிலில் உள்ள கலைமகள் பள்ளிக்கூடத்தின் உரிமையாளர் கொடியரசு, சீர்காழி ஒன்றிய பா.ஜ.கவின் முன்னாள் தலைவர் திருவெண்காடு விக்னேஷ், திருவிடைமருதூர் நெய்குப்பை கிராமத்தைச் சேர்ந்த ஸ்ரீனிவாஸ் ஆகிய நான்கு பேரை மயிலாடுதுறை காவல்துறை கைதுசெய்துள்ளது. மேலும் ஐந்து பேர் தேடப்பட்டு வருகின்றனர்.

**மடம் சார்பாக விளக்கம்**

தருமபுர மடாதிபதி சிறிலசிறி மாசிலாமணி தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரியார் தற்போது உத்தரப்பிரதேசத்தில் இருக்கும் நிலையில், இந்தப் புகாரை விருதகிரி அளித்திருக்கிறார். தவிர, மடாதிபதியின் உதவியாளரான செந்தில் என்பவர் மீது புகார் அளிக்கப்பட்டிருக்கும் நிலையில் அவரும் உத்தரப்பிரதேசம் சென்றிருப்பதாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையில் மடத்தின் சார்பில் செய்திக் குறிப்பு ஒன்று வெளியிடப்பட்டது. "சில நாட்களாக தருமபுரி மடத்தில் சில அடையாளம் தெரியாத நபர்கள் மற்றும் சில ரவுடிகள் சேர்ந்து மடம் சம்பந்தமான சில போலியான ஆடியோ மற்றும் வீடியோக்களைத் தயாரித்து, மடத்தில் வேலை செய்பவர்களையும் மடத்தின் விசுவாசிகளையும் அணுகி மன உளைச்சலுக்கு ஆளாக்கி வந்தனர். இதை சட்டரீதியாக எதிர்கொள்ள வேண்டுமென நாங்கள் காவல் துறையை நாடினோம். காவல்துறை தமிழக முதல்வரின் ஆணைப்படி இதில் சம்பந்தப்பட்டவர்கள் மீது மிகத் துரிதமாக நடவடிக்கை எடுத்துள்ளது.

"மிகத் துரிதமாக நடவடிக்கை எடுத்து எங்களையும் எங்கள் மடத்தின் பெருமையையும் காத்த காவல்துறைக்கு எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். தருமபுர மடத்தையும் எங்களையும் ரவுடிகளிடமிருந்து மீட்டெடுத்த தமிழ்நாடு முதல்வருக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்," என கூறப்பட்டிருந்தது.

இதற்குப் பிறகு, மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகம் இந்த கைது தொடர்பாக செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டது.

**திடீர் திருப்பம்**

இதற்கிடையில் திடீர் திருப்பமாக மடத்தின் சார்பில் அளிக்கப்பட்ட புகாரில் பிரதானமாக குற்றம்சாட்டப்பட்ட செந்தில் என்பவரின் பெயரை நீக்க காவல்துறையிடம் விருதகிரி மனு ஒன்றை அளித்ததாக செய்திகள் வெளியாயின. இந்த மனுவை மடத்தைச் சேர்ந்த ஓட்டுநர் ஒருவர் எடுத்துவந்து மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் அளித்ததாகச் சொல்லப்படுகிறது.

இப்படி மாற்றி மாற்றி செய்திகள் வெளியான நிலையில், புகார்தாரரும் மடாதிபதியின் சகோதரருமான விருதகிரியிடம் தொடர்புகொண்டு பேசியபோது, "நான் எந்த புகாரையும் வாபஸ் வாங்கவில்லை. இதுபோல செய்தி வெளியிடுவதற்கு முன்பாக என்னிடம் எந்த ஊடகமாவது உறுதிசெய்திருக்க வேண்டாமா? செந்தில் மீது தான் அளித்த புகார் அப்படியே இருக்கிறது," என்று குறிப்பிட்டார். இது தவிர வேறு எந்தக் கேள்விக்கும் அவர் பதிலளிக்கவில்லை.

தருமபுர மடாதிபதி ஊரில் இல்லாத நிலையில், காவல்துறையில் இவ்வளவு பெரிய புகார் அளிக்கப்பட்டிருப்பதும் அது தொடர்பாக கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றன.

# இந்தவார ராசிபலன் 03.03.2024 - 09.03.2024

ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - மாசி 20
நல்ல நேரம்: 9.26 - 10.56
ராகு காலம் : 04.56 - 06.26 திதி : அட்டமி

**மேஷம்** [ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி அடைவீர்கள். சிலருக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய வீடு அமையும். அரசுப் பணியாளர்களுக்கு மனதுக்குப் பிடித்த, புதிய பதவிகள் தேடிவரும். அந்தஸ்து கௌரவம் உயரும். விவசாயிகளுக்கு ஆதாயம் கிட்டும். மாணவர்கள் நன்கு படித்து தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெறுவார்கள். சொந்தபந்தங்களுக்கிடையே ஒற்றுமை மேலோங்கும். செய்தொழில், நேர்மையும் கடின உழைப்பும் மட்டும் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தை அளிக்கும்.

**ரிஷபம்** [ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் மன மகிழ்ச்சி நிலவும். வாழ்க்கையில் புதிய திருப்பங்கள் ஏற்படும். எதிர்பாராத தனவரவு உண்டு. சுற்றத்தார் மூலமாகவும் பணவுதவி கள் கிடைக்கும். தொழில் திறன் அதிகரித்து முன்னேற்றம் ஏற்படும். வியாபார நிமித்தமாக தொலைதூரப் பயணங்களின் மூலம் நன்மை ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். அரசு பணி புரிபவர்களுக்கு அனுகூலமான வாரம். அவர்களுக்கு உயர் அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும்.

**மிதுனம்** [ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் மனதுக்குப் பிரியமான மங்கையுடன் ஏற்படும் இனிய பயணங்களால் இன்புறுவீர் கள். புதிய நண்பர்களால் நன்மையும் ஏற்படும். மேலதிகாரிகளின் ஆதரவால் பணியில் முன்னேற்றங்களை காண்பீர்கள். மாணவர்களின் கவனச் சிதறல்கள் காரணமாக படிப்பில் ஆர்வம் குறையும். எனவே, ஆசிரியர்கள் ஆலோசனைப்படி ஆழ்ந்து படித்தால் அதிக மதிப்பெண்கள் பெறலாம். சிலருக்கு இடமாற்றங்கள், பயணத்தில் துன்பம், கடன் கொடுத்தவர்களின் கெடுபிடி, சகோதரர் விரோதம், அரசு வகைத் தொல்லை, ஆகியவை ஏற்படும்.

**கடகம்** [ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் வீட்டில் சுப காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். புதிய நண்பர்கள் சேர்க்கை, தொழில் இலாபம் ஆகியவை ஏற்படும். கற்பனை வளம் பெருகும். தாய் மூலம் நன்மைகள் ஏற்படும். சிலருக்குப் பயணங்களில் எதிர்பாராத பிரச்சினைகள் ஏற்படலாம். எடுத்த காரியங்களில் தடைகள், தாமதங்கள் ஏற்படும். உயர் அதிகாரிகளால் பாராட்டப்பட்டு பதவி உயர்வின் மூலம் பணப்பயன்களை அடைவீர்கள். வாகனங்களில் செல்லும் போது எச்சரிக்கையுடன் இருந்தால் விபத்தினைத் தவிர்க்கலாம்.

**சிம்மம்** [ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி பெறும் சிலருக்குத் திருமணப் பேச்சுக்கள் ஆரம்பமாகும். சந்ததி விருத்தி ஏற்படும். மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து வெற்றி பெறுவீர்கள். அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். அதிகாரிகள் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள். அரசுப் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும். உங்கள் சேவைகள் அனை வராலும் அங்கீகரிக்கப்படும். தெய்வ தரிசனத்தால் மனம் மகிழ்வதோடு, மனதில் அமைதியும் நிலவும்.

**கன்னி** [ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் பெண்களால் இலாபம், வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும் ஆகியவற்றால் வரும் இன்பம் நிலைத்திருக்கும். உத்தியோகத்தில் உயர்வுக்கு வழி ஏற்படும். தொலைதூர செய்திகள் இல்லத்தில் மகிழ்ச்சி பெருகும். போட்டி தேர்வுகளில் எதிர்பார்த்த வெற்றி கிட்டும் சில நேரங்களில் ஏமாற்றத்தை தவிர்க்க கூட்டாளிகளிடம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. சிலருக்குப் புதுப்புதுப் பதவிகளும் அதனால் வருவாய் பெருக்கமும் ஏற்படும். வியாபாரிகளுக்கு முதலீடுகள் அதிகரித்து இலாபமும் அதிகரிக்கும்.

**துலாம்** [ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் மகான்களின் ஆசியும், புதிய தொடர்புகள் நன்மைகளும் ஏற்படும். போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். புத்திர பாக்கியம், சுபகாரிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். பழைய கடன்கள் விரைவில் வசூலாகும். எதிர்பாராத இடத்தில் இருந்து வந்த பணவரவால் மனம் மகிழும். விரிவாக்கங்கள் செய்வதால் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். தெய்வப் பிரார்த்தனையால் வேண்டியது நிறைவேறும். புதிய தொழில் செய்பவர்களுக்கு சிறப்பான முன்னேற்றம் இருக்கும்.

**விருச்சிகம்** [ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் தொலை தூரத்திலிருந்து நற்செய்திகள் வந்து மகிழ்ச்சி அளிக்கும். வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். எதிர்பாராத தனவரவு உண்டு. சுற்றத்தார் மூலமாகவும் பணவுதவிகள் கிடைக்கும். தொழிலில் விஸ்தரிப்பு நடவடிக்கைகள் மூலம் வருமான வாய்ப்புகள் பெருகும். எடுத்த முயற்சிகள் யாவும் வெற்றி அடையும். அதிக உழைப்பு உழைத்தால் தான் அதற்கேற்ற இலாபம் கிடைப்பதோடு தொழிலில் நல்ல முன்னேற்றங்கள் ஏற்படும்.

**தனுசு** [ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் உடன்பிறப்புகளிடம் இருந்து நீங்கள் எதிர்பார்க்கும் பணவுதவி கள் கிடைக்கும். அன்னையின் அன்பு அரவணைப்பு மற்றும் உதவிகளும் ஆதரவாய் இருக்கும். திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அவசியமற்ற, அலைச்சல் தரும் பயணங்கள் மேற்கொள்ள நேரும். அரசு ஊழியர்களுக்குக் கட்டளைகளை இடும்படியான அதிகாரம் மிக்க உயர் பதவிகள் கிடைக்கும். பிள்ளைகளிடம் நல்ல உயர்வான முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம்.

**மகரம்** [ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் வீட்டில் சுபமங்கள காரியங்கள் காரணமாக தாராளமான பணச் செலவுகள் ஏற்படும். இனிய தகவல்கள் இல்லம் தேடி வரும். சுற்றமும், நட்பும் சூழ சுபகாரியப் பேச்சுக்கள் நடைபெறும். வியாபாரிகளுக்கு வியாபாரம் ஏற்ற இறக்கமின்றி ஒரே சீராக இருக்கும். அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு வரும். பிள்ளைப்பேறு, புதிய தொழில் வாய்ப்புகள், லாட்டரி யோகங்கள், புண்ணியத்தல தரிசனங்கள் ஆகியவை ஏற்படும். திருப்திகரமான வாரமாக இருக்கும்.

**கும்பம்** [ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும். மிகுந்த உற்சாகத்துடன் பக்தி மார்க்கத்தில் ஈடுபடுவீர்கள். கடின உழைப்பால் நீங்கள் பெறும் வெற்றிகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். மங்கையரால் மன மகிழ்ச்சியும், அரசாங்கத்தால் இலாபமும் ஏற்படும். சம்பாதித்த பணத்தை புதிய முதலீட்டுத் திட்டங்கள் மூலம் சேமிக்க முற்படுவீர்கள். நீண்ட நாட்களுக்குப் பின்னர் வந்த பழைய உறவுகளின் வரவு மகிழ்வைத் தரும். தற்போது இருக்கும் வேலையை விட நல்ல வேலைக்குப் போகும் வாய்ப்புகள் அமையும்.

**மீனம்** [ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் பயணத்தின் போது எச்சரிக்கையோடு இருத்தல் அவசியம். பகைகளை வெல்லும் திறன் ஏற்படும். வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். தாய் மாமனுக்கும் நன்மை ஏற்படும். தொலைதூரப் பயணங்களின் மூலம் நன்மை ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். கல்வியில் வெற்றி பெறக் கவனமாகப் படிக்க வேண்டும். உடன்பிறப்புகளிடம் கருத்து வேறுபாடு ஏற்படும். புத்திர பாக்கியம் ஏற்படும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் ஆகியவை கிடைக்கும்.

# இரட்டை இலை மீண்டும் முடக்கப்பட வாய்ப்புள்ளதா?

## எடப்பாடி பழனிசாமிக்கு ஏற்பட்டிருக்கும் சிக்கல் எவ்வளவு கடுமையானது?

சுபாஷ் சந்திர போஸ்

எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அதிமுகவுக்குத்தான் இனி இரட்டை இலைச் சின்னம் சொந்தமாகும் என்று பரவலாகவே கருதப்பட்டு வந்த நிலையில், எதிர்பாராத சிக்கல் அவருக்கு ஏற்பட்டிருக்கிறது. ஏன் இப்படி நடந்தது, இது எங்கே முடியும், இரட்டை இலையைக் கைப்பற்றுவது ஏன் முக்கியம் போன்ற கேள்விகளுக்கு விடை தருகிறது இந்தக் கட்டுரை.

தேர்தல் நேரத்தில் அரசியல் கட்சிகளின் பெயர்களை விடவும், அவற்றின் சின்னங்களுக்கு அதிக சக்தி உண்டு. ஒவ்வொரு முறை தேர்தல் அறிவிக்கப்படும்போதும், சின்னம் வேண்டி கட்சிகள் முந்துவதை வைத்தே அதன் பலம் என்ன என்பதை கூறி விடமுடியும்.

அதில் ஒன்றுதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் சின்னமான இரட்டை இலை. எம்ஜிஆர் காலத்தில் தொடங்கி, இறுதியாக அதிமுகவின் முதல்வராக இருந்த எடப்பாடி பழனிச்சாமி காலம் வரை இந்த சின்னம் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இருந்துள்ளது.

குறிப்பாக பல தேர்தல்களில் அக்கட்சி வெற்றி பெறவே இந்த சின்னம் தான் காரணம் என்பதை தற்போதும் நடைபெறும் சின்னம் தொடர்பான மோதலை வைத்தே நாம் புரிந்துக் கொள்ள முடியும்.

அத்தகைய பாரம்பரியமான சின்னமான இரட்டை இலை, முன்னாள் முதல்வர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் மறைவுக்கு பிறகு இழுபறி நிலையிலேயே இருக்கிறது. இன்னும் சில மாதங்களில் 2024 மக்களவை தேர்தல் நடைபெற உள்ள நிலையில், மீண்டும் இரட்டை இலை சின்னம் யாருக்கு என்ற கேள்வி அரசியல் களத்தை ஆக்கிரமித்துள்ளது.

**இரட்டை இலை சின்னத்தின் வரலாறு**

1973ஆம் ஆண்டில் இருந்து அதிமுக சார்பில் இரட்டை இலை சின்னம் தேர்தல் சின்னமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. எம்ஜிஆர் மறைவுக்கு பிறகு அதிமுக ஜெயலலிதா அணி, ஜானகி அணி என பிரிந்து போனது. அதனையொட்டி 1989ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் இரு அணியும் இரட்டை இலை சின்னத்துக்கு உரிமை கோரியதால் சின்னம் முடக்கப்பட்டது.

இதனால் அந்த தேர்தலில் ஜானகி அணிக்கு இரட்



டைப் புறா மற்றும் ஜெயலலிதா அணிக்கு சேவல் ஆகிய சின்னங்கள் ஒதுக்கப்பட்டன. ஆனால், அந்த தேர்தலில் இந்த இரு அணிகளுமே தோல்வியடைந்தன. இதனை தொடர்ந்து ஜானகி அரசியலில் இருந்து விலகி விட்டார்.

ஒரு கட்சிக்கு சின்னம் எவ்வளவு முக்கியம் என்பதை காட்டுவதாகவும் அந்த தேர்தல் அமைந்தது. அதற்கு பின் இரு அணியும் ஒன்றாக சேர்ந்து சின்னத்திற்காக கொடுத்த பிரமாண பத்திரங்களை திரும்பப்பெற்றனர். மீண்டும் இரட்டை இலை சின்னத்தையும் கைப்பற்றினர்.

இது அடுத்தடுத்த நடந்த இடைத்தேர்தல்களிலும், 1991 பொதுத்தேர்தலிலும் வெற்றிபெற ஒரு காரணமாக அமைந்தது. இந்த தேர்தலில் ஜெயலலிதாவும் முதல் முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சராக பதவியேற்றார்.

அதிலிருந்து 2016 வரை இரட்டை இலையை சின்னமாக பயன்படுத்துவதில் அதிமுகவுக்கு எந்த சிக்கலும் வரவில்லை. பல கூட்டணி கட்சிகளே கூட பெரும்பாலும் இரட்டை இலை சின்னத்தில் தான் போட்டியிட்டனர். ஆனால், டிசம்பர் 2016 5ஆம் தேதி முன்னாள் முதல்வரான ஜெயலலிதா மறைந்ததில் இருந்து கட்சிக்குள் கூச்சல் குழப்பம் தொடங்கியது.

**இரண்டாம் முறையாக சின்னம் முடக்கம்**

ஓ.பன்னீர்செல்வம் முதல்வராக பதவியேற்று, பின்



னர் அவர் அதிலிருந்து ராஜினாமா செய்து, எடப்பாடி பழனிச்சாமி முதல்வராக பதவியேற்றது என அரசியல் களமே குழம்பி போனது.

இதற்கிடையில் 2017ஆம் ஆண்டு ஆர்கே நகர் இடைத்தேர்தலில் சசிகலா அணி, ஓ.பன்னீர்செல்வம் அணி என இருவரும் இரட்டை இலை சின்னத்திற்கு போட்டி போட்ட காரணத்தால் மீண்டும் தேர்தல் ஆணையம் அந்த சின்னத்தை முடக்கியது மட்டுமின்றி, அதிமுக என்ற பெயரை பயன்படுத்தவும் தடை விதித்தது.

இந்நிலையில் தான் அதே ஆண்டில் ஒன்றிணைந்த ஓ.பன்னீர்செல்வம் மற்றும் எடப்பாடி பழனிச்சாமி அணி, சசிகலா அணிக்கு எதிராக வழக்கு தொடர்ந்து வெற்றி பெற்றதன் மூலம் மீண்டும் சின்னம் மற்றும் அதிமுக என்ற பெயரை பயன்படுத்துவதற்கான உரிமைகளை பெற்றனர்.

**கட்சிக்குள் ஏற்பட்ட பிளவு**

ஆனால், அதுவும் நீண்டகாலம் நீடிக்கவில்லை. கட்சிக்குள் நீண்டகாலமாக வெடித்து வந்த ஒற்றைத் தலைமை என்ற கோஷம் முற்றிப்போய், 2022ஆம் ஆண்டு ஜூலை மாதம் 11ஆம் தேதி நடந்த கட்சியின் பொதுக்குழுவில் பொதுச்செயலாளராக எடப்பாடி பழனிச்சாமி தேர்வு செய்யப்பட்டார்.

ஓ.பன்னீர்செல்வம் (ஓபிஎஸ்), வைத்தியலிங்கம் மற்றும் மனோஜ் பாண்டியன் ஆகியோர் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவிகளில் இருந்தே நீக்கப்பட்டு தீர்மானம் இயற்றப்பட்டது.

அதிலிருந்து ஓபிஎஸ் தரப்பு பொதுக்குழு முடிவுகளுக்கு தடை விதிக்க வேண்டும், மீண்டும் பழைய நடைமுறையை கொண்டுவர வேண்டும் என்றும் கோரி வழக்கும், எடப்பாடி தரப்பு தாங்கள்தான் உண்மையான அதிமுக அதனால் பொதுக்குழு முடிவுகள் செல்லும் என்று கோரி வழக்கும் என மாறி மாறி உயர்நீதி மன்றம் முதல் உச்சநீதிமன்றம் வரை வழக்குகளை தாக்கல் செய்தனர்.

**மூன்றாம் முறை சின்னம் முடக்கப்படும் அபாயம்**

இதற்கிடையில் 2023ஆம் ஆண்டு நடைபெற்ற ஈரோடு இடைத்தேர்தலில் இருதரப்பும் வேட்பாளர்களை நிறுத்தியதால் மீண்டும் சின்னம் முடக்கப்படும் அபாயம் ஏற்பட்டது. இந்நிலையில் ஓபிஎஸ் தரப்பு தனது வேட்பாளரை திரும்பப்பெற்றது.

2023 மார்ச் அதிமுக பொதுக்குழு குறித்து தொடரப்பட்ட அனைத்து வழக்குகளையும் தள்ளுபடி செய்த சென்னை உயர்நீதிமன்றம், அதிமுக பொதுக்குழு முடிவுகளுக்கு தடை விதிக்கமுடியாது என்ற தீர்ப்பை வழங்கியது.

இதனை தொடர்ந்து கிட்டத்தட்ட அதிமுக மீதான உரிமை எடப்பாடி பழனிச்சாமி அணிக்கே என்று உறுதியாகியிருந்தாலும், ஓபிஎஸ் தொடர்ந்து தன்னை அதிமுகவின் ஒருங்கிணைப்பாளர் என்று கூறிக் கொண்டும், சின்னம், கொடி ஆகியவற்றை பயன்படுத்திக்கொண்டும் இருந்தார்.

இதை எதிர்த்து 2023 செப்டம்பர் மாதம் எடப்பாடி பழனிச்சாமி வழக்கு ஒன்றை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்தார். இதற்கு பதில்மனு தாக்கல் செய்ய மூன்று முறைக்கும் மேல் ஓபிஎஸ் தரப்பு கால அவகாசம் கேட்டதால், உயர்நீதிமன்ற தனிநீதிபதி ஓ. பன்னீர்செல்வம் இனி கட்சியின் பெயர், சின்னம், கொடி என எதையும் பயன்படுத்த தடை விதித்து உத்தரவிட்டார்.

தனிநீதிபதியின் முடிவை எதிர்த்து ஓபிஎஸ் தரப்பால் தாக்கல் செய்யப்பட்ட மனுவிலும் மறுஉத்தரவு வரும் வரை தடை நீடிக்கும் என்றே கூறப்பட்டது.

இதற்கிடையில் உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின்படி, அதிமுக பொதுக்குழுவில் ஓபிஎஸ் அணியை நீக்கியது குறித்த வழக்கு இன்னமும் சிவில் நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது.

ஆனால், ஏற்கெனவே இந்திய தேர்தல் ஆணையம் நீதிமன்ற உத்தரவுகளை மேற்கோள் காட்டி எடப்பாடி பழனிச்சாமி தரப்பை ஏற்றுக்கொண்டு, அவர்கள் திருத்திய கட்சியின் சட்ட விதிகளை ஏற்றுக் கொண்டு தங்களது அதிகாரபூர்வ வலைத்தளத்தில் அவற்றை வெளியிட்டுள்ளது.

இந்நிலையில், இந்த வழக்குகள் நிலுவையில் இருப்பதால் இந்த மக்களவை தேர்தலில் போட்டியிட இரட்டை இலை சின்னத்தை கோர இருப்பதாக ஓ.பன்னீர்செல்வம் சமீபத்தில் அறிவித்துள்ளார். இதுகுறித்து ஓபிஎஸ் தரப்பு ஆதரவாளர் புகழேந்தியிடம் பேசியபோது,

**‘சின்னம் முடக்கப்படும்’**

இதுகுறித்த பேசிய அவர், “கட்சிக் கொடியை பயன்படுத்தக் கூடாது என்ற தீர்ப்பின் மீதான வழக்கு நடந்துக் கொண்டிருக்கிறது. அதே போல் கட்சிநீக்கம் குறித்த வழக்கும் சிவில் நீதிமன்றத்தில் இருக்கிறது. எனவே ஓபிஎஸ் ஏற்கனவே போடப்பட்ட உத்தரவை காட்டி, ஒருங்கிணைப்பாளருக்கான பதவிக்காலம் இன்னும் இருக்கிறது என்ற உரிமையின் மூலம் எனக்கு இரட்டை இலையை கொடுங்கள் என்று கேட்க உள்ளார். எடப்பாடி தரப்பும் அதே சின்னத்தை கோரட்டும். இதில் தேர்தல் ஆணையம் இறுதி முடிவை எடுக்கட்டும்” என்று தெரிவித்தார்.


ஆனால், விசாரிக்க நேரமில்லை, தேர்தலுக்கு பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று தேர்தல் ஆணையம் சொன்னால் ஆர்கே நகர் போல சின்னம் முடக்கப்படும் என்றும் எச்சரிக்கிறார் அவர்.

மேலும், அப்படி சின்னம் முடக்கப்பட்டால் எடப்பாடி அணிக்கு பெரிய தலைகுனிவு என்பதையும் வலியுறுத்துகிறார் புகழேந்தி.

**ஓபிஎஸ் என்பவர் யார்?**

ஓபிஎஸ் கூறியுள்ளவாறு அவரது அணியும் இரட்டை இலை சின்னத்தை கோருவதால், எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அதிமுக அணிக்கு பின்னடைவு ஏற்படுமா என்று அதிமுகவின் செய்தித்தொடர்பாளர் பாபு முருகவேலிடம் கேட்டோம்.

அதற்கு பதிலளித்த அவர், “இதையெல்லாம் பேச ஓபிஎஸ் யார்? அவர் எந்த கட்சியில் உறுப்பினர்? அவரால் கட்சி வேட்டியை கூட கட்ட முடியாத நிலைதான்




உள்ளது. எனவே அவர் சொல்வதையெல்லாம் பெரிதாக எடுத்துக்கொள்ள வேண்டாம். அவர் பேசுவதில் எந்த விதமான சட்டரீதியான முகாந்திரமும் இல்லை” என்று தெரிவித்தார்.

மேலும், சென்னை உயர்நீதிமன்றத்தில் திண்டுக்கல்லைச் சேர்ந்த சூரியமூர்த்தி என்பவர் தொடர்ந்துள்ள வழக்கில், ஏற்கனவே அதிமுக உட்கட்சி விவகாரங்கள் தொடர்பாக தான் தொடர்ந்த பல வழக்குகள் நிலுவையில் இருப்பதால் அதிமுகவுக்கு இரட்டை இல்லை சின்னத்தை ஒதுக்க கூடாது என்று கோரிக்கை வைத்துள்ளார். இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதுகுறித்து பேசிய பாபு முருகவேல், “இது போன்ற பல வழக்குகளை தொடர்ந்து போடுவதுதான் அவரது வேலை. சமீபத்தில் கூட அவர் தொடர்ந்த மூன்று வழக்குகளை ஒரே நேரத்தில் தள்ளுபடி செய்தது நீதிமன்றம். எனவே அவரெல்லாம் ஒரு பொருட்டில்லை” என்று தெரிவித்துள்ளார்.

ஆக மொத்தம் ஓபிஎஸ்-இன் புதிய அறிவிப்பால் அதிமுகவில் பெரிய சலனம் எதுவும் ஏற்படவில்லை என்பதையே பாபு முருகவேலுடனான உரையாடல் உணர்த்தியது.

**தேர்தல் ஆணையத்தால் என்ன செய்ய முடியும்?**

தேர்தல் ஆணையத்தின் இணையதளத்தின்படி, அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் மற்றும் அங்கீகரிக்கப்படாத கட்சிகள் என இருவகை உள்ளன. இதிலேயே மாநில அளவில் மற்றும் மத்திய அளவில் என்று இரு பிரிவுகள் உள்ளன.

இதில் எந்த பிரிவாக இருந்தாலும் ஒரு கட்சி அங்கீகரிக்கப்பட வேண்டுமென்றால் கடந்த தேர்தலில் 6வீத வாக்குகள் பெற்றிருக்க வேண்டும். மேலும், சட்ட மன்றம்

(14ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய விஜயத்துக்கு பின்னர் தேசிய மக்கள் சக்திக்கு எதிராக தீவிரமடையும் பிரசாரங்கள்!



வீரகத்தி தனபாலசிங்கம்

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரா குமார திசாநாயக்கவும் மூன்று தோழர்களும் கடந்த மாதம் இந்தியாவுக்கு மேற்கொண்ட விஜயத்துக்கு பின்னர் தேசிய மக்கள் சக்திக்கு எதிரான பிரசாரங்கள் தென்னிலங்கையில் தீவிரமடைந்திருக்கின்றன. பிரதான கட்சிகளின் அரசியல்வாதிகளும் அவதானிகளும் ஊடகங்களும் இந்த பிரசாரத்தின் முன்னரங்கத்தில் நிற்கிறார்கள்.

இந்திய அரசாங்கம் தேசிய மக்கள் சக்தியின் தலைவரை உத்தியோகபூர்வமாக அழைத்துப் பேசியதை சகித்துக் கொள்ள முடியாதவராக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தங்களையும் புதுடில்லிக்கு அழைத்துப் பேசவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருந்தார் என்ற போதிலும், அத்தகைய அழைப்பு எதையும் இந்திய அரசாங்கம் அனுப்பியதாக இதுவரையில் தெரியவரவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் அநுரா குமாரவின் இந்திய விஜயத்தை வரவேற்று கருத்து வெளியிட்டிருந்த அதேவேளை, வேறு சில அரசியல்வாதிகள் அந்த விஜயத்தை வரவேற்பது போன்று கருத்துக்களைக் கூறினாலும், அநுரா குமாரவும் தோழர்களும் கோட்சூட் அணிந்து கொண்டு இந்திய அதிகாரிகளுடன் பேசியதை கிண்டல் செய்யவும் தவறவில்லை. கோட் அணிவதற்கு பிரத்தியேகமான தகுதி ஏதாவது இருக்கிறதா என்பதை அந்த அரசியல்வாதிகள் தான் கூற வேண்டும்.

ஜனதா விமுக்தி பெரமுனவுக்கு (ஜே.வி.பி.) இந்திய விரோத அரசியல் வரலாறு ஒன்று இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். அத்தகைய கட்சியின் தலைவர்களை இந்தியா அழைத்துப் பேசியதை அவர்கள் இந்தியாவுக்கு விலை போய்விட்டதாக விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. இந்திய விரோத நிலைப்பாடுகளைக் கொண்ட விமல் வீரவன்ச, சரத் வீரசேகர போன்ற கடும்போக்கு சிங்கள தேசியவாத அரசியல்வாதிகள் இந்த விமர்சனங்களில் முன்னணியில் நிற்கிறார்கள்.

அநுரா குமார குழுவினர் தேசிய சொத்துக்களை இந்திய முதலீட்டாளர்களுக்கு தாரை வார்க்க இணக்கம் தெரிவித்துவிட்டு வந்திருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு இவர்களின் விமர்சனங்களில் முக்கியமானது. இந்திய விரோத நிலைப்பாட்டை தேசிய மக்கள் சக்தி மாற்றிக்கொண்டு விட்டது என்று இவர்கள் சிங்கள மக்களுக்கு கூறுகிறார்கள்.

கடும்போக்கு சிங்கள தேசியவாத சக்திகளைப் பொறுத்தவரை அவர்களின் அரசியல் இருப்பே சிறுபான்மைச் சமூகங்களுக்கு குறிப்பாக தமிழர்களுக்கும் இந்தியாவுக்கும் விரோதமான கொள்கைகளிலேயே தங்கியிருக்கிறது. அந்த கொள்கைகளை பிரசாரப்படுத்துவதற்கு கிடைக்கும் எந்தச் சந்தர்ப்பத்தையும் பயன்படுத்த அவர்கள் தவறமாட்டார்கள். அநுரா குமாரவின் இந்திய விஜயத்தையும் அவர்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

ஜே.வி.பி.யின் இந்திய விரோதக் கடந்த காலத்தைப் பற்றி மோடி அரசாங்கத்துக்கே கவலை இல்லாதபோது இலங்கையில் சில அரசியல்வாதிகளுக்கும் அவதானிகளுக்கும் அது ஏன் ஒரு பிரச்சினையாக இருக்கிறது என்பதை விளங்கிக்கொள்ளமுடியவில்லை.

இந்தியாவைப் போன்றே தாங்களும் மாறிவிட்டதாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் கூறுகிறார்கள் என்ற போதிலும், சிங்கள தேசியவாத வாக்காளர்கள் தொகுதியிடமிருந்து தங்களை தனிமைப்படுத்துவதற்கு செய்யப்படக்கூடிய பிரசாரங்கள் குறித்து அவர்கள் மிகுந்த எசசரிக்கையுடன் இருக்கிறார்கள். இதை இந்திய விஜயத்தின் பின்னரான அவர்களின் கருத்துக்கள் புலப்படுத்துகின்றன.

இந்திய முதலீடுகளுடனான திட்டங்களை கடுமையாக எதிர்த்துவந்த தேசிய மக்கள் சக்தியின் தற்போதைய நிலைப்பாடு தொடர்பில் செய்தியாளர்



> ரோஹண விஜேவீர காலத்து கொள்கைப் பிரகடனங்களை மேற்கோள்காட்டி தனியார் சொத்துடைமை மற்றும் உற்பத்தி கருவிகளின் கட்டுப்பாடு பற்றிய ஜே.வி.பி.யின் தற்போதைய கொள்கைகள் அதற்கு முரணாக இருப்பதற்கு அநுரா குமார விளக்கம் தரவேண்டும் சில கொழும்பு பத்திரிகைகள் ஆசிரிய தலையங்கங்கள் மூலம் கோரிக்கை விடுத்திருக்கின்றன.

கள் மகாநாட்டில் கேட்கப்பட்டபோது கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் சீனா, இந்தியா உட்பட பல நாடுகளிடம் இருந்து முதலீடுகளை தாங்கள் வரவேற்பதாக கூறினார். இந்தியாவின் பாதுகாப்பு நலன்கள் தங்களது அக்கறைக்குரியது என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் கூறினாலும், இந்தியாவுக்கு ஆதரவான ஒரு அரசியல் சக்தியாக தாங்கள் மாறிவிட்டது போன்ற ஒரு தோற்றப்பாடு ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் அவர்கள் குறியாக இருக்கிறார்கள்.

இந்திய விரோத கடந்த காலத்தைப் பற்றி திரும்பத்திரும்ப நினைவுபடுத்தும் அரசியல்வாதிகளும் அவதானிகளும் ஜே.வி.பி. அதன் பழைய நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளக் கூடாது என்று விரும்புகிறார்களா என்று கேட்காமல் இருக்கமுடியவில்லை.

தற்போதைய சர்வதேச அரசியல் நிலைவரங்களுக்கு பொருத்தமான முறையில் தங்களின் கொள்கைகளையும் அணுகுமுறைகளையும் மாற்றிக்கொண்டுவிட்டதாக கூறும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் மாற்றிக்கொள்ளத் தயாரில்லாத கொள்கைகளும் இருக்கின்றன. இதற்கு சிறந்த உதாரணமாக தேசிய இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வைக் கூறமுடியும்.

தங்களது நோக்கங்கள் குறித்து மக்களுக்கு பீதியை ஏற்படுத்துவதற்காக அரசியல் எதிரிகள் செய்யும் பிரசாரங்களை மறுதலிப்பதற்கு தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் கடுமையாகப் பாடுபடவேண்டியிருக்கிறது.

ஜே.வி.பி அரசாங்கத்தை அமைத்தால் தனியாருக்கு சொந்தமான உடைமைகள்



சுவீகரிக்கப்படும் என்றும் தனியார்துறை நசுக்கப்பட்டுவிடும் என்றும் செய்யப்படுகின்ற பிரசாரங்களை அநுரா குமார பல தடவைகள் மறுத்திருக்கிறார். வர்த்தக சமூகத்தினர் மத்தியில் உரையாற்றும் வேளைகளில் அவர் ஜே.வி.பி. மாறிவிட்டது என்று நம்பவைப்பதற்கு பெரும் முயற்சி எடுக்க வேண்டியிருக்கிறது.

ரோஹண விஜேவீர காலத்து கொள்கைப் பிரகடனங்களை மேற்கோள்காட்டி தனியார் சொத்துடைமை மற்றும் உற்பத்திக் கருவிகளின் கட்டுப்பாடு பற்றிய ஜே.வி.பி.யின் தற்போதைய கொள்கைகள் அதற்கு முரணாக இருப்பதற்கு அநுரா குமார விளக்கம் தரவேண்டும் என்று சில கொழும்பு சிங்கள, ஆங்கில பத்திரிகைகள் ஆசிரிய தலையங்கங்கள் மூலம் கோரிக்கை விடுத்திருக்கின்றன.

இந்திய விஜயத்துக்கு பிறகு தேசிய மக்கள் சக்தி குறித்து தீவிரப்படுத்தப்படும் விமர்சனங்களில் கவனிக்கக் கூடியதாக இருக்கும் இன்னொரு முக்கிய அம்சம் அதன் கடந்த கால வன்முறை பற்றியதாகும்.

கடந்த அரை நூற்றாண்டுக்கும் அதிகமான காலப்பகுதிக்குள் இரண்டு ஆயுதக் கிளர்ச்சிகளை செய்து தோல்வி கண்ட ஜே.வி.பி. கடந்த நூற்றாண்டின் பிறபகுதியில் இருந்து ஜனநாயக அரசியலில் பிரவேசித்தது. தேர்தல்களில் போட்டியிட்டு பிரதிநிதித்துவ அரசியலிலும் மூன்று தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக ஈடுபட்டுவருகிறது.

அரசைத் தூக்கியெறிவதற்கு ஆயுதக்கிளர்ச்சியில் ஈடுபட்ட ஜே.வி.பி. பேரழிவுகளுக்கும் பெருவாரியான கொலைகளுக்கும் காரணமாக இருந்ததும் அந்த இயக்கத்தை அழிப்பதற்கு அரசாங்கங்கள் அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டு ஆயிரக்கணக்கானவர்களைக் கொன்று குவித்ததும் வரலாறு.

ஆனால், அரசியல் இலட்சியத்துக்காக ஆயுதமேந்திய ஓர் இயக்கம் காலப்போக்கில் அதன் போக்கை மாற்றிக்கொண்டு ஜனநாயக அரசியலில் பிரவேசித்து மக்களின் ஆதரவையும் பெறும்போது அதன் கடந்தகால வன்முறைகளை மாத்திரமே நினைவுபடுத்திப் பிரசாரங்களைச் செய்வது ஏற்பட்ட மாற்றத்தை அலட்சியம் செய்வதற்கு ஒப்பானதாகும்.

ஆயுதப் போராட்ட இயக்கம் ஒன்று ஜனநாயக வழிக்கு வந்தால் அதை ஊக்குவிக்கும் வகையில்தான் மற்றைய அரசியல் சக்திகள் செயற்படவேண்டும். ஆனால், தேர்தல் அரசியலுக்காக கடந்த காலத்தை மாத்திரமே நினைவுபடுத்தவது எதிர்மறையான விளைவுகளையே கொண்டுவரும்.

கடந்தகால குற்றச் செயல்களுக்கு பொறுப்பானவர்கள் இன்றும் கூட ஜே.வி.பி.யின் அரசியல்குழுவில் உறுப்பினர்களாக மாற்றுக்கட்சி அரசியல்வாதிகள் கூட்டங்களில் பேசுகிறார்கள்.

கடந்த கால வன்முறை அரசியல் குறித்த தற்போதைய பிரசாரங்களை தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் மத்தியில் அதிகரித்திருக்கும் செல்வாக்கின் பின்புலத்திலேயே நோக்கவேண்டும்.

இன்னும் எட்டு மாதங்களில் நடத்தப்பட வேண்டியிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரா குமார முன்னரங்கத்தில் நிற்கும் ஒரு வேட்பாளராக நோக்கப்படுகிறார். ஜனாதிபதி விக்கிரமசிங்க தேர்தலில் போட்டியிடும் பட்சத்தில் அவருக்கும் அநுரா குமாரவுக்கும் இடையிலேயே பிரதான போட்டி இருக்கும் என்று அரசியல் அவதானிகள் எழுதுகிறார்கள்.

கடந்த கால ஜனாதிபதி தேர்தல்களுடன் ஒப்பிடும்போது விக்கிரமசிங்கவுக்கும் அநுரா குமாரவுக்கும் இடையிலான போட்டி மிகவும் வித்தியாசமானதாக இருக்கும் என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

அடுத்த தேசியத் தேர்தல்களுக்கு

> அரசியல் இலட்சியத்துக்காக ஆயுதம் ஏந்திய இயக்கம் நாளடைவில் அதன் போக்கை மாற்றிக்கொண்டு ஜனநாயக அரசியலில் பிரவேசித்து மக்களின் ஆதரவையும் பெறும்போது அதன் கடந்த கால வன்முறைகளை மாத்திரம் நினைவுபடுத்தி எதிர்ப்பிரசாரம் செய்வது ஏற்பட்ட மாற்றத்தை அலட்சியம் செய்வதற்கு ஒப்பானதாகும்.

தங்களை தயார் செய்வதில் பல மாதங்களுக்கு முன்னரே மிகுந்த முனைப்புடன் செயற்படத்தொடங்கிய தேசிய மக்கள் சக்தி ஒழுங்கமைவான முறையில் மக்கள் மத்தியில் பிரசாரங்களை முன்னெடுத்து வருகிறது.

ஆனால், பிரதான அரசியல் கட்சிகள் பெரும் குழப்பத்துக் குள்ளாகியிருக்கின்றன. ராஜபக்சாக்களின் சிறிலங்கா பொதுஜன பெரமுன பல அணிகளாகப் பிளவுபட்டிருக்கிறது.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் ஒரு ஆசனத்தைக்கூட கைப்பற்ற முடியாமல் வரலாற்றுத் தோல்வியைச் சந்தித்த ஐக்கிய தேசிய கட்சி அதன் செல்வாக்கை அதிகரிப்பதற்கு உறுதியான நடவடிக்கைகளை எடுக்கமுடியாமல் பலவீனப்பட்டிருக்கிறது. (14ஆம் பக்கம் பார்க்க)

# எழுபத்தைந்தாவது ஆண்டில்

## மீண்டும் தொடக்கப் புள்ளியிலிருந்து...!

பனங்காட்டான்

தமிழ் மக்களின் இனப்பிரச்னைக்குத் தீர்வு கிடைக்குமோ இல்லையோ, தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பிரச்னைக்கு விரைவில் தீர்வு காணப்பட வேண்டுமென்பதே இன்று முக்கியமாகியுள்ளது.

தமிழரசுக் கட்சிக்குள் பிரச்சனையென ஒன்றுமில்லையென்று கூறிய கட்சியின் உறுப்பினரான எனது நண்பர் ஒருவர், எல்லாம் சிறீதரன் தலைவராக வெற்றி பெற்றதால்தான் ஏற்பட்டது என்று வெகு சிம்பிளாகக் கூறினார். அவர் கூறிய தன் அர்த்தம், குகதாசன் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டதை காரணமாக்கி சிறீதரனை பதம் பார்த்ததானது என்பதாகும்.

எழுபத்தைந்து வருட வரலாற்றில் தமிழரசுக் கட்சிக்கு ஏற்பட்டுள்ள அவமானமாக இன்றைய நிலைமையை கட்சி ஆதரவாளர்கள் மட்டுமன்றி பொதுமக்களில் பெரும்பாலானோரும் பார்க்கின்றனர். கட்சி கழுதை தேய்ந்து கட்டெறும்பாக (எம்.பிக்களின் எண்ணிக்கையில்) மாறியிருந்தாலும், தமிழர்களின் அடையாளமாகவே பொதுவெளியில் பார்க்கப்படுகிறது.

ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து வெளியேறிய எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க புதிதாக சிறீலங்கா சுதந்திரக் கட்சியை ஆரம்பித்து குறுகிய காலத்தில் ஆட்சிக்கு வந்ததுபோல, ஜி.ஜி.பொன்னம்பலத்தின் தமிழ்க் காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறிய எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையிலானவர்கள் தமிழரசுக் கட்சியை உருவாக்கி அதனை விரைவாக தமிழ் மக்களின் தலைமைக் கட்சியாக மாற்றினார்கள்.

ஆனால், இன்று பதவிப் பித்து பிடித்தவர்களின் செயற்பாடுகளால் கட்சி அலங்கோலப்படுகிறது என்றால், அது அதன் நிர்வாகத்தை கேள்விக்குறியாக்குகிறது என்பதே அர்த்தம்.

கட்சியின் தலைவர் தெரிவும், செயலாளர் உட்பட நிர்வாகிகள் தெரிவும் முறையே கடந்த ஜனவரி 21ம் 27ம் திகதிகளில் இடம்பெற்றன. அன்றிலி ருந்து நொண்டி நிலைக்குப் போன கட்சி அடுத்த கட்டத்துக்குச் செல்வதற்கு இப்போது நீதிமன்றத் தீர்ப்பின் முன்னால் காத்து நிற்கிறது என்றே சொல்ல வேண்டும்.

மேற்சொன்ன பதவிகளுக்கான தெரிவுகள் தொடர்பான ஒரு வழக்கு திருமலை நீதிமன்றிலும், மற்றொன்று யாழ்ப்பாண நீதிமன்றிலும் விசாரணையில் உள்ளன. வழக்குத் தொடுநர்கள் வேற்றினத்தவர்கள் அல்ல, வேற்றுக் கட்சியினரும் அல்ல. எல்லோருமே வீட்டுக் கட்சியினர்தான்.

பத்து வருடங்களுக்கு மேலாக கட்சியின் தலைவராக இருந்துவந்த மாவை சேனாதிராஜா, புதிதாகத் தலைவராகத் தெரிவாகியும் பதவியேற்பு நிகழ்த்தாது போன சிவஞானம் சிறீதரன், தலைவர் பதவிக்குப் போட்டியிட்டு தோல்வியடைந்த எம்.ஏ.சுமந்திரன் உட்பட ஏழு பேர் மீது திருமலை வழக்கு தாக்கலாகியிருந்தது.

நீதிமன்ற விசாரணைகளுக்கு முன்னர் சுமுகமாக இந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கான சமரச முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதனை உறுதி செய்யும் வகையில் இம்முயற்சிகளில் ஈடுபட்டவர்களில் ஒருவரான கட்சியின் மூத்த துணைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் ஊடக சந்திப்பொன்றை நடத்தியிருந்தார்.

"தமிழரசுக் கட்சியில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு சுமுகமான தீர்வைக் காண்போம்" என அவர் தெரிவித்த அறிவிப்பு பல ஊடகங்களிலும் முதன்மைச் செய்தியாக வந்தது. கட்சித் தலைவரின் பொறுப்பு, செயலாளரின் கடமை என்பவைகளையும் அவர் விபரமாக விளக்கியிருந்தார்.



நீதிமன்ற விசாரணைகள் நடைபெறுவதற்கு முன்னராக ஏதோ ஒரு வகையில் சுமுகமான தீர்வு காணப்பட்டு ஒற்றுமை வெளிப்படுத்தப்படும் என்ற நம்பிக்கை அவரிடம் இருந்ததை அவரின் கூற்றினூடாக உணர முடிந்தது. 'சுமுகத் தீர்வு' என்று அவர் குறிப்பிட்ட வார்த்தை, ஏற்கனவே இடம்பெற்ற தெரிவுகள் மாற்றமின்றி சகல தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக எடுக்கப்படும் முடிவு அமையும் என்பதையே சுட்டி நின்றது.

ஆனால், இதுவரை அவ்வாறு எதுவும் அமையவில்லை. கட்சியின் தலைமை உட்பட சகல தெரிவுகளும் கட்சியின் யாப்பை மீறியுள்ளன என்றும், யாப்பின் பிரகாரம் அனைத்துப் பதவிகளையும் மீளத் தெரிவதற்கு கட்சி தயாராக இருப்பதாக சட்டவாளர் தவராசா வழக்கு விசாரணையில் தெரிவித்திருந்தார்.

இந்த வழக்கில் பெயரிடப்பட்ட ஏழு பேரில் ஒருவரான சுமந்திரன் அன்று நீதிமன்றில் சமுகமளிக்க முடியாதிருந்ததால் அவரது நிலைப்பாட்டை அறிவதற்காக வழக்கு அடுத்த மாதம் ஐந்தாம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டது. சுமந்திரன் ஒரு சட்டவாளராக இருப்பதால் அவரே தமக்காக ஆஜராகுவாரென்று எதிர்பார்க்கலாம்.

சகல பதவிகளையும் மீளத் தெரிவு செய்வதென்பதை சுமந்திரன் ஏற்றுக் கொள்வாரா இல்லையா என்பதை இப்போது சொல்ல முடியாது. ஆனால்,

சகல பதவிகளையும் மீளத்தெரிவதற்கு தயார் என்று மற்றையோர் தரப்பில் ஆஜரான சட்டவாளர் ஊடாக தெரிவிக்கப்பட்டதானது, சிவஞானம் சிறீதரன் மீண்டும் தலைவர் பதவிக்கு தெரிவாகுவாரென்ற நம்பிக்கையின் அடிப்படையிலானது என்று ஊகிக்க இடமுண்டு.

வழக்கு விசாரணையின் இறுதித் தீர்ப்பு வழங்கி மீண்டும் புதிய தெரிவுகள் இடம்பெறும்வரை, கடந்த பத்து வருடங்களாக கட்சியின் தலைவராக இருக்கும் மாவை சேனாதிராஜாவே தொடர்ந்து கட்சியின் தலைவராக இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. பதவி ஆசை கொண்ட இவர் யாப்பு முறைப்படி செயற்படாததே இன்றைய நெருக்கடிகளுக்குக் காரணமென கூறப்படுகிறது. தலைவர் சரியாக செயற்படவில்லையென்றால் அதனால் ஏற்படும் பாதிப்புகளை ஒரு கூட்டுப் பொறுப்பாகவே பார்த்து அதன் பொறுப்பை சகல நிர்வாகிகளும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பதை ஏனோ எவரும் பார்க்க விரும்பவில்லை.

முக்கியமாக கட்சியின் மூத்த துணைத்தலைவர், உபதலைவர்கள், செயலாளர் அல்லது பதில் செயலாளர், பொருளாளர் என்று நிர்வாகத்திலுள்ள சகலரும் இதன் கூட்டுப்பொறுப்பை ஏற்க வேண்டும். கட்சியின் மூத்த தலைவர், பெருந்தலைவர் என்ற மகுடங்களைச் சுமந்து கொண்டு கடும் தியானத்தில் இருக்கும் சம்பந்தனும் இதற்கான கூட்டுப்பொறுப்பை சுமக்க வேண்டியவர்களுள் ஒருவர்.

யாழ்ப்பாண நீதிமன்றத்தில் இடம்பெற்ற வழக்கு தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டை நடத்துவதற்கு எதிரானது. இந்த வழக்கை சுருக்கமாக முடிக்கக்கூடிய வாய்ப்பு இருப்பது என்பதே இரண்டு தரப்பினதும் பொதுவான நிலைப்பாடாக இருந்ததாக நீதிமன்றத்தில் ஆஜரான கட்சியின் சட்டவாளர் என்.சிறீகாந்தா ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

எனினும், சட்டவிதிகளுக்கு உடன்பட்டதாக மறுமொழி தாக்கல் செய்வதற்கு திகதி குறிப்பிடுமாறு தாம் கேட்டதாகவும், இந்த அடிப்படையில் வழக்கை ஏப்ரல் 25ஆம் திகதிக்கு நீதிபதி ஒத்தி வைத்திருப்பதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இரண்டு வழக்குகளின் விசாரணை அடிப்படையில் தேசிய மாநாட்டுக்கு ஏற்கனவே விதிக்கப்பட்ட இடைக்காலத் தடை மேலும் இரண்டு மாதங்கள் வரை நீடிக்கப்பட்டுள்ளது. இடைக்காலம் என்பது ஓர் இடர்காலமாகவே கட்சிக்கு இருக்குமென்று இப்பத்தியில் இரண்டு வாரங்களுக்கு முன்னர் குறிப்பிட்டிருந்தேன்.

> **Back to square one**
> *(மீண்டும் ஆரம்பத்திலிருந்து தொடங்குவது) என்று ஆங்கிலப் பதம் ஒன்றுண்டு. அதாவது, எந்த முன்னேற்றமும் காணப்படாதவிடத்து மீண்டும் தொடக்கப் புள்ளிக்கு திரும்புவது என்பது இதன் அர்த்தம். எழுபத்தைந்தாவது ஆண்டில் தமிழரசுக் கட்சி மீண்டும் தொடக்கப் புள்ளிக்கு இழுத்துச் செல்லப்படுகிறது. வீட்டுக்கு விடிவு வரவேண்டுமென்றால் அதற்குள் வாசம் செய்பவர்கள் பதவி மோகம் துறக்க வேண்டும்.*

நீதிமன்றங்களின் இறுதித் தீர்ப்பின் பின்னரே புதிய தெரிவுகள் இடம்பெறும் போது மீண்டும் நெருக்கடியான காலமொன்று உருவாகலாம். புதிய தலைவர், செயலாளர் மற்றும் நிர்வாகிகளைத் தெரிவு செய்யும்போது ஊர்மட்டக் கிளைகளில்கூட பெரும் போட்டிகளையும் வாதங்களையும் சந்திக்க வேண்டிவரும்.

அவ்வாறான நெருக்கடி வராமல் தடுப்பதற்கு கட்சியின் மூத்தவர்களும் முக்கியஸ்தர்களும் பக்கம் சாராது செயற்பட வேண்டும். கட்சியின் மூத்த துணைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானத்துக்கு இவ்வேளையில் பெரும் பொறுப்பு ஏற்படும். அல்லது அவராக அப்பொறுப்பை ஏற்கவேண்டி வரும்.

தமிழரசின் நெருக்கடிக்கு சுமுக தீர்வு காண்போமென்ற தமது அறைகூவலை செயற்படுத்த வேண்டிய பொறுப்பு அவரைச் சார்ந்தது. சிறீதரனும் சுமந்திரனும் தலைமைப் பதவிக்கு போட்டியிட்டபோது சுமந்திரனின் பெயருக்கு ஆதரவாக முதலில் ஒப்பமிட்டவர் இவர். ஆனால், கட்சியின் தலைவரான மாவை சேனாதிராஜா இருவரில் எவரையுமே ஆதரித்து ஒப்பமிடவில்லை.

தலைவர் பதவிக்குப் போட்டியிட்ட சிறீதரன் மாவை சேனாதிராஜாவைச் சந்தித்து தம்மை ஆதரித்து ஒப்பமிடுமாறு கேட்டபோது, கட்சியின் தலைவராக தாம் இருப்பதால் ஒரு வேட்பாளரை ஆதரித்து ஒப்பமிடுவது சரியன்று எனக்கூறி தவிர்த்துக் கொண்டார். இதனை தொலைக்காட்சி செவ்வியொன்றில் சிறீதரனே அப்போது தெரிவித்திருந்தார். ஆனால், மூத்த துணைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் ஒருபக்கம் சார்ந்து செயற்பட்டதால் நெருக்கடி நிலையின்போது அதனை தீர்த்து வைக்கும் வாய்ப்பை இழந்தவரானார்.

சீ.வி.கே.சிவஞானம் பன்முக ஆளுமை கொண்ட செயற்பாட்டாளர். இலங்கை உள்ளூராட்சிச் சேவையில் பல வருடங்கள் பணியாற்றியவர். மாநகரசபை ஆணையாளராகவும், விசேட ஆணையாளராகவும் நீண்ட காலம் கடமையாற்றியவர். நெருக்கடி காலத்தில் பல பொது அமைப்புகளின் தலைமைப் பதவியை ஏற்று சிறப்புற நடத்தியவர். 1987ம் ஆண்டு வடக்கும் கிழக்கும் இணைந்த இடைக்கால சபையின் தலைவர் பதவிக்கு விடுதலைப் புலிகளால் பரிந்துரை செய்யப்பட்டு நியமனமானவர். போர்க்காலத்தில் மண்ணில் நின்று மகத்தான சேவை புரிந்தவர். தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவிக்கு எல்லா வகையிலும் தகுதியான இவர் அதை விரும்பாததால் ஏற்பட்ட எதிர்பாராத சூழலே சிறீதரனும் சுமந்திரனும் போட்டியிடவும், இவர் ஒருபக்கம் சாயவும் வேண்டிய சூழலை ஏற்படுத்தியது.

"இனிமேல் கட்சியில் எந்தப் பதவிக்கும் போட்டி இருக்குமானால் அதில் நான் பங்குகொள்ள மாட்டேன்" என்று திரு. சிவஞானம் கடந்த மாதம் ஊடகர்கள் சந்திப்பில் தெரிவித்ததானது, முன்னைய தேர்தலில் அவர் பெற்றுக் கொண்ட பட்டறிவாக இருக்கலாம்.

"கட்சியின் தலைவர் உள்ளிட்ட சகல பதவிகளுக்குமான தெரிவு போட்டி மூலம் இடம்பெறுவது தவிர்க்கப்பட வேண்டும்" என்ற இவரது விருப்பமான கூற்றின்படி, நீதிமன்ற இறுதித் தீர்ப்பின் பின்னர் தெரிவு மீள இடம்பெறுமாயின் அதனை நடைமுறைப்படுத்துவதில் இவரது பங்களிப்பு மேற்கூறிய கூற்றின் வயப்பட்டதாக இருக்க வேண்டுமென்பது பலரதும் விருப்பம்.

தமிழரசுக் கட்சி அதன் எழுபத்தைந்தாவது ஆண்டில் முன்னர் எப்போதும் சந்தித்திராத நெருக்கடிக்குள் சிக்கி நீதிமன்றங்களின் தீர்ப்பை எதிர்நோக்கி நிற்கிறது. அந்தத் தீர்ப்புக்கு முன்னராகவே கட்சி எடுத்துள்ள முடிவு சகல தெரிவுகளையும் மீள நடத்துவது என்பது. இது நீதிமன்றத்துக்கும் அறிவிக்கப்பட்டாகி விட்டது. நீதிமன்றத்தின் தீர்ப்பு இதனை ஒட்டியதாக அமையுமாயின் இன்னொரு உள்வீட்டுத் தேர்தலை கட்சி எதிர்நோக்கும்.

Back to square one (மீண்டும் ஆரம்பத்திலிருந்து தொடங்குவது) என்று ஆங்கிலப் பதம் ஒன்றுண்டு. அதாவது எந்த முன்னேற்றமும் காணப்படாதவிடத்து மீண்டும் தொடக்கப் புள்ளிக்கு திரும்புவது என்பது இதன் அர்த்தம். எழுபத்தைந்தாவது ஆண்டில் தமிழரசுக் கட்சி மீண்டும் தொடக்கப் புள்ளிக்கு இழுத்துச் செல்லப்படுகிறது. வீடுக்கு விடிவு வரவேண்டுமென்றால் அதற்குள் வாசம் செய்பவர்கள் பதவி மோகம் துறக்க வேண்டும்.

# நீதி கோரும் தேசிய இனங்கள்

**கலாநிதி சந்திரசேகரம் பரமலிங்கம்**

## ‘தமிழர் நிரந்தர சிறுபான்மையினராக்கப்படுவார்களானால் ஜனநாயக பரிணாம வளர்ச்சியில் இலங்கை தோல்வியையே சந்திக்கும்’

இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவோடு, உலகில் புதிதாகத் தோற்றம் கண்ட அரசுகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு சென்றது. புதிய தேசங்களின் - அரசுகளின் இந்த அதிகரிப்பிற்கு முக்கிய காரணம் என்ன? ஐக்கிய நாடுகள் சபையின் உருவாக்கமும் அதன் சாசனமுமே முக்கிய காரணமாகும். அதுகால வரை குடியேற்ற நாடுகளைக் கட்டியாண்ட வல்லரசுகள், தாங்கள் ஆட்சி செலுத்திக்கொண்டிருந்த நாடுகளுக்கு சுதந்திரமும் விடுதலையும் வழங்கியாக வேண்டும் என்று சர்வதேச சட்ட வரையறைகளையும் நிபந்தனை களையும் முன்வைத்தன. ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள்மீது வல்லரசுகள் நடத்திக்கொண் டிருக்கும் ஆட்சிமுறை சட்டவிரோதமானது அன்று அவை தீர்ப்பெழுதின. அதுகாலவரை நாடுகளின் சுயநிர்ணய உரிமை என்பது அரசியற் கோரிக்கையாக மட்டுமே இருந்த நிலை இப்போது மாறிவிட்டது. சுயநிர்ணய உரிமை சர்வதேச சட்டத்தின் பிரிக்கமுடி யாத அங்கம் என்றும், காலனிய நாடுகள்மீது சுயநிர்ணய உரிமையை அமுலாக்கவேண்டிய பொறுப்பு வல்லரசு களுக்கு உண்டு என்றும் விதி செய்தது.

இத்தகைய சர்வதேச அரசியற் பின்னணியில், இந்தியா தனக்கென்ற தார்மீக நோக்கினைக்கொண்டு, தனித்துவத்துடன் செயற்பட்டு வந்திருக்கிறது. ஐக்கிய நாடுகள் சபையின் உருவாக்கத்திற்கான சட்ட வரைவுகள் பற்றிய ஆலோசனை மாநாடுகளில் இந்தியா ஆக்கபூர்வமான பங்களிப்பை நல்கியுள்ளது. ஐ. நா. வின் பாதுகாப்புச் சபை உலக சமாதானத்திற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் வாளாவிருக்கும் சந்தர்ப்பங்களில், பெருமளவு அங்கத்தவர்களைக்கொண்ட பொதுச் சபை தீர்மானங்களை எடுக்கும் அதிகாரத்தைச் சாசனங்களில் சேர்த்துக் கொள்வதற்கு இந்தியா ஏனைய நாடுகளுடன் இணைந்து முக்கிய பங்காற்றியுள்ளது.

இந்திய காங்கிரஸால் முன்னெடுக்கப்பட்ட இந்திய சுதந்திரப் போராட்டம் வேகம் பெற்றபோது, இரண்டாம் உலக யுத்தத்தோடு களைத்துப்போன பிரித்தானிய இராணுவம் இன்னுமொரு யுத்தத்தை எதிர்கொள்ளத் தயாரில்லை என்று அன்றைய பிரித்தானிய பிரதமர் பொதுமக்கள் சபையில் அறிவிக்க நேர்ந்தது. இவை இந்திய விடுதலையை முன்னோக்கி நகர்த்தின.

இந்தப் பின்னணியில் இலங்கைத் தீவைத் தொடர்ந்தும் வைத்திருப்பதனால் ஏற்படக்கூடிய லாப -நஷ்டக் கணக்கை பிரித்தானியா கையில் வைத்திருந்தது. இலங்கை அமைச்சரவை அப்போது பிரித்தானிய அரசிடம் முன்வைத்திருந்த சுயாட்சிக் கோரிக்கையையும், இரண்டாம் உலகயுத்தத்தின்போது இலங்கை அமைச்சரவைக்கு பிரித்தானிய அரசு அளித்த வாக்குறுதிகளையும் அது எடை போட்டுப் பார்த்தது. வரலாற்று ரீதியாக இலங்கைத் தீவு ஓர் இந்து மாகாணமே என்ற கருத்தும், இலங்கை ஒரு கலாசார சுயாட்சிப் பிரதேசமாக இருக்க முடியுமே தவிர, இறைமைகொண்ட நாடாக விளங்க முடியாது என்ற இந்தியத் தலைவர்களின் கருத்தும் மேலோங்கி நின்ற காலம் அதுவாகும்.

பிரித்தானிய அரசு தனது கையில் வைத்திருந்த லாப நஷ்டக் கணக்கோடு, தங்கள் நலன்களை இலங்கையில் எவ்வாறு தக்கவைத்துக் கொள்ளலாம் என்பதற்கான வழிவகைகளைத் தேடியது. அதுவரை அமுலாக்கப்படாதிருந்த அரசியற்சட்ட ஏற்பாடுகளோடு, சுதந்திர இலங்கையின் அரசாங்கத்தோடும் புதிய ஒப்பந்தங்களைச் செய்துகொள்ள முடிவெடுத்தது.

1947ஆம் ஆண்டு வெஸ்ற்மின்ஸ்ரர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இலங்கை சுதந்திர மசோதாவானது, இலங்கைக்கு சுதந்திரம் வழங்குவதற்கான சட்ட நடவடிக்கையில் பிரித்தானிய அரசு முனைப்புடன் இருந்தது என்பதை நிரூபிக்கிறது. அம்மசோதா மீதான விவாதங்களில் பங்குபற்றிய பாராளுமன்ற உறுப்பினர்கள் பல்வேறுபட்ட கருத்துகளையும் கரிசனத்தையும் வெளிப்படுத்தியிருந்தனர். அவற்றில் ஹோன்சி தொகுதி உறுப்பினர் சேர். டேவிட் கமன்ஸ் அன்று தெரிவித்த கருத்துகள் இன்றைய இலங்கையின் இடர்மிகுந்த சூழலில் நாம் கவனத்திற் கொள்ளவேண்டிய ஒன்றாகும். அந்த மசோதாமீது அவர் உரையாற்றுகையில் பின்வருமாறு கருத்துத் தெரிவித்தார்:

“இலங்கை ஓர் இன அலகு கொண்ட நாடு அல்ல. அத்தீவில் இரண்டு இனங்கள் வாழ்கின்றன. இலங்கைத் தமிழர்கள் மொத்த சனத்தொகையான 6,500,000 பேரில் 1,500,000 பேர்களைக்கொண்ட சமூகத்தவர்கள் ஆவர். இவர்கள் சிங்கள சமூகத்திலிருந்து இன, மத, சமூகப் பின்னணி போன்ற அடையாளங்களினால் வேறுபட்டவர்கள். அவர்கள் அபரிமிதமான திறமையும் வல்லமையும் கொண்டவர்களாவர். ஒரு நாட்டில் இன அடிப்படையிலான சிறுபான்மையினர் இருப்பார்களானால், அவர்கள் நிரந்தர அரசியற் சிறுபான்மையினராகக்கூடிய அபாயம் காணப்படும். அவ்வாறு அவர்கள் நிரந்தர சிறுபான்மையினராக்கப் படுவார்களானால், இலங்கை ஜனநாயக அடிப்படையில் பரிணாம வளர்ச்சி காண்பதில் தோல்வியையே சந்திக்கும். இந் நிலை, இந்த இரண்டு இன மக்கள்மீதும் மிகப்பெரிய பொறுப்புகளைச் சுமத்துகிறது. நியாயமான அவசியமேற்படின், தமிழர்களை நியாயமானதற்கும் மேலான உரிமைகளுடன் நடத்தவேண்டிய பொறுப்பினைச் சிங்கள மக்கள்மீது சுமத்துகிறது. இப் பொறுப்பு அரசியல் அதிகாரத்தில் மட்டுமல்ல, நிர்வாகம் சார்ந்த அதிகாரங்களினால் ஆனதாகவும் இருக்கவேண்டும். இவ்வாறு தமிழர்கள் நடாத்தப்படுவதன்மூலமே அவர்கள் தம்மை நிரந்தர அரசியற் சிறுபான்மையினராகக் கருதாத நிலை ஏற்படும்”.

## இலங்கையின் சுதந்திர மசோதா விவாதத்தில் பிரிட்டிஷ் எம்.பி.

இது, சேர். டேவிட் கமன்ஸ் பிரித்தானிய பாராளுமன்றத்தில் முன்வைத்த கருத்து. இலங்கையில் பிரித்தானிய ஆட்சி முடிவுற்று, பின்னர் நடந்த நிகழ்வுகளின் அடைப்படையில் நோக்கும்போது, இவரின் அரசியல் எதிர்வுகூறல் முற்று முழுவதும் பொருத்தமானது என்பது உறுதியாகிறது.

இந் நிலையில், ஐக்கிய நாடுகள் சபையினூடாகவும், சர்வதேச ரீதியாகவும் அரசுகள்மீது ஏற்படுத்தப்பட்டுள்ள சட்டக் கடமைப்பாடுகளை நோக்கும்போது, அரசுகள், தேசிய இனங்கள், சிறுபான்மைச் சமூகங்கள் என்பன சர்வதேச சட்டத்தின் முக்கிய பேசுபொருளாக மாறியிருப்பதை அவதானிக்கலாம். அவற்றின் உரிமைகளும் கடப்பாடுகளும் உறுதிப்படுத்தப்படும் நிலையும் வளர்ச்சி கண்டுள்ளது.

சிறுபான்மை இனங்களின் உரிமைகள், பாதுகாப்புகள் தொடர்பாக சட்டபூர்வமாக இவ்வளவு ஏற்பாடுகள் இருந்தபோதும், இலங்கையில் தமிழ்த் தேசிய இனமும் சிறுபான்மைச் சமூகங்களும் இன்றுவரை நீதி மறுக்கப்பட்ட இனங்களாகவே இருந்து வருகின்றன.

## ஐ. நா. மனித உரிமைகள் பேரவை தமிழர்களுக்கு நிவாரணத்தை பெற்றுத் தரவில்லை!

ஐக்கிய நாடுகள் சபையினதும் ஏனைய நீதித்துறை நிறுவனங்களினதும் செயலற்ற தன்மை காரணமாகவே இந்த நிலை நீடித்து வருகிறது.

மேலும், தமிழர்களின் இன்றைய அவல நிலைக்கு 1948இல் பிரித்தானிய அரசு ஏற்படுத்திய அரசியல் சட்ட ஏற்பாடுகள், இலங்கையின் புராதன தமிழ் அரசுகளது ஆள்புல எல்லைகள் அகற்றப்பட்டு, மத்தியப்படுத்தப்பட்ட அரசின் உருவாக்கத்தை மேலும் வலுப்படுத்திச் சென்றமையாகும். ஆனால், 1948ஆம் ஆண்டிலிருந்தே இந்த ஆள்புல எல்லைகள்பற்றி தமிழ் அரசியல் தலைவர்கள் பேசிவந்திருக்கிறார்கள். முன்னாள் வவுனியாத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சி. சுந்தரலிங்கம், அடங்காத் தமிழர் முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஆங்கிலேய ஆட்சியில் இடம்பெற்ற சட்டத் தவறுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதேபோன்று, சாவகச்சேரி தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் வி. குமாரசாமி ஐக்கிய நாடுகள் சபை மூலமாக நமது எல்லைகளை நிர்ணயம் செய்து, தமிழ், சிங்கள தனித்துவத்தையும் பாதுகாப்பையும் உறுதி செய்துகொள்வோம் என்று குரல் கொடுத்தார். சமஷ்டிக் கோரிக்கையும் அதனைத் தொடர்ந்த வட்டுக்கோட்டைத் தீர்மானமும் நாம் கவனத்திற் கொள்ளவேண்டிய அம்சங்களாகும்.

இந்திய வம்சாவளித் தமிழர்களின் வாக்குரிமையைக் கபளீகரம்செய்யச் சட்டம் இயற்றிய உடனேயே தமிழ் காங்கிரசிலிருந்து வெளியேறிய தந்தை செல்வநாயகமும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்து, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியை ஆரம்பித்துவைத்தனர். 1952ஆம் ஆண்டு பொதுத்தேர்தலை முதன்முறையாக எதிர்கொண்ட இக்கட்சி, 1956ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரசியல் ஆதரவினைப் பெற்று, இன்றுவரை சமஷ்டிக்கோரிக்கைக்கு உயிரூட்டி வருகின்றது.

1970ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் இலங்கை அரசியல் வரலாற்றில் முதன்முறையாக ஒரு கட்சிக்கு அல்லது கூட்டணிக்கு 2-3 பெரும்பான்மையை வழங்கியது. பதவிக்கு வந்த மக்கள் ஐக்கிய முன்னணி, நடைமுறையிலிருந்த சோல்பரி அரசியல் அமைப்பை மாற்றி, 1972 மே 22இல் புதிய இலங்கை அரசியல் யாப்பினைப் பிரகடனம் செய்தது. புதிய அரசியல் சட்டத்தின் வரைபு நிலைக் கூட்டங்களில் தமிழர் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகள் தோற்கடிக்கப்படவே, தமிழ் அரசியற் கட்சிகள் அரசியல் நிர்ணய சபையிலிருந்து வெளியேறின. மாற்றுத் திட்டத்துடன் அரசியற் செயற்பாட்டில் தீவிரங் காட்டின. தமிழர் அரசியல் புதிய வடிவம் பெறலானது.

1948ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்ற சகல பொதுத் தேர்தல்களிலும் சமஷ்டி முறையிலான அரசியல் சட்ட ஆட்சி முறையினைக் கோரிநின்ற தமிழ் அரசுக் கட்சி, வடக்கு - கிழக்கு மாகாணங்களின் பாராளுமன்ற ஆசனங்களில் பெரும்பான்மை பெற்று, தமிழ்த் தேசிய இனத்தின் தலைமையினைப் பேணிவந்துள்ளது.

பாராளுமன்ற வழிமுறையிலான அரசியற் செயற்பாடுகளின் பெறுமதியினையும் தமிழ்த் தேசிய இனத்தின் சட்ட உரிமைக் கோரிக்கைகளின் வலிமையையும் உணராது, அவை அரசினால் உதாசீனம் செய்யப்பட்டன. இதனாலேயே, ஆயுதப் போராட்டத்தின் மூலம் தமிழரசினை அடைவதற்கான வழிமுறைகள் தீவிரங்கொண்டன. ஐக்கிய நாடுகள் சபையின் 1948ஆம் ஆண்டின் சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் , ‘மனிதன் இறுதி ஆயுதமாக கொடுங்கோன்மைக்கும் அடக்குமுறைக்கும் எதிராகக் கிளர்ச்சிசெய்ய நிர்ப்பந்திக்கப்படாமல் இருக்கவேண்டுமானால், சட்ட ஆட்சிமூலம் மனித உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்பது அத்தியாவசியமானது’ என்று வலியுறுத்தியுள்ளது. ஆனால், இலங்கைச் சட்ட ஆட்சியாளர்கள் சட்ட ஆட்சி மூலம் இனப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதில் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. மாறாக, பலமான இராணுவத்தின் மூலம் போர் யுக்திகளையே கையாண்டனர். இதனால், வடக்கு, கிழக்கு மாகாணங்களின் தமிழர் தாயகம் பாரிய அழிவுகளையும் இழப்புகளையும் சந்தித்தது. இலங்கை அரசு சர்வதேச அரங்கில் போர்க் குற்றத்திற்கும் இனஅழிப்புக் குற்றச்சாட்டிற்கும் இலக்காகியது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் செயற்பாடுகளும் தமிழர்களுக்கு போதிய நிவாரணத்தைப் பெற்றுத் தரவில்லை. இந்நிலையில், 1948ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆம் நாள் ஏற்படுத்தப்பட்ட அரசியல் மாற்றம், தமிழ்த் தேசிய இனத்தைப் பொறுத்தவரையில் அடக்குமுறை ஆட்சியாளர்கள் மாற்றமே தவிர, சுதந்திரம் அல்ல என்பதே உண்மை.

இத்தகைய அரசியற் பின்னணியில், இலங்கையின் தேசிய இனங்களதும் சிறுபான்மையினதும் சட்ட அந்தஸ்தினை நோக்கும்போது பின்வரும் அம்சங்கள் தெளிவாகின்றன:

1. தமிழ், முஸ்லிம் தேசிய இனங்கள், சிங்கள பெரும்பான்மையினரால் கட்டுப்படுத்தப்படுகின்ற அரசாங்கங்களின் அடக்குமுறைக்கு உட்பட்டனவாகவே வாழ்ந்து வருவதாக உணரத் தலைப்பட்டுள்ளனர்.

2. கடந்த 76 வருட கால அரசியலும் ஆட்சிமுறையும் பௌத்த சிங்கள மேலாதிக்கம் நிறுவனமயப்படுத்தப்பட்டு வந்திருப்பதை உறுதி செய்கிறது.

3. இவர்கள் மேலாதிக்கம் செலுத்தும் அரசு தமிழ்த் தேசிய இனத்தின்மீதும், சிறுபான்மைச் சமூகங்கள்மீதும் செலுத்துகின்ற அதிகாரமும் ஒடுக்குமுறைகளும், பழைய குடியேற்ற ஆட்சித் தன்மையையே தெளிவாகப் பிரதிபலிக்கின்றது என்பதே இன்றைய யதார்த்தமாகும். ●

# சிறுபிள்ளை வேளாண்மை போல் ஆகிவிட்டதா?

நியூசிலாந்து சிற்சபேசன்

கடந்த நான்கு தசாப்தங்களில் “புலம்பெயர்ந்ததமிழர்” என்னும் சொற்பதம் கணிசமான பாவனைக்கு உரியதாகியிருக்கின்றது. அசாதாரணமான அரசியல் சூழலினால் இலங்கையிலிருந்து வெளியேறிய தமிழர்களே இவ்வாறு பெரும்பாலும் அழைக்கப்படுகின்றனர். புலம்பெயர்வு இயல்பாக உருவாகியதல்ல. நிர்பந்தம் காரணமாக உருவாகியதாகும்.

ஆரம்பங்களில், புதிய புலங்களில் தமக்கென ஒரு வாழ்க்கையை பூஜ்ஜியத்திலிருந்து ஆரம்பிப்பதிலேயே புலம்பெயர்ந்தோர் கவனத்தைக் கொண்டிருந்தனர். மறுவளத்தில், அசாதாரணமான அரசியல் மற்றும் யுத்தச் சூழ்நிலைகளைத் தாயகத்திலிருந்தோர் எதிர்கொண்டனர். சொல்லொணாச் சங்கடங்களுக்கு முகங்கொடுத்தனர். அதனால், இரண்டு தரப்பினரிடையேயும் படிப்படியான புரிதலை வளர்த்துக்கொள்ளக் கூடிய சூழல் இருக்கவில்லை. அதுபற்றிச் சிந்திக்கக்கூட யாருக்குமே நேரமிருக்கவில்லை. அந்தவகையிலேயே, காலப்போக்கில் இரண்டுதரப்பினருமே அந்நியப்பட்டனர்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் நேரடியான ஊடாட்டங்கள் ஆரம்பமாகின. ஆனால், அதற்கு முன்னரே இரண்டு தரப்பினருமே வெவ்வேறு துருவநிலைக்குப் போய்விட்டனர். தத்தமது நிலையிலிருந்தே, மற்றவர் தொடர்பான கணிப்பீடுகளை வளர்த்துக்கொண்டனர். வெளிப்படையான உரையாடல்கள் இடம்பெறுவதில்லை. இரண்டு தரப்புமே, மற்றவர் தொடர்பில் யதார்த்தமான அபிப்பிராயங்களை வளர்த்துக் கொள்ளவில்லை. அதனால், அப்பளம் போல் நொறுங்கிவிடக் கூடிய உறவு நிலையையே காணமுடிகின்றது. ஆகக் குறைந்தது, இவை தொடர்பிலான பிரக்ஞைகூட இருப்பதாகக் கருதமுடியவில்லை.

ஒரு தொகுதி புலம்பெயர்ந்தோர், தாயகத்துடனான உணர்வுபூர்வத் தொடர்புகளை இழந்துவிட்டனர். மற்றையோர், உயிரோட்டமான தொடர்பாடல்களை இழுத்துப்பிடித்துக் கொண்டுள்ளனர். இவர்கள், தாயகம் தொடர்பில் மிதமிஞ்சிய கவனத்தைக் கொண்டிருக்கின்றனர். அதனை ஒரு வகையான தீவிரப்போக்கு என்றுகூடச் சொல்லலாம்.




அத்தகையோரின் சிந்தனை, கவனம், செயல் என விழித்திருக்கும் நேரத்தின் கணிசமான பகுதி தாயகம் நோக்கியதாகவே காணப்படுகின்றது. அன்றாட வாழ்க்கை, அவர்கள் வாழும் சமூகத்தில் சகதமிழ் பேசுவோருடனான கலப்பு என்பவற்றுக்கு அப்பால் முழுமையான கவனத்தை தாயகம் நோக்கியே கொண்டிருக்கின்றனர். அதனால், தாயகம் தொடர்பில் மிதமிஞ்சிய அல்லது இயல்புக்கு மாறான பற்றுதலை வளர்த்துக் கொள்கின்றனர். பாசம் தான் வினைகளுக்கு காரணம் என்கிறது சைவசித்தாந்தம். ஆக, மிதமிஞ்சிய பற்றுதலே, தாயகத்தில் வாழ்கின்றவர்களை முகம்சுளிக்க வைக்கக்கூடிய வகையில், புலம்பெயர்ந்தோரின் செயற்பாடுகள் அமைவதற்கு காரணமாக இருக்கலாமோ என்றும் கேள்வி எழுகின்றது.

புலம்பெயர்ந்தோருடைய கணிசமான சமூகச் செயற்பாடுகள், தாயகத்தின் மேம்பாடு என்னும் கருப்பொருளை மையப்படுத்தியதாகவே அமைகின்றன. தங்களுடைய ஊர், தங்களுடைய பாடசாலை, தங்களுடைய கோவில், போரினால் பாதிக்கப்பட்டவர்களுடைய வாழ்வு என்ற வட்டத்திலேயே பெரும்பாலானவர்களின் எண்ணமும், செயலும் சுழல்கின்றன.

> “கடந்த ஈரேழு ஆண்டுகளில் புலம்பெயர்ந்த மற்றும் தாயகத்தமிழரின் கூட்டுமுயற்சி பரிணமித்திருக்கவேண்டும். ஒருவருடைய கையைப்பற்றிக்கொண்டு அடுத்தவர் வளர்ச்சிப்படிக்கட்டுகளில் ஏறியிருக்கவேண்டும். இரண்டு கைகளும் தட்டும்போதல்லவா ஓசை ஏற்படுகின்றது. இரண்டு தரப்பிடையே பரஸ்பர புரிதல் வளர்க்கப்படவில்லை. விட்டுக்கொடுப்புக்கள் இருப்பதில்லை”



புலம்பெயர்ந்தோரின் சமூக ஊடாட்டங்களிலுமே மேற்சொன்ன விடயங்களிலேயே அதிககவனம் குவிகின்றது. பாடசாலை நண்பர்கள், ஒன்றாக கல்வி கற்றவர்கள், ஊரவர்கள் என ஒன்றுகூடுகின்ற வேளைகளிலெல்லாம் தாயகத்தின் மேம்பாடு என்பதே தூக்கலான பேசுபொருளாகின்றது.

புலம்பெயர்ந்தோர், தம்முடைய ஊர்களிலே தாயக மேம்பாட்டுக்கு என நிதி சேகரிக்கும் நோக்கில் நிகழ்வுகளை ஏற்பாடு செய்கின்றனர். அவ்வாறான நிகழ்வுகளின் டிக்கெட்டுக்களைக் கண்டு விலகிப்போவோரின் எண்ணிக்கை ஊதிப்பெருக்கின்றமையையும் கவனிக்க முடிகின்றது. அதற்காக, அவ்வாறு விலகுவோர் தாயகமேம்பாட்டில் அக்கறை கொள்ளவில்லை என்பதல்ல. மாறாக, “அளவுக்கு மிஞ்சிய அமுதமும் நஞ்சு” என்று கொள்ளலாம். தாயகம் நோக்கிய நிதிசேகரிப்பு முயற்சி “விரலுக்கு மிஞ்சிய வீக்கம்” ஆகிவிட்டதோ என்ற எண்ணம் “புலம்பெயர்ந்த” சூழலில் ஏற்படுவதைக் கவனிக்கமுடிகின்றது.

புலம்பெயர்ந்தோரின் தாயகம் நோக்கிய கரிசனை, அவரவர் வாழ்கின்ற ஊர்களுடன் நின்றுவிடுவதில்லை. நவீன தொழில்நுட்ப வளர்ச்சியினால் பரிணமித்துள்ள சோஷல்மீடியா யுகத்தில், ஊடாட்டங்கள் தேசஎல்லைகளைக் கணப்பொழுதில் கடக்கின்றன. “தாயகத்துக்கு ஏதாவது செய்யவில்லை” எனில் வாழ்ந்து பயனில்லை என்ற தொனியில் அதிதீவிர மனப்பாங்கையும் சிலர் வளர்த்துக்கொண்டு உலாவுகின்றனர். வாட்ஸ்அப், வைபர், பேஃஸ்புக் என எங்கும் எதிலும் குழுக்கள் அமைக்கின்றனர். அதிலே, தாயக மேம்பாடு பற்றியே கதைக்கின்றார்கள். ஜூம் வழியாகக் கூடுகின்றனர். அங்கேயும் தாயக மேம்பாடு பற்றியே பேசுகின்றனர். பேசுவதோடு மட்டும் நின்றுவிடுவதில்லை. தர்க்கிக்கின்றனர். அதனால் கருத்து வேறுபாடுகள் உருவாகின்றன. கருத்து வேறுபாடுகளை, கருத்து வேறுபாடாக கடந்து செல்லத் திணறுகின்றனர். அதனால் உறவுகள் உடைகின்றன.

ஆக, தாயகம் நோக்கிய அதிதீவிர கவனத்தினால், புலம்பெயர்ந்ததமிழர் இரண்டு நேரடி எதிர்விளைவுகளைச் சந்திக்கின்றனர்.

ஒன்று, தாயகத்து விடயங்களில் அதீதமான உரிமை எடுத்துக்கொள்கின்றனர். தன்னிச்சையாக செயற்படுகின்றனர். அதனால், தாயகத்தில் முகச்சுளிப்புக்களை எதிர்கொள்கின்றனர்.

மற்றையது, தமது கையருகே உள்ள விடயங்களைக் கைதவறவிடுகின்றனர். அடுத்த தலைமுறைக்கான, உயிரோட்டமான பாண்பாட்டு அத்திவாரமொன்றை, காத்திரமானதாக புலம்பெயர்ந்தசூழலில் அமைப்பதில் முழுமையான கவனம் இல்லை. பண்பாட்டைக் கடத்துவது என்பது வேட்டி சேலை அணிவது, தமிழ் மற்றும் கலைகளைக் கற்றல் என்னும் குறுகிய புரிதலும் அதற்குக் காரணமாகும்.

நிற்க, புலம்பெயர்ந்தோரிடையே அதீதமான தாயகப்பார்வை கொண்டோர் ஓய்வுக்காலத்தை நோக்கி நகர ஆரம்பித்துவிட்டனர். அதனால், தாயகத்துக்கு கிடைக்கக்கூடிய பொருளாதார அனுகூலங்கள் அடுத்த பத்து ஆண்டுகளில் வற்றிவிடலாம். தாயகத்துக்கு வருவோரின் எண்ணிக்கையும் வீழ்ச்சியடையலாம்.

காற்றுள்ளபோதே நெல்லைத் தூற்றிக்கொள்ளவேண்டும் என அறுவடையின்போது சொல்வார்கள். கடந்த ஈரேழு ஆண்டுகளில் புலம்பெயர்ந்த மற்றும் தாயகத்தமிழரின் கூட்டுமுயற்சி பரிணமித்திருக்கவேண்டும். ஒருவருடைய கையைப்பற்றிக்கொண்டு அடுத்தவர் வளர்ச்சிப்படிக்கட்டுகளில் ஏறியிருக்கவேண்டும். இரண்டு கைகளும் தட்டும்போதல்லவா ஓசை ஏற்படுகின்றது. இரண்டு தரப்பிடையே பரஸ்பர புரிதல் வளர்க்கப்படவில்லை. விட்டுக்கொடுப்புக்கள் இருப்பதில்லை. முயலுக்கு மூன்றுகால் என்பதை நிறுவுவதிலேயே பிராயத்தனம் செலவாகின்றது. அதனால், புலம்பெயர்ந்த மற்றும் தாயகத் தமிழரின் கூட்டுமுயற்சி சிறுபிள்ளை வேளாண்மை போல் ஆகிவிட்டது.

# சிங்களவர்களுக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் இடையில் தெற்காசியாவில் வேறு எந்த இனக்குழுமங்களுக்கும் இடையில் இல்லாத மரபணு ஒற்றுமை!






இலங்கையின் இரு பெரிய இனக்குழுமங்களான சிங்களவர்களுக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் இடையில் இருக்கும் மரபணு ஒப்புடைமை தெற்காசியாவில் வேறு எந்த இனக்குழுமங்களுக்கும் இடையில் இருக்கக்கூடிய மரபணு ஒப்புடைமையை விடவும் மிகவும் நெருக்கமானது என்று ஆய்வொன்றின் மூலம் கண்டறியப்பட்டிருக்கிறது.

இலங்கையையும் இந்தியாவையும் சேர்ந்த மரபணு விஞ்ஞானிகளினால் கூட்டாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முடிவுகள் 'ஐ சயனஸ்' (i Science) என்ற சஞ்சிகையில் கடந்த வாரம் வெளியிடப்பட்டன. அந்த முடிவுகள் இலங்கையின் இனக்குழுமங்களின் தோற்றுவாய்களையும் அவற்றுக்கு இடையிலான சமூக ஊடாட்டங்களையும் தெளிவுபடுத்துகிறது.

குறிப்பிடத்தக்க கலாசார மற்றும் மொழியியல் வேறுபாடுகள் இருக்கின்ற போதிலும் சிங்களவர்களும் இலங்கைத் தமிழர்களும் கடந்த காலத்தில் பல நூற்றாண்டுகளாக கலந்து வாழ்ந்திருப்பதன் விளைவாக அவர்களுக்கிடையில் மரபணு ஒப்புடைமை ஏற்பட்டது என்று ஆய்வாளர்கள் கூறியிருக்கிறார்கள்.

"பெரும்பான்மைச் சிங்களவர்களுக்கும் சிறுபான்மையினரான இலங்கை தமிழர்களுக்கும் இடையில் பரஸ்பர அவநம்பிக்கையும் பகைமையும் இருந்துவருகின்ற போதிலும், உள்நாட்டுப் போரொன்றில் அவர்கள் ஈடுபட்டபோதிலும் எமது கண்டுபிடிப்புக்கள் மிகுந்த வியப்பைத் தருகின்றன" என்று இந்தியாவின் வாரணா சியில் உள்ள பெனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தின் விலங்கியல் இலாகாவை சேர்ந்த பேராசிரியர் கியனேஷ் வர் ஷோபே கூறுகிறார்.

லக்னோவில் உள்ள பிர்பால் சானி தொல்லியல் ஆய்வு நிறுவனத்தையும் மங்களூர் பல்கலைக்கழகத்தையும் இலங்கையின் கொழும்பு பல்கலைக் கழகத்தையும் சேர்ந்த ஆய்வாளர்களும் பெனாரஸ் இந்து பல்கலைக்கழக ஆய்வாளர்களுடன் சேர்ந்து இந்த ஆய்வை மேற்கொண் டனர்.

இலங்கை யின் மிகப்பெரிய இனக் குழுமத்தினரான சிங்கள வர்கள் சனத் தொகையில் 74.9 சதவீதத்தினராக இருக்கிறார்கள். இலங்கைத் தமிழர்களும் உள்நாட்டில் சோனகர் என்று அறியப்படும் முஸ்லிம்களும் முறையே 11.1 சதவீதத்தின ராகவும் 9.3 சதவீதத்தினராகவும் இருக்கின்ற அதே வேளை இந்தியத் தமிழர்கள் 4.1 சதவீதத்தினராக இருக் கிறார்கள். மிகவும் சிறிய ஒரு சதவீதத்தில் பறங்கியரும் மலாயர்களும் வேடர்களும் (ஆதிவாசிகள்) இருக்கி றார்கள் என்று ஆய்வாளர்கள் கூறியிருக்கிறார்கள்

சிங்களவர்களும் இலங்கைத் தமிழர்களும் கி.பி.500 அளவில் அதாவது 2500 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு குடிபெயர்ந்ததாக ஆய்வில் கண்டறியப்பட்டது.

"சிங்களவர்கள் இந்தியாவின் மேற்கு பாகத்தில் இருந்து குடிபெயர்ந்த அதேவேளை இலங்கைத் தமிழர்கள் தென்னிந்தியாவில் இருந்து குடிபெயர்ந்தார்கள். இரு இனத்தவர்களின் குடிபெயர்வுகளும் ஏககாலத்தில் இடம்பெற்றது. இரு தரப்புகளில் இருந்தும் பல நூறு வருடங்களாக மரபணு பரவல் அல்லது மரபணு ஓட்டம் (Flow of genes) இடம்பெற்றிருப்பதாக தோன்றுகிறது. அதன் விளைவே இந்த மரபணு ஒப்புடைமை"

(14ஆம் பக்கம் பார்க்க)

---



உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி

வியுக்தியார் பதில்கள்
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
viyukthiyar@gmail.com

# வியுக்தியார் பதில்கள்

**எம். அகிலேஸ்வரன்**
**சித்தன்கேணி.**

**கேள்வி:** தமிழ் அரசு கட்சியின் தலைவர், பொதுச் செயலாளருக்கான தெரிவுகள் கட்சியின் யாப்பை மீறியுள்ளன. எனவே, யாப்பின் பிரகாரம் தலைமை உள்ளிட்ட அனைத்து நிர்வாக பதவிகளையும் மீளத் தெரிவு செய்வதற்கு தயாராக இருப்பதாகவும், இதன்மூலம் மனுதாரர்கள் கோரும் நிவாரணங்களை வழங்கத் தயாராக உள்ளதாகவும் அந்தக் கட்சி திருகோணமலை நீதிமன்றில் உறுதியளித்துள்ளதே. இவர்கள் தங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டால் மாத்திரம் போதுமானதா?

**வியுக்தியார்:** யாப்பில் இருப்பதற்கு மாறாக பொதுச்சபையில் புதிதாக பலர் சேர்க்கப்பட்டிருக்கின்றனர் என்பதுதான் வழக்கில், வழக்காளி தரப்பில் சொல்லப்பட்ட முக்கிய குற்றச்சாட்டு. இப்படி யாப்பு மீறப்பட்டுத்தான் தலைவர் பதவிக்கான தேர்தல் நடைபெற்றதும் தெரிந்ததுதான். ஆனால் தேர்தல் முடிந்ததுதம், இப்படி யாப்பு மீறப்பட்டது என்பதை முதலில் வெளிச்சத்திற்கு கொண்டுவந்தவர் தலைவர் பதவிக்கான தேர்தலில் போட்டியிட்டு தோற்றுப்போன சுமந்திரன் தான். அவர் அவ்வாறு பொதுச்சபைக்கு ஆட்களை தெரிவு செய்த நிர்வாகத்தில் உதவிச் செயலாளராக இருந்தவர். இப்படி சட்டவிரோதமாக சேர்க்கப்பட்ட உறுப்பினர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் தற்செயலாக அவர் வெற்றிபெற்றிருந்தால், இன்று அவர் தலைமையில் கட்சி இயங்கிக்கொண்டிருக்கும். பிரச்சினையே இங்கே யார் வெற்றிபெற்றது என்பதுதான்.

---

**சபா. சிவநாதன்,**
**குரும்பசிட்டி, தெல்லிப்பழை.**

**கேள்வி:** நியாயமான காரணமின்றி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தன்னைக் கைது செய்து விளக்கமறியலில் வைத்ததன் மூலம் தனது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பு வழங்கி 100 மில்லியன் ரூபா நஷ்டஈட்டை தனக்குப்பெற்றுத் தருமாறு கோரி முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல சட்டத்தரணிகள் ஊடாக மனுத் தாக்கல் செய்துள்ளாரே?.

**வியுக்தியார்:** யுத்தம் நடந்துகொண்டிருந்தபோது அரசாங்கத்தின் பாதுகாப்பு விவகார பேச்சாளராக இருந்தவர் இவர். அந்தக் காலத்தில் எத்தனை நூற்றுக் கணக்கான தமிழ் இளைஞர்கள் இதேபோல கதறியிருப்பார்கள். இப்போதாவது அந்தக் கதறல்கள் அவருக்கு ஞாபகம் வரும் என்று நினைக்கின்றேன். அப்போதெல்லாம் மிகவும் இறுமாப்புடன் பதிலளித்துக் கொண்டிருந்தவர் இவர். இப்போதாவது நமது குற்றப் புலனாய்வு பிரிவினர் இப்படித்தான் தமிழ் இளைஞர்களையும் வைத்திருந்திருப்பார்களோ என்று அவர் நினைப்பார் என்று நம்புவோம்.

---

**எம். கௌதம்,**
**அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** இணையவழி பாதுகாப்பு சட்டத்திற்கு எதிராக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுவை உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது. குறித்த சட்டம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தினால் முன்வைக்கப்பட்ட திருத்தங்களை அதில் உள்வாங்காது

அதனை நிறைவேற்றியமையினால் அது அரசியலமைப்புக்கு முரணானது என உத்தரவிடக் கோரி, அவர் தாக்கல் செய்திருந்த மனுவை விசாரிக்காமலே நீதிமன்றம் நிராகரித்துவிட்டது. விசாரிக்காமலே நிராகரிப்பது என்றால் அது சட்டவிரோதமானது என்பது தெரியாமலா அவர் வழக்கை தாக்கல் செய்திருப்பார்?

**வியுக்தியார்:** ஏற்கனவே ஒருதடவை அவர் பாராளுமன்றத்தில் உரையாற்றியபோது, தான் ஒரு வழக்கை தாக்கல் செய்வது என்றால் அது எந்த நீதிபதி முன்னிலையில் தாக்கல் செய்கிறேன் என்பதையும் பார்த்துவிட்டுத் தான் தாக்கல் செய்வேன் என்று கூறியிருந்தார். சில வேளை அப்படி பார்க்காமல் தாக்கல் செய்தாரோ தெரியவில்லையே. விசாரிக்காமலே நிராகரிக்கப்படுகின்றது என்பதற்காக அது சட்டவிரோதமானது அல்ல என்பதல்ல. அது வழக்கு தாக்கல் செய்கின்ற முறையையும் பொறுத்து அது நிராகரிக்கப்படலாம் அல்லவா?

---

**கந்தையா முகுந்தன்**
**சுவாமியார் வீதி, கொழும்புத்துறை.**

**கேள்வி:** மகிந்த ராஜபக்ச ஜனதிபதியாக இருந்த காலத்தில் அதிகளவில் கடனை பெற்றதன் காரணமாகவே நாடு வங்குரோத்து அடைந்தது எனவும் இலங்கை தற்போது 90 பில்லியன் டொலர் கடனாளி எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். மரிக்கார் தெரிவித்துள்ளாரே?

**வியுக்தியார்:** மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த 2010- 2015 காலப்பகுதியில் அவர் பெற்ற கடன் எட்டு பில்லியன் டொலர்கள். ஆனால் அதற்குப்பிறகு நல்லாட்சி காலத்தில் 2015- 2019 வரை பெற்ற கடன் பன்னிரண்டு பில்லியன் டொலர்கள். மகிந்த காலத்தில் அவர் வாங்கிய கடன்களில் நாட்டுக்கு எந்த பயனுமற்ற அம்பாந்தோட்டை துறைமுகம், மாத்தளே விமானநிலையம், தாமரைக் கோபுரம் என்று கட்டிப்பட்டது. அதாவது அவை எப்படி செலவுசெய்தது என்பதாவது தெரியும். ஆனால், நல்லாட்சியில் வாங்கிய பன்னிரண்டு பில்லியனில் என்ன செய்தார்கள் என்பது தெரியவில்லை. மகிந்தவின் கடனுக்கு வட்டி கட்டினோம் என்று சொல்கிறார்கள். ஆனால் அவ்வளவும் வட்டிக்குத்தான் செலவுசெய்தார்களா என்பது தெரியவில்லை. அதற்காக மகிந்தவின் கடன்களும் இந்த நெருக்கடிக்கு காரணம் என்பது உண்மைதான், ஆனால் அதற்காக அதுதான் காரணம் என்று நல்லாட்சியில் அமைச்சராக இருந்த மரிக்கார் சொல்வதுதான் சரியாகப்படவில்லை.

---

**இரா. ஜெயருபன்,**
**பூந்தோட்டம், வவுனியா.**

**கேள்வி:** யாழ்ப்பாணம், மத்திய கல்லூரி அதிபர் நியமனம் முறைப்படி இடம்பெற்றும் அவரை பதவியேற்கவிடாமல் பதில் அதிபர் தடுப்பது சட்டவிரோதம் என இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது. உண்மையில் அங்கு என்னதான் நடக்கின்றது?

**வியுக்தியார்:** யாழ்ப்பாணத்தில் மிக மூத்த கல்லூரிகளில் ஒன்றான அந்தக் கல்லூரியில் பழைய மாணவர் சங்கம் 1909ம் ஆண்டிலிருந்து இயங்கிவருகின்றது. ஆனால் அண்மையில் பழைய மாணாக்கர் சங்கம் என்ற பெயரில் புதிய சங்கம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகின்றதாம். இந்த விவகாரம் நீதிமன்றம்வரை சென்றிருக்கின்றது என்றால் அந்த நிலமைகளை நாம் அறிந்துகொள்ளலாம். அதுபோலத்தானோ தெரியவில்லை இப்போது கல்லூரிக்கு இரண்டு அதிபர்களும் வந்திருக்கின்றனர். அந்த விவகாரமும் நீதிமன்றம் போகாமல் இருந்தால் நல்லது. கல்விச் சேவையில் பாழாய்ப்போன அரசியல் கலந்ததுதான் எல்லாவற்றுக்கும் காரணம் என்று நினைக்கின்றேன்.

---

**எஸ். செந்துஜன்,**
**ராசவீதி, கோப்பாய்.**

**கேள்வி:** ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று விடுதலையான சாந்தன் புதன் இரவு இலங்கைக்கு புறப்படவிருந்த நிலையிலே அன்று காலை 7.50 மணியளவில் மாரடைப்பால் மரணமான செய்தி வேதனை தருகின்றது. இப்படியொரு அவலம் யாருக்கும் வரக்கூடாதல்லவா?

**வியுக்தியார்:** நிச்சயமாக அது ஒரு துன்பியல் சம்பவம்தான். மகனை உயிருடன் ஒருமுறையாவது பார்க்கவேண்டும் என்று காத்திருந்த அவர் தாயாருக்கும், தாயாரை ஒரு தடவையாவது பாக்கவேண்டும் என்று விரும்பிய சாந்தனின் கனவும் ஒரு நொடியில் தகர்ந்திருக்கின்றது. சரியான தலைவர்கள் இல்லாத இனம் ஒன்று இத்தகைய அவலங்களைச் சந்திக்கவேண்டியது தவிர்க்கமுடியாததுதான்.

ஈழநாடு



# போரை எதிர்க்கும் இஸ்ரேலிய தாய்மார்கள் : கட்டாய இராணுவ பணியை மறுக்கும் இஸ்ரேலியர்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

காசா போருக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் இஸ்ரே லியர்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணமே உள்ளது. பெருகி வரும் இந்த இஸ்ரேலியர்களின் போர் எதிர்ப்பில், தாய்மார்கள் தங்கள் மகன்கள் அங்கு போரில் பணியாற்றுவதை தடுக்க பல போராட்டங் களை நடாத்தி வருகின்றனர்.

போரை எதிர்த்து போராடும் தாய்மார்கள், அவர்க ளின் இந்த புதிய அமைப்பை "The Mothers Cry" என்று அழைக்கிறார்கள். அவர்களில் பலருக்கு தங்கள் மகன் களை களத்திலிருந்து வீட்டிற்கு அழைத்து வர முயற்சிக் கிறார்கள்.

தெற்கு லெபனானில் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு மற் றும் அதிக சிப்பாய்களின் இறப்பு எண்ணிக்கைக்கு எதி ராக பொதுக் கருத்தைத் தூ ண்டியதற்காக, நான்கு தாய் மார்கள் என்று அழைக்கப்படும் சிப்பாய்களின் தாய்மார் களின் இதேபோன்ற அடிமட்ட எதிர்ப்பு இயக்கத்தி லிருந்து உத்வேகம் பெற்றார்கள்.

தற்போது காசா போருக்கு எதிரான தாய்மார்கள் முன்முயற்சி பொது வெளிப்பாட்டைப் பெற்றுள்ளது. அவர்கள் 2000 ஆம் ஆண்டில் இஸ்ரேலிய துருப்புக்கள் லெபனானில் இருந்து திரும்பப் பெறுவதற்கு வழிவகுத்த போராட்டத்தை ஒத்த வகையில் குரல் கொடுத்து வருகின்றனர்.




**கட்டாய ராணுவ பணிக்கு மறுப்பு:**




இஸ்ரேலிய இராணுவத்தில் கட்டாய பணிக்கு சேர மறுத்த பல இளம் இஸ்ரேலிய இளைஞர்கள் இராணுவ விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர். அத்துடன் உடனடியாக 30 நாள் சிறைத்தண்டனை அனுபவிக்க பலரும் இராணுவ சிறைக்கு அழைத்துச் செல்லப்பட் டுள்ளனர்.

இஸ்ரேல் குடிமக்கள் எல்லோரும் 18 வயது நிரம்பிய தும் கட்டாய இராணுவ சேவை செய்ய வேண்டும். ஆண்கள் 32 மாதங்களும், பெண்கள் 24 மாதங்களும் இராணுவப் பணியில் இணைந்திருக்க வேண்டும். தற்போது இந்த கட்டாய சேவைக்கு எதிராக பலர் குரல் கொடுத்துள்ளனர்.

வன்முறை வன்முறையைத் தீர்க்காது. அதனால்தான் நான் மறுக்கிறேன் என அண்மையில் கட்டாய சேவைக்கு மறுத்த டெல் அவிவ் இளைஞன் 'டீன் தால் மிட்னிக்' என்பவரின் வழக்கு உலகின் கவனத்தை பெற்றுள்ளது.

படுகொலைக்கு தீர்வு காண முடியாது என்று நான் உறுதியாக நம்புகிறேன் என்று அவர் கூறினார். காசா மீதான கொடூர தாக்குதல், ஹமாஸ் நடத்திய கொடூர மான படுகொலையைத் தீர்க்காது.

ஆனால், மத்திய இஸ்ரேலில் காசா வேலிக்கு அருகி லுள்ள டெல் ஹாஷோமரில் வாழும் இந்த இஸ்ரேலிய இளம் இளைஞன் மிட்னிக் தனது முடிவை உறுதியாக ஆதரித்தார்.

போர்க்கால அடிப்படையில் ஒரு நாட்டின் தனித்து வத்தை பேண இராணுவப் பணி அவசியமாகும். இத னால் இப்போது கட்டாய சேவையை மறுத்தால் சிறைத்தண்டனை என்பது வேதனையான முடிவாகும்.

**கட்டாய பணிக்கு எதிரான refuseniks:**

அத்துடன் பாலஸ்தீனப் பிரதேசங்களில் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பில் கட்டாய சேவைக்கு எதிரான பிரச்சாரத் தில் 'refuseniks'ஐ இணைக்கும் ஆதரவு வலையமைப் பான ஆநளயசமழவ இன் எக்ஸ் தளத்தில் இஸ்ரேலிய இளைஞன் 'டீன் தால் மிட்னிக்' என்பவரின் வழக்கு உலகின் பார்வைக்கு வெளிவந்துள்ளது.

இஸ்ரேலில் உள்ள ஊழல் அரசியல்வாதிகளிடமி ருந்தோ அல்லது ஹமாஸிடமிருந்தோ தீர்வு கிடைக் காது.

இது இரு தேசங்களின் மகன்கள் மற்றும் மகள்களான எங்களிடமிருந்து தீர்வு வரும் என்று மிட்னிக் உலகளா விய நிலைப்பாட்டை வெளிப்படுத்தி உள்ளார்.

இரத்தத்தால் சொர்க்கத்தை உருவாக்க முடியாது. கண்ணுக்கு ஒரு கண் என பறித்து நாம் அனைவரும் குரு டராக இருக்கிறோம். இராணுவ தீர்வு மூலம் அமைதி இல்லை. போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியபடி பல இளைஞர்கள் போர் எதிர்ப்புக்கு ஆதர வாக தற்போது போராடுகின்றனர்.

இஸ்ரேலிய இராணுவம் மனசாட்சியை எதிர்க்கும் நிலையைக் கொண்டுள்ளது. கட்டாய ராணுவ விதி விலக்குகள் பொதுவாக மத அடிப்படையில் மட்டுமே வழங்கப்படுகின்றன. தீவிர ஆர்த்தடாக்ஸ், ஹரேடி யூதர்கள் சட்டப்பூர்வமாக விலக்கு அளிக்கப்படுகி றார்கள். ஆயினும் அரசியல் கொள்கையின் விஷயமாக பணியாற்ற மறுப்பது சரியான ஆட்சேபனையாக கருதப்படாது.

**இஸ்ரேல் கட்டாய ராணுவ சேவை:**

உலகின் வலிமையான இராணுவங்கள் பட்டியலில் 18ஆவது இடத்தில் இருக்கிறது இஸ்ரேல். ராணுவத்தில் சேவை செய்வது ஆண்களுக்கும் பெண்களுக்கும் கட் டாயமாகும். இஸ்ரேலிய பாதுகாப்புப் படையில் ஆண் கள் மூன்று ஆண்டுகளும் பெண்கள் சுமார் இரண்டு ஆண்டுகளும் பணியாற்றுவது கட்டாயம்.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள இஸ்ரேலிய குடிமக்களுக்கு இது பொருந்தும். புதிதாகக் குடியேறிய வர்களுக்கும், சில மதங்களைச் சேர்ந்தவர்களுக்கும் மருத்துவ அடிப்படையில் இந்த விதியிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

கூடுதலாக, சில சிறப்பு விதிகளின் அடிப்படையில், விளையாட்டு வீரர்கள் குறுகிய காலத்திற்கு சேவை செய்யலாம்.

இஸ்ரேல் இராணுவத்தில் இப்போது 1,69,500 பேர் முழுநேரப் பணியில் இருக்கிறார்கள். இவர்களைத் தாண்டி 4,65,000 பேர் ரிசர்வ் பணியில் இருக்கிறார்கள். எந்த நேரத்திலும் இவர்களைக் களத்துக்கு அழைக்க முடியும்.

மத்தியக் கிழக்கில் துருக்கி, எகிப்து, ஈரான் போன்ற நாடுகளின் இராணுவங்களில் இஸ்ரேலைவிட வீரர்கள் எண்ணிக்கை அதிகம். ஆனாலும், நவீன ஆயுதங்கள் மற்றும் போர்முறையால் இஸ்ரேல் தனித்து நிற்கிறது.

**எதிரிகளால் சூழப்பட்ட தேசம்:**

வடக்கில் லெபனானும் சிரியாவும் இஸ்ரேலுக்கு அண்டை நாடுகளாக இருக்கின்றன. இஸ்ரேல் அயல் நாடுகள் எதனுடனும் நல்லுறவில் இல்லை. லெபனான் அரசும் எதிராக இருக்கிறது. அந்த நாட்டிலிருந்து செயல்படும் ஹிஸ்புல்லா அமைப்பினரும் தாக்கிக் கொண்டே இருக்கிறார்கள்.

மறுபுறமுள்ள சிரியாவில் உள்நாட்டுப் போர் இன்ன மும் நடக்கிறது. அங்கிருக்கும் அரசு படைகளும், எதிர்த்துப் போரிடும் அமைப்பினரும் இஸ்ரேலுடன் முரண்பட்டே வருகின்றனர்.

இஸ்ரேலின் கிழக்கில் ஜோர்டானும் ஈராக்கும் இருக் கின்றன. இரண்டுமே முன்னைய எதிரிகள்தான். சமீப ஆண்டுகளில் ஈராக்கில் ஸ்திரமற்ற சூழல் நிலவுவதால், அந்த வழியாகவும் அச்சுறுத்தல் இருக்கிறது. தெற்கில் இருக்கும் எகிப்து, சமீப காலமாகத்தான் இஸ்ரேலுடன்




அமைதியை பேணுகிறது.

எப்போதும் முற்றுகையில் இருக்கும் ஒரு தேசத்துக்கு இராணுவ பலம் முக்கியம். ஆண்களைப் போலவே பெண் வீராங்கனைகளையும் கட்டாய ராணுவ சைவை யாற்ற, போர்முனைக்கு அனுப்பும் சில நாடுகளில் இஸ் ரேலும் ஒன்று.

ஆயினும் இப்போது கட்டாய இராணுவ பணியை மறுக்கும் இஸ்ரேலியர் இளம் இளைஞர்களின் போராட்டம் வலுப்பெற்று வருகிறது.




அதேவேளை தற்போது முனைப்புப் பெற்றுள்ள போரை எதிர்க்கும் இஸ்ரேலிய அன்னையர்களின் செயற்பாடும் ஆளும் இஸ்ரேலிய அரசுக்கு பெருந்தலை யிடியாக மாறியுள்ளது.






# பாடசாலை வளாகத்துக்குள் தீக்குளிக்க முயன்ற ஆசிரியை

## மட்டக்களப்பில் சம்பவம்

*மட்டக்களப்பு, மார்ச் 03*

மட்டக்களப்பு பட்டிருப்பு கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலை ஒன்றில் இட மாற்றத்தால் ஆசிரியை ஒருவர் பாடசாலை வளாகத்தில் மண்ணெண்ணெய் ஊற்றி தற் கொலை செய்ய முயற்சித்த சம்பவமொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயத்தில் கடமையாற்றும் ஆசியை ஒருவரே தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

மேற்படி பாடசாலையின் கடமையாற்றி வந்த அதிபர் ஓரிரு மாதங்களுக்கு முன்னர் ஓய்வு பெற்று சென்றதனையடுத்து புதிதாக அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். புதிய அதிபருக்கும் ஆசிரியைக்கும் இடையில் தெடர்ச்சியாக முரண்பாடு நிலவியது. இந்த நிலையில், வலயம் விட்டு வல யம் இடமாற்றம் செய்யப்பட்டு மாகாண கல்வி திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட இட மாற்ற பட்டியலில் ஆசிரியையின் பெயர் இடம்பெற்றுள்ளது. இதனையடுத்து அதிர்ச்சியடைந்த ஆசிரியை இடமாற்றம் தொடர்பில் மேன்முறையீடு செய்துள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இட மாற்றக் கடிதம் வந்தவுடன் ஆசிரியையை உடனடியாக அனைத்து பொறுப்புக்களையும் கையளித்து செல்லுமாறு அதிபர் வற்புறுத்தியதினையடுத்து விரக்தி அடைந்த ஆசிரியை தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

இந்நிலையில் விரைந்து செயற்பட்ட சக ஆசிரியர்கள் அந்த ஆசிரியை தற்கொலை முயற்சியில் இருந்து காப்பாற்றியுள்ளனர். ஆசிரியை தற்போது மட்டு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இச் சம்பவம் தொடர்பில் பாடசாலை கல்வி சமூகத்தினர் மேல் அதிகாரிகளிடம் முறையீடு செய்துள்ளனர்.

(அ)

# ஜனாதிபதித் தேர்தலில் சஜித் போட்டியிடமாட்டார்!

## ஐக்கிய தேசியக் கட்சி கூறுகிறது

*கொழும்பு, மார்ச் 03*

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாச போட்டியிடமாட்டார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலதி ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தும் பெருமளவானோர் எதிர்வரும் 10ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்வார்கள். இதனாலேயே சஜித் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடமாட்டார் - என்றார்.

அத்துடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கலந்துரையாடியுள்ளனர். இந்த வகையில் 80இற்கும் மேற்பட்ட குழுக்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையவுள்ளன - என்றும் சொன்னார்.

ஐ. தே. க. தலைமையகமான சிறிகொத்தவில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே பாலித மேற்கண்ட விடயங்களை கூறினார்.

(ஐ)

# இந்திய விஜயத்துக்கு...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் அரை நூற்றாண்டுகால அரசியல் அனுபவத்தைக் கொண்ட ஜனாதிபதி விக்கிரமசிங்க தேர்தலில் களமிறங்குவதற்கு பரந்த கூட்டணியை அமைப்பதற்கு மற்றைய கட்சிகளை எதிர்பார்த்த வண்ணம் இருக்கிறார். பொதுஜன பெரமுனவில் இருந்து பிரிந்துசென்ற அரசியல்வாதிகளே விக்கிரமசிங்குக்கு ஆதரவாக தற்போது கூட்டங்களை ஏற்பாடு செய்கிறார்கள்.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்தியும் குழப்பத்துக்குள்ளாகியிருக்கிறது. அவர் அண்மைக்காலமாக தனது கட்சியில் இணைத்துவரும் முன்னாள் படையதிகாரிகளுக்கு ஒரு வாக்கு வங்கி இருக்கிறது என்று நம்புகிற அளவுக்கு தடுமாற்றமான அரசியல் செயற்பாடுகளில் அவர் ஈடுபடுகிறார். இந்த நிலைவரங்கள் எல்லாம் தேசிய மக்கள் சக்திக்கு அனுகூலமாக சூழ்நிலையை ஏற்படுத்துவதாக அவதானிகள் கூறுகிறார்கள்.

எது எவ்வாறிருந்தாலும், கடந்த ஜனாதிபதி தேர்தலில் வெறுமனே மூன்று சதவீத வாக்குகளைப் பெற்ற அநுரா குமார அடுத்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறுவதற்கு 50 சதவீத வாக்குகளைக் கைப்பற்றக்கூடிய அளவுக்கு ஒரு பாரிய பாய்ச்சல் ஏற்படுமா என்பது முக்கியமான கேள்வி. இது குறித்து இந்த பத்தியில் முன்னரும் கூறப்பட்டது.

தேசிய மக்கள் சக்தியின் எதிர்காலத் தேர்தல் வாய்ப்புக்களை ஜே.வி.பி.யின் இதுரையான தேர்தல் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு இனிமேலும் மதிப்பிடமுடியாது.

தேசிய மக்கள் சக்தியை இந்தியா மாத்திரமல்ல, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் உட்பட சர்வதேச சமூகத்தின் முன்னணி வல்லாதிக்க நாடுகளும் இலங்கையின் எதிர்கால அரசியலில் முக்கியமான சக்தியாக நோக்குகின்றன.

இன்று இந்த பத்தியில் கூறப்படும் கருத்துக்கள் தேசிய மக்கள் சக்தியின் கொள்கைகளையும் அணுகுமுறைகளையும் ஆதரிக்கும் நோக்கத்தைக் கொண்டவையல்ல. கட்டுரையாளர் தனது நிலைப்பாடுகளை ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் எழுதியிருக்கிறார் என்பது ஈழநாடு வாசகர்களுக்கு தெரியும்

ஆனால், இந்திய விஜயத்துக்கு பிறகு தேசிய மக்கள் சக்திக்கு எதிராக தீவிரப்படுத்தப்படும் பிரசாரங்கள் அவர்களுக்கு எதிராக ஏனைய அரசியல் சக்திகள் குறிப்பாக பிரதான அரசியல் கட்சிகள் வரும் நாட்களில் வகுக்கக்கூடிய அரசியல் தந்திரோபாயங்களுக்கு கட்டியம் கூறுவனவாக இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டுவதே நோக்கமாகும்

அநுரா குமார ஜனாதிபதியாக வருவாரா இல்லையா என்பது வேறு விடயம். ஆனால், அவரால் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறக்கூடியதாக இருக்குமானால், பாரம்பரியமான அரசியல் அதிகார வர்க்கமும் அதற்கு சேவை செயவதற்காகவே கட்டியெழுப்பப்பட்ட அரச இயந்திரமும் "வெளியாள்" ஒருவர் அதிகாரத்துக்கு அமைதியாக அனுமதிக்குமா என்பது முக்கியமான கேள்வி.

# இரட்டை இலை மீண்டும்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்றால் 2 உறுப்பினர் பதவிகளையும், பாராளு மன்றம் எனில் 4 உறுப்பினர் பதவிகளையும் பெற்றிருக்க வேண்டும். இவர்களுக்கு நிரந்தரமான சின்னங்கள் ஒதுக்கப்பட்டிருக்கும். அதற்கும் கீழ் பெரும் கட்சிகள் அங்கீகரிக்கப்படாத கட்சிகளாகவே கருதப்படும்.

ஆனால், இரட்டை இலை சின்னத்தின் வழக்கானது ஒரே கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட ஒரு பிரிவினரும், தற்போது நிபந்தனைகளின் பேரில் தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பிரிவினரும் உரிமை கோரும் பிரச்னை ஆகும்.

இதில் தேர்தல் ஆணையம் என்ன முடிவு எடுக்கு மென முன்னாள் தேர்தல் ஆணையர் கோபால்சுவாமி அவர்களிடம் கேட்டோம். அதற்கு பதிலளித்த அவர், "தேர்தல் ஆணையம் முன்பு போடப்பட்ட உத்தர வையே பின்பற்றும். ஏற்கனவே நீதிமன்றத்தின் உத்தரவின்பேரில் ஒரு கட்சியை அங்கீகரித்து முடிவு எடுக்கப் பட்ட பின்னர் ஆணையம் அதிலிருந்து மாறாது" என்கிறார்.

"வழக்கு சிவில் நீதிமன்றத்தில் நடக்கிறது என்றால், அதை முடித்துவிட்டு வாருங்கள். அங்கு உங்கள் பக்கம் தீர்ப்பு வந்தால் அதற்கு பின்பு தேர்தல் ஆணையம் முடிவு எடுக்கும் என்று தேர்தல் ஆணையம் கூறிவிடும்."

மேலும், "கட்சிகள், தலைவர்கள் என்ன வேண்டுமா னாலும் கேட்கலாம். ஆனால், தேர்தல் ஆணையம் விதிகள் படியே நடந்துக்கொள்ளும். எனவே ஏற்கனவே முடிவு எடுக்கப்பட்டுள்ள நிலையில், புதிய தீர்ப்பு எதுவும் வராமல் அதில் மாற்றம் வரப்போவதில்லை" என திட்டவட்டமாக தெரிவித்துவிட்டார்.

**'தொண்டர்களை திருப்திபடுத்தும் செயல்'**

ஓ.பன்னீர்செல்வத்தின் இந்த நகர்வு குறித்து மூத்த பத்திரிகையாளர் தராசு ஷியாம் அவர்களிடம் பேசி னோம். இது வெறும் தொண்டர்களை திருப்திபடுத்தும் செயலே என்று அழுத்தமாக கூறுகிறார் அவர்.

இதுகுறித்து விரிவாக பேசிய அவர், "பத்திரிகையாள ராக மட்டுமின்றி ஒரு வழக்கறிஞராகவும் சொல்கிறேன், கண்டிப்பாக ஓ.பன்னீர்செல்வத்திற்கு இரட்டை இலை கிடைக்க வாய்ப்பு இல்லை. இது ஏதோ ஆரம்ப கட்ட மாக இருந்தால் கூட பரவாயில்லை. ஆண்டுக் கணக்காக பல வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டு, இறுதியில் வந்து நிற்கிறோம். ஏற்கனவே நீதிமன்ற உத்தரவின்படி, தேர்தல் ஆணையம் எடப்பாடியை அங்கீகரித்து விட்டது. இரட்டை இலைக்கு கையெழுத்திடும் உரிமை அவரிடம் உள்ளது. எனவே ஓபிஎஸ் வெற்றி பெற வாய்ப்பே இல்லை. இது அவர்களுக்கும் தெரியும்" என் கிறார்.

**பாஜக தான் இயக்குகிறதா?**

ஓபிஎஸ்-இன் சமீபத்திய நகர்வு பாஜகவால் பின்னிருந்து செயல்படுத்தப்படும் திட்டம் என அரசியல் வட்டாரத்தில் பேசப்பட்டு வருகிறது. இந்நிலையில் இதுகுறித்து கேட்டபோது, "பாஜகவோடு பேச்சுவார்த்தையை இல்லையே. இதில் எங்கு பின்னால் இருந்து இயக்குவது? அதற்கெல்லாம் இடமில்லை" என்கிறார் புகழேந்தி.

அதே சமயம் "அப்படியெல்லாம் ஒரு கட்சியால் செய்ய முடியாது. இது ஒரு ஜனநாயக நாடு. எனவே பாஜகவால் அதை செய்ய முடியாது. அப்படி செய்ய நினைத்தால் அது தவறு" என்று கூறுகிறார் பாபு முருகவேல்.

மேலும், "இது முதல்நிலையில் இருக்கும் வழக்காக இருந்தால் கூட வேறு ஒருவரின் செல்வாக்கு இருக்கும் என்று சொல்லலாம். ஆனால், இந்த வழக்கு ஏற்கனவே பலகட்டங்களை தாண்டி இறுதிக்கு வந்துவிட்டதால் யார் நினைத்தாலும் இதில் ஒன்றும் செய்ய முடியாது" என்கிறார் தராசு ஷியாம்.

# சிங்களவர்களுக்கும்...

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்று கொழும்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சிரேஷ்ட விஞ்ஞானி ஆர். ரணசிங்க கூறினார்.

இந்த துறையில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மரபணு விபரங்களில் ஆழமானவையாக இருக்கவில்லை. அதனால் அவை தீர்க்கமான முடிவாகக் கொள்ளக்கூடியவையாக இருக்கவில்லை என்று ஆய்வா ளர்கள் குறிப்பிட்டார்கள்.

"ஒரு தனிநபரில் ஒரு ஐந்து இலட்சம் மரபணு மாற்றம் அல்லது மரபணு விகாரம் (Genetic mutations) மீது மேற்கொள்ளப்பட்ட முதலாவது ஆய்வாக இது அமைந்திருக்கிறது. இந்த பணியின் முனைப்பு மற்றும் பரந்தளவிலான வீச்செல்லை காரணமாக எமது ஆய்வின் முடிவுகள் தீர்க்கமானவையாகவும் வலுவானவை யாகவும் இருக்கிறது என்று நம்புகிறோம்" என்று ஷோபே கூறினார்.

ஒரு தனிநபரின் மரபணு விபரங்கள் அவரைச் சூழவுள்ள பகுதிகளில் உள்ளவர்களின் மரபணு விபரங்களுடன் பொதுத்தன்மையை வழமையாகக் கொண்டிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

"உதாரணமாக நாட்டின் வடபாகத்தைச் சேர்ந்த ஒருவரின் வட இந்தியாவில் உள்ள வேறு நகரங்களில் இருப்பவர்களுடன் பெருமளவுக்கு மரபணு ஒற்றுமையைக் கொண்டிருப்பார். ஆனால் இலங்கை ஆய்வில் தென்னிந்தியாவை விடவும் இந்தியாவின் மேற்கு பாகத்தின் மரபணுக் கூறுகளைக் கொண்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. சிங்களவர்களுக்கும் மராட்டியர்களுக்கும் ஒரு பொதுவான வேருக்கான தடயங்கள் இருக்கின்றன " என்று ரணசிங்க கூறினார்.

இனத்துவ மற்றும் மொழியியல் எல்லைக்கு அப்பால் இலங்கைத் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் வலுவான மரபணு பரவல் இருப்பது வியப்பைத் தருகின்ற இன்னொரு அம்சமாகும். தெற்கா சியப் பின்புலம் ஒன்றில் இது வழமைக்கு மாறானதாகும் என்றும் அவர் கூறினார்.

இந்தியாவில் உள்ள சிங்கபுரவில் இருந்து சிங்களவர்கள் வந்தார்கள் என்றும் புராணக்கதைகள் கூறுவதை அவதானித்த விஞ்ஞானிகள் குழு அது சரியான இடம் அல்ல என்று மறுத்துரைக்கிறார்கள்.

"இரண்டு சிந்தனைகளைக் கொண்ட பிரிவினர் இருக்கிறார்கள். ஒரு பிரிவினர் அந்த இடம் வடமேற்கு இந்தியா என்று கூறுகிறார்கள். மற்றையவர்கள் மேற்கு வங்காளம் என்று கூறுகிறார்கள். எமது ஆய்வு அவர்களின் தாயகம் வடமேற்கு இந்தியா என்பதை உறுதிப்படுத்தியிருக்கிறது." என்று பிர்பால் சானி தொல்லியல் ஆய்வு நிறுவனத்தின் புராதன மரபணு ஆய்வுகூடத்தைச் சேர்ந்த இன்னொரு மரபணு விஞ்ஞானி நிராஜ் ராய் கூறினார். ஷ

இந்த ஆய்வை நடத்தி முடிக்க ஐந்து வருடங்கள் சென்றது. இலங்கைத் தமிழர்கள் (88), சிங்களவர்கள் (129), இலங்கையைச் சேர்ந்த இந்தியத் தமிழர்கள் (56), இந்தியாவைச் சேர்ந்த இந்தியத் தமிழர்கள் (562) ஆகியோரிடமிருந்து 834 மரபணு மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

## முருகன், ராபர்ட்...

செய்யப்பட்ட வயது முதிர்ந்த 3 இலங்கைத் தமிழர்களுக்கு உண்மையான விடுதலை வழங்காத திமுக அரசுக்கு கண்டனம்.

தமிழக சிறையில் 32 ஆண்டுகால நீண்ட சிறைவாசம் அனுபவித்த இலங்கைத் தமிழர்கள் ராபர்ட் பயஸ், ஜெயகுமார், முருகன் சாந்தன் ஆகியோர் 11.11.2022 அன்று உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர். இலங்கை குடிமக்கள் என்பதால் அயல் நாட்டுக்கு அனுப்பும்வரை நடமாட்டத்துக்கு கட்டுப்பாடுகள் விதித்து திருச்சி சிறப்பு முகாமில் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், கடந்த மாதம் சிறப்பு முகாமின் இத்தகைய மனிதத் தன்மையற்ற நிர்வாகத்தின் காரணமாக திரு. சாந்தன் அவர்களின் உடல்நிலை மிகவும் மோசமடைந்து, எழுந்து நிற்கக்கூட முடியாமல் பல நாட்கள் சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த திரு. சாந்தன், கடந்த 28.2.2024 அன்று உடல்நலக் குறைவால் மரணமடைந்துள்ளது, தமிழக மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அங்கு அவர்கள், சக முகாம்வாசிகள் யாருடனும் பேசவோ பழகவோ, உடற்பயிற்சி நடைபயிற்சி செய்யவோ அனுமதி மறுக்கப்பட்டு தனிமை அறையில், சிறை போலவே அடைக்கப்பட்டிருந்தனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

ஏற்கெனவே 32 ஆண்டுகள் சிறையில் வாழ்க்கையை இழந்தவர்கள், விடுதலைக் காற்றை சுவாசிக்கப் போகிறோம் என்று பெருமூச்சு விடும்பொழுது, மீண்டும் சிறப்பு முகாம் எனும் கொடூரம் அவர்களது வாழ்க்கையில் அரங்கேறும் என்று சற்றும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். அதிலும், சிறையில் இருக்கும் அடிப்படை உரிமைகள் கூட மறுக்கப்பட்டு, மூச்சு முட்ட தனிமைச் சிறையினில் அடைக்கப்படுவோம் என்று நிச்சயமாக எதிர்பார்த்திருக்கமாட்டார்கள்.

இதனால், கடுமையான மன உளைச்சலுக்கும், உடல் உபாதைகளுக்கும் ஆளாக்கப்பட்டு இவர்கள் அனைவரும் தவித்து வந்துள்ளனர். சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டதன் நோக்கமே அவர்களை வெளிநாட்டுக்கு அனுப்ப வேண்டும் என்பது தான்.

முகாமில் அடைக்கப்படுவதற்கு முன்பே கூட, எந்த நாட்டுக்குச் செல்லப் போகிறீர்கள் என்று அவர்களுடைய விருப்பத்தை அரசு அதிகாரிகள் கேட்ட பொழுது, அவர்கள் இலங்கை சென்றால் ஆபத்து மற்றும் தங்களுக்கு அங்கு வாழ்வாதாரம் எதுவும் இல்லை என்றும், அதனால் வெளி நாடுகளில் வாழும் தங்களுடைய குடும்பத்தினருடன் செல்ல விரும்புவதாகவும் தெரிவித்திருந்தனர். ஆனால், இன்றைய நாள்வரை அவர்கள் விரும்பும் வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பது தொடர்பாக சம்பந்தப்பட்ட அரசு எந்தவித முடிவும் எடுத்ததாகத் தெரியவில்லை.

கருணாநிதி முதலமைச்சராக இருந்த பொழுது, ஏப்ரல் 2010-ஆம் ஆண்டு பிரபாகரனின் வயதான தாயார் உடல் நலக் குறைவு காரணமாக மருத்துவ சிகிச்சைக்காக முதலில் சென்னைக்கு வந்தபொழுது, அவருக்கு மருத்துவ சிகிச்சை அளிக்க மறுத்து விமானத்தில் இருந்து இறங்கவிடாமல் திருப்பி அனுப்பியது அப்போதைய மைனா ரிட்டி திமுக அரசும், மத்திய காங்கிரஸ் அரசும்தான்.

அதேபோன்று இன்று, விடுதலை பெற்ற திரு. சாந்தனை காலத்தே வெளிநாடு செல்ல மத்திய அரசுடன் பேசி, உரிய அனுமதி வாங்கித் தராத காரணத்தால், இறுதிக் காலத்தில் தனது குடும்பத்தினருடன் வாழ முடியாமல் மரணமடைந்துள்ளதற்கு இந்த நிர்வாகத் திறனற்ற, மனிதாபிமானமற்ற திமுக அரசே முழு பொறுப்பை ஏற்க வேண்டும்.

இனியாவது, மீதமுள்ள மூன்று பேரின் கோரிக்கைகளை உடனடியாகப் பரிசீலித்து, கண் பார்வை குறைபாடு ஏற்பட்டு தவறான சிகிச்சையில் ஒரு கண்ணில் பார்வையை இழந்த ஜெயகுமார் மற்றும் உடல்நலக் குறைவால் அவதியுறும் ராபர்ட் பயஸ் மற்றும் முருகன் ஆகியோரது கடைசி காலத்தில், எஞ்சிய வாழ்நாளை அவர்களுடைய குடும்பத்தினருடன் வசிப்பதற்கு, திருச்சி முகாமில் தனிமைச் சிறையில் இருந்து அவர்கள் விரும்பும் நாடுகளுக்குச் செல்ல தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு, இந்திய வெளியுறவுத் துறையையும், விடியா திமுக அரசின் முதலமைச்சரையும் வலியுறுத்துகிறேன்-என்றார். (அ)

## ஊழல்....

தூண்களாக நிறைவேற்றுதுறை, சட்டத்துறை மற்றும் நீதித்துறை என் பன இருந்தாலும், ஜனநாயகம் பெயரளவில் மட்டுமே செயல்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையானவர்கள் ஊழல்வாதிகளை பாது காப்பதாகவும் திருட்டு, இலஞ்சம் மற்றும் மோசடிகளை பாதுகாத்து வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சில மாதங்களுக்கு முன்னர், மருந்துப் பொருள் கொள்வனவு செயன்முறையில் நடந்த மோசடி உண்மை வெளிவந்ததையடுத்து, முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிராக அவ நம்பிக்கை பிரேரணையை ஐக்கிய மக்கள் சக்தி கொண்டுவந்தது.

இதன் போது சுகாதார அமைச்சரைப் பாதுகாப்பதில் அரசாங்கத்தின் 113 உறுப்பினர்கள் ஈடுபட்டனர்.

நாட்டை ஆளும் ஜனாதிபதி அவ ரைப் பாதுகாக்க செயற்பட்டதாகவும் எதிர்க் கட்சித் தலைவர் குற்றஞ்சுமத்தியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி கொண்டு வந்துள்ள அவ நம்பிக்கை பிரேரணை யின் முக்கியத்துவம் தற்போது வெளிப் பட்டுள்ளது.

நாட்டிற்கு பயன் தராத திட்டங்களுக்கு பெரும் கடன் வாங்கி ஊழல், மோசடி, திருட்டு என பெரிய அளவில் இயங்கி வருவதால் நமது நாடு 90 பில்லி யன் டொலர் கடனாளியாக மாறியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் நாட்டை அழித்தவர்களை வெளிப் படைத்தன்மையுடன் நீதிமன்றில் முன் னிறுத்தி தண்டித்து, நாட்டின் வளங்கள் நாட்டுக்கு மீண்டும் கொண்டு வரப் படும் என்றார். (அ)

## சாந்தனின்....

செலுத்துமாறு அழைப்பு விடுத்துள் ளார்.

இன்று காலை 8 மணிக்கு வவுனியா வில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்படும் சாந்தனின் புகழுடல், மாங்குளம் பகுதிக்கு 9.00 மணிக்கு எடுத்துவரப்பட வுள்ளது.

தொடர்ந்து காலை 10.30 மணிக்கு கிளிநொச்சியில் மக்கள் அஞ்சலியின் பின்னராக யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கொடிகாமம்-நெல்லியடி ஊடாக அவரது பிறந்த மண்ணான உடுப்பிட்டிக்கு எடுத்து வரப்பட்டு வல்வெட்டித்துறை தீருவி லில் பிற்பகல் 2.00 மணி முதல் 3.00 மணிவரை மக்கள் அஞ்சலிக்கு வைக்கப் படவுள்ளது.

மாலை அவரது வீட்டிற்கு எடுத்துச் செல்லப்படும் புகழுடல் அடுத்த தின மான திங்கட்கிழமை அவரது குடும்ப மயானமான எள்ளங்குளம் மயானத்தில் அடக்கம் செய்யப்படவுள்ளது.

வவுனியா, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் முன்னெடுக்கப்படவுள்ள அஞ்சலி நிகழ்வுகளில் வேறுபாடுகளை களைந்து அனைவரையும் அணி திரண்டு அஞ்சலி செலுத்த அழைப்பு விடுத்துள்ள பொது அமைப்புக்கள், அனைத்து இடங்களிலும் நீதி கோரியும் துக்கதினத்தை நினைவு கூரும் வகையில் கறுப்பு கொடிகளை தொங்க விடவும் கோரிக்கை விடுத்துள்ளன. (அ)

# இயக்கச்சிப் பகுதியில் காணிகளை பிடிக்கும் தென்னிலங்கைவாசிகள்!

கிளிநொச்சி பளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இயக்கச்சி பகுதியில் கடந்த சில நாட்களாக தென்னிலங்கையை சேர்ந்த பெரும்பான்மை இனத்தவர்கள் சிலர் காடுகளை வெட்டி காணி பிடிக்கும் நடவடிக்கைகளில் ஈடுப்பட்டுள்ளதாக பிரதேச பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில நாட்களாக ஆனையிறவுக்கும் இயக்கச்சிக்கும் இடையில் ஏ-9 வீதிக்கு கிழக்கு பக்கமாக உள்ள காட்டுப் பகுதியில் இயந்திரங்கள் மூலம் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் சிலர் காடுகளை வெட்டி பல ஏக்கர் பரளப்பளவில் காணிகளை பிடிக்கும் முயற்சிகளில் ஈடுப்பட்டு வருகின்றனர். இந்த பிரதேசத்திற்கு அருகில் இராணுவ முகாம் ஒன்றும் இருக்கிறது என பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர், பளை பொலிஸார், கிராம அலுவலர் உள்ளிட்டவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றதாகவும், ஆனால் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் தெரிவிக்கும் பொது மக்கள், தாம் காடுகளை வெட்டுகின்றவர்களிடம் சென்று விசாரித்த போது அவர்கள் பதிலளிக்கவில்லை என்றும் கூறினர்.

எனவே உரிய தரப்பினர் குறித்த காடழிப்பு விடயம் தொடர்பில் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் பிரதேச பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

## வெளிநாட்டு....

ஆண்டு முழுவதும் திறைசேரிக்கு மூன்று ஆயிரம் கோடி ரூபாய் மட்டுமே கிடைத்ததாகவும், அரசு ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க 2 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் செலவிடப்பட்ட தாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், நாட்டில் வாங்கிய கடனுக்கான வட்டிக்கு இரண்டு ட்ரில்லியன்களுக்கு மேல் செலுத்த வேண்டியுள்ளதாகவும், அதற்கேற்ப எஞ்சிய செலவுகளை கடனாகப் பெற்றுக் கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## வெடுக்குநாறி....

பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன. இந்நிலையில் கடந்த மாதம் 11 ஆம் திகதி கொழும்பில் உள்ள தேசிய மரபுரிமைகளை பாது காப்பதற்கான அமைப்பின் தலைவர் மெதகொட அபய திஸ்ஸ தேரர், சர்ச் சைக்குரிய முல்லைத்தீவு குருந்தூர் மலை விகாராதிபதி கல்கமுவ சாந்த போதி தேரர் உள்ளிட்ட குழுவினர் இராணுவ பாதுகாப்புடன் வெடுக்கு நாறி மலை ஆதிசிவன் ஆலயத்திற்கு சென்று பார்வையிட்டு இருந்தனர்.

எதிர்வரும் 8 ஆம் திகதி சிவராத்திரி விரதம் அனுஸ்டிக்கப்படவுள்ள நிலையில் குருந்தூர் மலை விகாராதிபதி சமூக வலைத்தளத்தில் எதிர்வரும் 8 ஆம் திகதி பௌத்த இடம் நெடுங் கேணியில் ஆக்கிரமிக்கப்படவுள்ளது. அதனை பாதுக்காக அணிதிரள்வோம் என பதிவு செய்துள்ளார்.

ஆனால், ஆலய நிர்வாகத்தினர் வழமை போன்று சிவராத்திரி பூஜை வழிபாடுகளை மேற்கொள்ள ஏற்பாடுகளை செய்துள்ளதுடன், வெளிச்சத்திற்காக மின்பிறப்பாக்கி பயன்படுத்துவதாக இருந்தால் நீதிமன்றில் அனுமதியைப் பெறுமாறு நெடுங்கேணி பொலிசார் ஆலய நிர்வாகத்தினருக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

இதனடிப்படையில் ஆலய நிர்வாகத்தினர் மின்பிறப்பாக்கி பயன்படுத்த அனுமதி கோரி சட்டத்தரணி ஊடாக கடந்த வியாழக்கிழமை மன்றின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தனர்.

இது தொடர்பில் ஆராய்ந்து, எதிர்வரும் திங்கள் கிழமை முடிவை அறிவிப்பதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (அ)

## ஜனாதிபதி....

ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும். பொதுத்தேர்தலுக்கு காலம் உள்ளது. எனவே, ஜனாதிபதி தேர்தலே முதலில் நடத்தப்படும் என்பது நூறு வீதம் உறுதி.

தேர்தலில் தேசிய வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க களமிறங்குவார். பரந்தப்பட்ட கூட்டணி அமைக்கப் படும். நெருக்கடி நிலையில் இருந்து ஜனாதிபதியும், அமைச்சர்களுமே அர்ப்பணிப்புடன் நாட்டை மீட்டனர்.

அதேவேளை, சம்பள உயர்வு தொடர்பில் மத்திய வங்கி எடுத்துள்ள முடிவு தவறு. அது மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டும்." - என்றார். (அ)

## வடக்குக்கு....

அங்கும் பல்வேறு தரப்பினருடன் சந்திப்புக்களை மேற்கொள்வுள்ளார்.

இதனையடுத்து எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ள அவர், இரண்டு நாட்கள் அங்கு தங்கியிருப்பதோடு பொது மக்கள் சந்திப்பில் பங்கேற்று, தொடர்ந்து தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களை சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

குறிப்பாக, இலங்கை தமிழ் அரசு கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி உள்ளிட்ட கட்சிகளின் பிரதிநிதிகளை சந்திப்பதற்கு தற்போது ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அக் கட்சியின் தகவல்கள் தெரிவித்துள்ளன.

முன்னதாக, கடந்த மாதத்தின் நடுப் பகுதியில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்த அக்கட்சியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் பிமல் ரத்நாயக்க, ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் பங்காளிக்கட்சிகளான தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி என்.சிறீகாந்தா, ஜனநாயக போராளிகள் கட்சியின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்து உரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(அ)

## பாதிக்கப்பட்டோருக்கு....

பல தசாப்தங்களாக நீடித்த உள்நாட்டு யுத்தம் நிறைவடைந்து இந்த வருடத்துடன் 15 வருடங்கள் நிறைவு பெறுகின்றன. எனினும், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இன்னமும் அக்கறை செலுத்தப்படாமல் உள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார்.

காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் தமது அன்புக்குரியவர்களை தொடர்ந்தும் தேடி வருவதுடன், அவர்கள் அச்சுறுத்தல்கள், கைதுகள், வன்முறைகளையும் எதிர்கொள்வதாக ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் குறிப்பிட்டார்.

இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் காணிப் பிரச்னைகள் அதிகரித்து வருகின்றமையால், மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அதிகாரப் பரவலாக்கத்திற்கான வழிமுறைகளாக உறுதியளிக்கப்பட்டிருந்தாலும் தற்போது அவை நடைமுறைப் படுத்தப்படவில்லை என குறிப்பிட்ட அவர், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்று சுமார் 5 வருடங்கள் ஆகின்ற போதிலும், உயர் நீதிமன்றத்தின் உத்தரவின் மத்தியிலும் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்ந்தும் உண்மை மற்றும் நீதியை தேடிக்கொண்டு இருப்பதாக அவர் தெரிவித்தார்.

உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான டுஆணைக்குழுவிற்கான சட்டவரைபொன்றை அரசாங்கம் அறிமுகப் படுத்தியுள்ள போதிலும், நம்பத்தகுந்த உண்மைகளை கண்டறிவதற்கான சூழல் இல்லை எனவும் அவர் கூறினார். (அ)

ஈழநாடு
Eelanadu

# யாழ். இந்திய துணை தூதரகத்தை முற்றுகையிட்டு மார்ச் 5 போராட்டம்

## வடக்கு மீனவர் சங்கங்கள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 03

**வடக்கில் உள்ள இந்திய துணை தூதரகத்தை முற்றுகை இடுவதற்கான போராட்டம் 5ஆம் திகதி கச்சேரியில் இருந்து ஆரம்பமாகி யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகம் வரை நடைபெறும் என வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர் எம்.வி. சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.**

அவரது நேற்று இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த 23ஆம் திகதி வடக்கு மாகாண கடற்தொழிலாளர் இணையத்தின் பொது சபை கூட்டமானது முல்லைத்தீவிலே நடைபெற்றது.

அந்த கூட்டத்தில் 5ஆம் திகதி நாங்கள் வடக்கில் உள்ள இந்திய துணை தூதரகத்தை முற்றுகை இடுவதற்கான போராட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தோம்.

அந்த வகையில் இந்த போராட்டமானது 5ஆம் திகதி கச்சேரியில் இருந்து ஆரம்பமாகி யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகம் வரை நடைபெறும்.

இந்த போராட்டத்தை ஆக்க பூர்வமான, ஒரு உணர்ச்சிபூர்வமான போராட்டமாக மாற்ற வேண்டுமாக இருந்தால், இங்கே உள்ள பல அமைப்புகள், அனைத்து கடல் தொழிலாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என அனைவரும் அதில் முழுமையாக பங்குபற்றி வெற்றிபெறச் செய்ய வேண்டும்.

இந்தியாவிலிருந்து வருகின்ற படகுகளை நிறுத்துவதற்கு எமது அரசாங்கத்தால் முடியாது. அரசாங்கம் ஏமாற்றிக்கொண்டிருக்கிறது. இந்திய அரசாங்கம் நடித்துக்கொண்டு ஏமாற்றிக் கொண்டிருக்கிறது. அது எங்களுக்கு தெரிந்த விடயம்.

வட புலத்திலே வாழ்கின்ற மீனவர்கள் தொடர்ச்சியாகவே துன்பத்தையே தமது வாழ்க்கையாக வாழ்ந்து, பல சவால்கள் மத்தியிலே உயிர்களை தக்கவைத்துக்கொண்டிருக்கின்றனர்.

இந்த நிலைமைக்கு நாங்கள் தள்ளப்பட்டமைக்கு முக்கியமான காரணம் போராக இருந்தாலும், அடுத்ததாக இங்கே பூதாகரமாக புரையோடிக் கிடக்கின்ற இந்த இந்திய இழுவை படகினுடைய அத்துமீறிய வருகையும், அவர்களுடைய அடாவடித்தனமான சட்டவிரோதமான தொழில்முறையுமே காரணமாக இருக்கின்றது.

இதன் மூலமாக அவர்கள் எங்களுடைய கடல் வளங்களை அழித்துச் செல்கின்றார்கள். வாழ்வாதாரத்தை சூறையாடி செல்கின்றார்கள். கடற்தொழில் உபகரணங்களை அடுத்து நாசமாக்கி விட்டு செல்கின்றார்கள்-என்றார். (அ)

# பாராளுமன்ற அமர்வுகளில் பங்கேற்கப் போவதில்லை

## கெஹலிய ரம்புக்வெல அறிவிப்பு



கொழும்பு, மார்ச் 03

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, நாடாளுமன்றக் கூட்டங்களில் பங்கேற்கப் போவதில்லை என பாராளுமன்ற பொதுச் செயலாளருக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

மேலும், சுகவீனம் காரணமாக அவர் பாராளுமன்றக் கூட்டங்களில் பங்கேற்க மாட்டார் என்று குறித்த கடிததத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவரைப் பாராளுமன்ற கூட்டங்களில் பங்கேற்க வைப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

இதனிடையே, அவரது உடல்நிலை குறித்து விரிவான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு சிறைச்சாலை ஆணையாளருக்கு நீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தேநீர், உணவுப்பொதியின் விலை மீண்டும் அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 03

தேநீர் மற்றும் உணவுப்பொதி ஆகியவற்றின் விலைகள் மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதன்படி நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் பால் தேநீர் தேநீர் மற்றும் பிரைய்ட் ரைஸ், கொத்துரொட்டி ஆகியவற்றின் விலைகள் அதிகரிக்கப்படவுள்ளதாக அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பால் தேநீரின் விலை 10 ரூபாவினால் அதிகரிக்கப்படவுள்ளதுடன் தேநீரின் விலை 5 ரூபாவினாலும் உணவுப்பொதி ஒன்றின் விலை 25 ரூபாவினாலும் அதிகரிக்கப்படவுள்ளது.

அத்துடன் ப்ரைய்ட் ரைஸ் மற்றும் கொத்துரொட்டி ஆகியவற்றின் விலைகள் 50 ரூபாவினாலும் அதிகரிக்கப்படவுள்ளன.

உணவுப்பொருட்களின் உற்பத்தி செலவு அதிகரிப்பு காரணமாக விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டதாக அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# அளம்பிலில் மோ.சைக்கிள் விபத்தில் ஒருவர் மரணம்!

முல்லைத்தீவு, மார்ச் 03

முல்லைத்தீவு - அளம்பில் பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் எதிர் எதிரே மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

நேற்று முன் தினம் இரவு 7 மணியளவில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

குமுழமுனை பகுதியிலிருந்து அளம்பில் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் செம்மலையிலிருந்து தண்ணிமுறிப்பு வயல் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் அளம்பில் சந்திக்கு அருகே சென்று கொண்டிருந்தபோது எதிர் எதிரே மோதி விபத்துக்குள்ளாகின.

இவ்விபத்தில் இரு மோட்டார் சைக்கிளில் பயணித்த மூவரும் காயமடைந்த நிலையில் முல்லைத்தீவு வைத்தியசாலை விபத்து பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்திருந்தனர்.

மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த செம்மலையை சேர்ந்த நாகராசா யோகராசா (வயது 54) என்பவர் நேற்று அதிகாலை மரணமடைந்துள்ளார்.

விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# நாமலை களமிறக்குவது குறித்து பெரமுன இன்னும் முடிவில்லை!

கொழும்பு, மார்ச் 03

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்குவது தொடர்பில் கட்சி இன்னும் எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை என்று பொதுஜன பெரமுன கட்சியின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினரான காமினி லொக்குகே தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு,

ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவது குறித்து கட்சி இன்னும் முடிவெடுக்கவில்லை. அதேபோல நாமல் ராஜபக்ஷவை வேட்பாளராக போட்டியிட வைப்பது பற்றியும் தீர்மானம் எடுக்கப்படவில்லை. எனினும், நாமல் ராஜபக்ஷவின் பங்களிப்புடன் கட்சியை கட்டியெழுப்பும் பணி இடம்பெறுகின்றது.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் கட்சி மட்டத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றுவருகின்றது. எனவே, உரிய நேரத்தில் முடிவெடுக்கப்படும். அதேவேளை, சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையின்போது அவரை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (அ)

# முட்டை விலையை நிர்ணயிக்க அரசாங்கத்திடம் திட்டமில்லை

கொழும்பு, மார்ச் 03

முட்டைக்கான நிர்ணய விலையை கொண்டுவருவதில் அரசாங்கம் தடுமாறிவருவதாக மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

ஏற்கனவே மக்கள் பொருளாதார பாதிப்புக் காரணமாக கஸ்டங்களை அனுபவித்துவரும் நிலையில் முட்டை விலையும் மேலும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றது.

நிறைஉணவுப் பொருளாக காணப்படும் முட்டையினை சிறுவர்கள், மாணவர்கள், முதியவர்கள். கர்ப்பிணிகள், நோயாளிகள் என வழங்க வேண்டிய நிலையில் உள்ள போதிலும் விலை ஏற்றம் காரணமாக போதுமான அளவில் வழங்க முடியாதுள்ளது.

இந்நிலையில், முட்டைகளுக்கான அதிகபட்ச சில்லறை விலையை எதிர்வரும் வாரத்தில் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையகத்துக்கு முன்னிலைப்படுத்தவுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

முட்டையொன்றின் உற்பத்தி விலை 30 ரூபாவாக காணப்படும் நிலையில் முட்டை உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தக மாபியா பொதுமக்களிடமிருந்து சுரண்டுவதை கட்டுப்படுத்தும் வகையில் முட்டைக்கான அதிகபட்ச சில்லறை விலையை வழங்குமாறு விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் துறை கோரிக்கை விடுத்திருந்தது.

அதன்படி, முட்டையொன்றின் அதிகபட்ச சில்லறை விலையை முன்வைக்குமாறு அமைச்சர் மஹிந்த அமரவீர விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் துறையின் தலைவர் ஹேமாலி கொதலாவலவுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். (அ)

# அரசியல் கருத்தாய்வு நிகழ்வு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 03

தந்தை செல்வா கலையரங்கில் இன்று ஞாயிற்றுக் கிழமை நடைபெறவிருந்த அரசியல் கருத்தாய்வு நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் முறைப்பாட்டுக்கான - வடக்கு கிழக்கு மகாண சிவில் சமூக குழுவினால், ஒழுங்கு செய்யப்பட்ட கருத்தரங்கு நிகழ்வு அமரத்துமடைந்த சாந்தன் அவர்களது இறுதிக் கிரியைகளை கருத்தில் கொண்டு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக சிவில் சமூக குழு அறிவித்திருக்கின்றது.

ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்வது தொடர்பான இந்தக் கருத்தாய்வு நிகழ்வு இன்று யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கத்தில் மாலை 4 மணிக்கு நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (அ)

# பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பில் ஐ.நா. அவதானம்

ஜெனிவா, மார்ச் 03

இலங்கையின் பொலிஸ் மா அதிபராக தேசபந்து தென்னக்கோன் நியமிக்கப்பட்டமை தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை கவனம் செலுத்தியுள்ளது.

55 ஆவது மனித உரிமைகள் அமர்வில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் ரூர்க் இந்த நியமனம் தொடர்பில் கருத்துக்களை முன்வைத்துள்ளார்.

இதன்படி, 2010 ஆம் ஆண்டு நபரொருவர் சித்திரவதை செய்யப்பட்டதாக உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் பின்னரே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக அவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கையின் பாதுகாப்பு துறையில் வலுவான மறுசீரமைப்பு அவசியம் எனவும் வோல்கர் ரூர்க் வலியுறுத்தியுள்ளார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.03.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கொலையாளித் திமிங்கலங்கள்

சிதம்பரம் இரவிச்சந்திரன்

சிரிக்க வைத்தும் சந்தோஷப்படுத்தியும் காண்பவர்களின் மனம் கவர்பவை கொலையாளித் திமிங்கலங்கள். இவை ஓர்க்கா (**Orca**) என்றும் அழைக்கப்படுகின்றன. 21ம் நூற்றாண்டு முதலே காட்சிப் பொருட்களாகவும், மற்ற அவசியங்களுக்காகவும் மனிதன் இவற்றை அதிகம் பயன்படுத்தத் தொடங்கினான்.

1970களில் உலகெங்கும் பெரும் எண்ணிக்கையில் இவை வேட்டையாடப்பட்டன. பிடிக்கப்பட்டவற்றில் பல திமிங்கலங்கள் காட்சிப்பொருளாக செயற்கை நீர்நிலைகளில் விடப்பட்டன. இவை அதிபுத்திசாலிகள் என்பதால் இவற்றை பயிற்சி கொடுத்து காட்சிப்படுத்துவது எளிது.




**கிஸ்காவில் இருந்து ஆரம்பம்**

கிஸ்கா என்ற புகழ்பெற்ற கொலையாளித் திமிங்கலம் விடுவிக்கப்படுவதற்கு முன்பே மரணமடைந்தது. லலீடா ஊடகங்களில் பரபரப்பை ஏற்படுத்திய திமிங்கலங்களில் ஒன்று. அக்டோபர் 1979ல் அட்லாண்டிக் கடற்பகுதியில் ஐஸ்லாந்திற்கு அருகில் கிஸ்கா (**Kiska**) என்ற பெண் திமிங்கலம் அதன் மூன்றாவது வயதில் பிடிக்கப்பட்டது. உலகில் தனிமையில் வாடிய முதல் திமிங்கலம் என்று வர்ணிக்கப்படும் இது, கனடா நயாகரா நீர்வீழ்ச்சி பகுதியில் இருக்கும் மெரைன் லேண்ட் (**Marine land**) என்ற கடல்வாழ் உயிரினங்களின் காட்சி சாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. நாற்பது ஆண்டுகளுக்கும் மேல் அங்கு இது தனிமையில் வாழ்ந்தது. அப்போது அடைக்கப்பட்ட கண்ணாடிக் கூண்டில் இடித்து தன்னைத்தானே காயப்படுத்திக் கொண்ட இதன் படங்கள் உலகம் முழுவதும் உள்ள சூழல் ஆர்வலர்களின் கவனத்தைக் கவர்ந்தது. இது மார்ச் 9, 2023ல் பாக்டீரியா தொற்றினால் மரணமடைந்தது. லலீடா (**Lolita**) என்ற பெண் திமிங்கலம் உலகில் ஐம்பதாண்டுகளுக்கும் மேல் பிடிக்கப்பட்டநிலையில் வாழும் திமிங்கலம் என்று அழைக்கப்படுகிறது. இது 1970ல் பசுபிக் கடலில் ப்யூகிட் சவுண்ட் (**Puget Sound**) என்ற இடத்திற்கு அருகில் பிடிக்கப்பட்டது. 57 வயதான இதை விடுதலை செய்வது பற்றிய செய்திகள் சமீபத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது. இது 52 ஆண்டுகள் ப்ளோரிடா கடல் காட்சிக்கூடத்தில் காட்சிப் பொருளாக வாழ்கிறது. இதன் ஆரோக்கியம் பற்றி கடும் விமர்சனங்கள் எழுந்ததால் இதை விடுதலை செய்ய காட்சிக்கூட நிர்வாகிகள் முடிவு செய்தனர். பயிற்சி கொடுத்து பராமரிக்கப்படும் உலகின் மிக வயதான கொலையாளித் திமிங்கலம் இதுவே. விடுவிக்கப்பட்டு 24 மணி நேரத்திற்கு இதன் உடல் நலத்தைக் கண்காணிக்க வாஷிங்டனுக்கும் கனடாவிற்கும் இடையில் இருக்கும் ஒரு கடல் சரணாலயத்தில் தங்க வைக்க திட்டமிடப்பட்டது. 1966ல் பிறந்த லலீடா ஆண்டுக்கணக்கில் காட்சிக் கூடத்தில் ஊழியர்கள் கொடுக்கும் உணவை மட்டுமே உண்டு வாழ்ந்தது. இதனால் சரணாலயத்தில் வைத்து திமிங்கல நிபுணர்களால் இதற்கு இரை பிடிக்கக் கற்றுத் தரப்பட்டது. புதிய சூழ்நிலையில் தன்னை இது தகவமைத்துக் கொள்ளும்வரை இதன் நடவடிக்கைகளை நிபுணர்கள் கண்காணிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

லலீடாவின் தாய் என்று கருதப்படும் ஓஷன் சன் (**Ocean sun**) என்ற 90 வயதிற்கும் மேலான திமிங்கலம் தன் கூட்டத்துடன் இப்போதும் கடலில் சுதந்திரமாக வாழ்கிறது என்று நம்பப்படுகிறது. விடுதலை செய்யப்பட்ட லலிடா தாயைச் சந்திக்கும் முன்பே உடல் நலக் குறைவினால் மரணமடைந்தது.

ஜானி டெப் (**Johnny Depp**), லின்சி லோஹன் (**Lindsay Lohan**), ஹாரிசன் ஃபோர்டு (**Harrison Ford**), எல்ட்டன் ஜான் (**Elton John**), ஜூலியா லெவி (**Julia-Levy**) போன்ற பல பிரபல ஹாலிவுட் நட்சத்திரங்கள் இத்திமிங்கலத்தின் விடுதலைக்காக எர்த் லேண்ட் என்ற அமைப்புடன் இணைந்து போராடினர். ஆனால் சுயநலம் மிக்க சிலரின் மனிதத் தன்மையற்ற செயல்களால் இது போல கைதியாக்கப்படும் பல திமிங்கலங்களும் மனிதச் சிறையில் இருந்து விடுவிக்கப்படுவதற்கு முன்பே உயிரை விடுகின்றன.

கொலையாளித் திமிங்கலங்கள் என்று அழைக்கப்பட்டாலும் உண்மையில் இவை டால்பின் இனத்தைச் சேர்ந்த உயிரினங்கள். சிறிய கூட்டங்களாக வாழ்கின்றன. ஆண் திமிங்கலங்களின் உடல் எடை 9,800 கிலோ வரை இருக்கும். பெண் திமிங்கலங்களின் உடல் எடை ஆணை விடக் குறைவாக இருக்கும். கண்ணாடியைப் பார்த்து தங்களை அடையாளம் கண்டுபிடிக்கும் அபூர்வ ஆற்றல் உடைய ஒரு சில உயிரினங்களில் இவையும் ஒன்று.

கண்ணாடிக் கூண்டுகளில் அடைக்கப்பட்டு காட்சிப் பொருட்களாக வாழும் இவற்றின் விடுதலைக்காக சூழல் போராளிகள் நீண்ட காலம் போராடி வருகின்றனர். நூற்றாண்டுகளுக்கு முன்பு 1860களில் கூண்டில் அடைக்கப்பட்ட கடல்வாழ் உயிரினங்கள் காட்சிப்படுத்தப்படுவது தொடங்கியது. இந்த வகையில் இரண்டு பெலுகா (**beluga**) திமிங்கலங்களே முதலில் லாஃப்ரடோர் கடற்பகுதியில் இருந்து பிடிக்கப்பட்டு நியூயார்க் காட்சிக்கூடத்திற்கு கொண்டு செல்லப்பட்டன.

இவற்றை சர்க்கஸ் கம்பெனி முதலாளி டி டி பேர்னம் வாங்கினார். 1870களில் ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் ஏராளமான பெலுகா திமிங்கலங்கள், டால்பின்கள் போன்றவை சர்க்கஸ் காட்சிகளுக்காகப் பயன்படுத்தப்பட்டன. இவற்றில் சில மட்டுமே அதிக நாட்கள் உயிர் வாழ்ந்தன.

ஜூலை 1865ல் நியூயார்க்கிற்கு வந்த இரண்டு பெலுகா திமிங்கலங்கள் காட்சிக்கு நடுவில் இறந்தன. 1930களில் பயிற்றுவிக்கப்பட்ட டால்பின்கள் காட்சிப் பொருட்களாக புகழ் பெறத் தொடங்கின. அப்போது முதல் பாட்டில் மூக்கு (**bottle nose**) திமிங்கலங்கள் காட்சிப் பொருட்களாயின. கூண்டுகளில் அடைக்கப்படும் இவை சில சமயங்களில் தாக்குதல் குணத்தையும் வெளிப்படுத்துவது உண்டு.



கடல்நீர் மாசு, வேட்டைக்காரர்கள் போன்றவற்றில் இருந்து காட்சிக்கூடங்களில் செயற்கை நீர்நிலைகளில் இவை பாதுகாப்புடன் வாழ முடியும் என்றாலும், இது இவற்றிற்கு மனிதன் வழங்கும் தூக்குத் தண்டனையாகவே கருதப்படுகிறது. இன்று கோடிக்கணக்கில் பணம் ஈட்டித் தரும் ஒரு தொழிலாகவே இது போன்ற செயற்கை நீர்நிலைகளில் கடல்வாழ் உயிரினங்கள் காட்சிப்படுத்தப்படுவது நடக்கிறது.

**எதிர்ப்புக் குரல்கள்**

1970களின் பாதியுடன் கூண்டுகளில் அடைத்து இந்த உயிரினங்கள் காட்சிப்படுத்தப்படுவதை எதிர்த்து கடும் விமர்சனங்கள் எழுந்தன. தொடர்ந்து 1972ல் கடல்வாழ் பாலூட்டிகள் பாதுகாப்பு சட்டம் உருவாக்கப்பட்டது. வாஷிங்டன் கொலையாளித் திமிங்கலங்களைப் பிடிப்பதை தடை செய்த முதல் மாகாணமாக மாறியது. 1976ல் இது நடைமுறைக்கு வந்தது.

ஆனால் உலகளவில் இவற்றை சிறைப்படுத்தி செயற்கை நீர்நிலைகளில் காட்சிப்படுத்துவது இன்றும் பல நாடுகளில் தொடர்கிறது. 1940களில் கடல்வாழ் உயிரினங்கள் காட்சிப்படுத்தப்படுவது பிரபலமாக இருந்தது. இந்த உயிரினங்களின் வாழிடச் சூழலை செயற்கையாக உருவாக்குவது சுலபமானதில்லை என்று விமரிசகர்கள் கூறுகின்றனர். பிடிக்கப்பட்டு காட்சிப்படுத்தும்போது இவை எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பது பற்றிய ஓர் ஆய்வு சில உண்மைகளைக் கண்டுபிடித்துக் கூறியுள்ளது.

டால்பின் மற்றும் திமிங்கலங்கள் ஒவ்வொரு நாளும் 40 முதல் 100 மைல் வரை பயணம் செய்பவை. செயற்கையாக உருவாக்கப்படும் நீர்நிலைகளில் இதில் ஒரு சதவிகிதம் கூட பயணிக்கும் வசதி இவற்றிற்கு இருப்பதில்லை. மன இறுக்கம், அழுத்தம் போன்ற உளவியல் ரீதியான பிரச்சனைகளை இவை எதிர்கொள்கின்றன.

பாட்டில் மூக்கு டால்பின்கள் செயற்கை நீர்நிலைகளுக்கு எடுத்துச் செல்லப்படும்போது உயிரிழக்க 6 வீதம் அதிக வாய்ப்பு உள்ளது. பயிற்றுவிக்கப்பட்ட கொலையாளித் திமிங்கலங்கள் உலகெங்கும் பெருமளவில் உயிரிழக்கின்றன. தென்கிழக்கு ஆசிய நாடுகளில் 2015ல் 39 காட்சிக்கூடங்கள் இருந்தன. இவை 2019ல் 76 ஆக அதிகரித்துள்ளன.

இதுவரை உள்ள புள்ளிவிவரங்கள்படி உலகம் எங்கும் 174 காட்சிப்பொருட்களாக இருந்த கொலையாளித் திமிங்கலங்கள் மரணமடைந்துள்ளன. அமெரிக்காவில் இருக்கும் கடல் உலகம் (**Sea World**) காட்சிக்கூடத்தில் மட்டும் பயிற்சி பெற்ற 18 கொலையாளித் திமிங்கலங்கள் சிறைபட்டு வாழ்கின்றன.

கொலையாளித் திமிங்கலங்கள் என்று அழைக்கப்பட்டாலும் இவை இதுவரை மனிதர்களைத் தாக்கியதாக செய்திகள் இல்லை. பிரம்மாண்டமான கிரேட் வொயிட் சுறாக்களை உணவாக உட்கொள்ளும் ஒரே ஒரு உயிரின வகை இவை. இவை நீலத் திமிங்கலங்களை தாக்குவதுண்டு. 14 கொலையாளித் திமிங்கலங்கள் கூட்டமாக சேர்ந்து நீலத் திமிங்கலத்தைத் தாக்கிய செய்திகள் உண்டு.

பெங்குவின்கள், சீல்கள், மற்ற திமிங்கலங்களை உணவாக இவை உட்கொள்கின்றன. சமூக விலங்குகளான இவை கூட்டமாகச் சேர்ந்தே எதிரியைத் தாக்குகின்றன. இவை பெரிய திமிங்கலங்களை வேட்டையாடுவதால் கொலையாளித் திமிங்கலங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவை டால்பின் குடும்பத்தில் பிரம்மாண்ட உடல் அமைப்பு உடையவை. உடலின் நிறம் கறுப்பும் வெள்ளையும் கலந்து காணப்படும். கருவுற்று 17 மாதங்களுக்குப் பிறகே இவை பிரசவிக்கின்றன. ஒரு பிரசவத்தில் ஒரு குட்டியை ஈனுகின்றன.

இரண்டு ஆண்டுகள் வரை குட்டிகள் தாய் தந்தை பராமரிப்பில் வாழ்கின்றன. கடலில் 100 முதல் 500 அடி ஆழம் வரை நீந்தும் திறன் பெற்றவை. ஆனால் கூண்டில் அடைக்கப்பட்ட இவற்றிற்கு இத்தகைய சுதந்திரம் இல்லை. இவற்றின் நீளம் 23 முதல் 32 அடி வரை இருக்கும். சராசரி ஆயுட்காலம் 50 முதல் 80 ஆண்டுகள்.

பல திரைப்படங்களில் இவை முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளன. 2013ல் வெளிவந்த ப்ளாக் ஃபிஷ் (**Black fish**) என்ற திரைப்படம் ஆர்லாண்டோ கடல் உலகம் (**Sea World**) காட்சிக்கூடத்தில் இரண்டு பயிற்சியாளர்களைக் கொன்ற 36 வயதில் மரணம் அடைந்த உலகின் மிகப் புகழ்பெற்ற திமிங்கலம் என்று வர்ணிக்கப்படும் டிலிகம் (**Tilikum**) என்ற கொலையாளித் திமிங்கலத்தின் கதையைச் சொல்கிறது. 1993ல் வெளிவந்த ஃப்ரீ வில்லி (**Free villy**) என்ற திரைப்படம் கேக்கோ (**Keiko**) என்ற திமிங்கலத்தின் கதையைச் சொல்கிறது. ஒன்பது வயது சிறுவன் ஒருவன் கொலையாளித் திமிங்கலத்தின் மீது காட்டும் பாசத்தால் அதை தப்பிக்க வைப்பது பற்றிய கதை இது. 1993ல் இந்தத் திரைப்படம் வெளிவந்தது.

கிரேட் வொயிட் சுறாக்களை கதாநாயகர்களாக கொண்டு ஸ்டீபன்ஸ் ஸ்பில்பெர்க் போன்றோர் எடுத்த மூன்று திரைப்படங்களின் தொடரான "ஜாஸ்". உலகம் எங்கும் பிரபலமாக திரையிடப்பட்ட சூப்பர் ஹிட் திரைப்படங்கள். இவை சமூக விலங்குகள் என்பதால் கூட்டத்தை விட்டுப் பிரிந்தால் தனிமையை அனுபவிக்க நேரிடுகிறது.



சர்வதேச இயற்கை வளப் பாதுகாப்பு சங்கத்தின் (**IUCN**) வகைப்பாட்டின்படி இவை அதிக ஆபத்தை எதிர்கொள்ளாத உயிரினங்களின் (**Least concerned LC**) பட்டியலில் உள்ளன. ஆண் திமிங்கலங்கள் 10 மீட்டர் வரை நீளம் உடையவை. பெண் திமிங்கலங்களின் நீளம் 8.5 மீட்டர். கிரீன்லாந்து போன்ற நாடுகளில் இவை இப்போதும் வேட்டையாடப்படுகின்றன.

**அச்சுறுத்தல்கள்**

உலகம் முழுவதும் இப்போது 50,000 கொலையாளித் திமிங்கலங்கள் உள்ளன என்று கருதப்படுகிறது. மீன் பிடி வலைகளில் சிக்கிக் கொள்வது, உணவுப் பற்றாக்குறை, கடல் மாசு, மிதமிஞ்சிய கப்பல் போக்குவரத்து போன்றவை இவை இன்று சந்திக்கும் முக்கிய வாழ்வாதாரப் பிரச்சனைகளில் சில.

இயற்கை சமநிலையை காக்க உதவும் இந்த அதிசய உயிரினங்கள் அழிந்தால் கடல் சூழலில் பெரும் பாதிப்புகள் ஏற்படும். நாளை அது மனித நலத்திற்கே ஆபத்தாக முடியும் என்று அஞ்சப்படுகிறது.